வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959
Reg. No. : P. 1632
விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu

Email : news@eelanadu.lk
மலர் : 04
02.04.2023 ஞாயிற்றுக்கிழமை
இதழ் : 115
பக்கங்கள் : 20






07 எம். ஜி. ஆர். தொப்பியை வென்ற ஈ. பி. எஸ்.!



08 ராகுலின் அரசியல் எதிர்காலம் குறித்து கேள்விகளை எழுப்பும் நீதிமன்ற தீர்ப்பு



09 தமிழ்த் தேசிய தலைமைகள் எங்கே என்று இந்தியா கேட்டால்



11 ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மாணவர் கல்விக்கு வரமா? சாபமா?

# சிவலிங்கம் பிரதிஷ்டை செய்ய வெடுக்குநாறிமலையில் தடை!

## தொல்பொருள் திணைக்களம் பலப் பிரயோகம்

### மூவர் கைதாகி விடுவிப்பு; டிராக்டரும் பறிமுதல்

வவுனியா, ஏப். 02

வவுனியா - நெடுங்கேணி - வெடுக்குநாறிமலையில் பெயர்த்தும் - உடைத்தும் எறியப்பட்ட விக்கிரகங்களுக்கு பதிலாக இன்று அதிகாலை 1 முதல் 4 மணி வரையான நேரத்துக்குள் சிவலிங்கம் உள்ளிட்ட விக்கிரகங்கள் பிரதிஷ்டை செய்யப்பட விருந்தன. ஆனால், விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்ய தொல்பொருள் திணைக்களம் தடை ஏற்படுத்தியுள்ளது. 19

## மகிந்தவின் தொலைபேசி அழைப்பை தவிர்த்த காஞ்சன!



கொழும்பு, ஏப். 02

முன்னாள் ஜனாதிபதியும் பிரதமருமான மகிந்த ராஜபக்ஷவின் தொலைபேசி அழைப்புக்கு பதிலளிக்காது எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தவிர்த்துள்ளார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

பணிப்புறக்கணிப்பில் ஈடுபட்டிருந்த பெற்றோலிய கூட்டுத்தாபன தொழில்சங்கங்களை 19

## ஏப். 10இற்கு முன் நிதி தந்தால் 25இற்கு முன் தபால்மூல தேர்தல்

### தேர்தல் ஆணைக்குழு அறிவிப்பு

கொழும்பு, ஏப். 02

உள்ளூராட்சி சபைத் தேர்தலுக்கான தபால் மூல வாக்களிப்புக்குத் தேவையான நிதி ஏப்ரல் 10 ஆம் திகதிக்கு முன் விடுவிக்கப்பட்டால், ஏப்ரல் 25 ஆம் திகதிக்கு முன்னர் தபால் மூல வாக்களிப்பு நடத்தப்படும் என்று தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தபால் மூல வாக்களிப்பு நடைபெறுவதற்கு ஏப்ரல் 10 19

## விக்கிரகங்கள் பிரதிஷ்டை அவசரம் காட்டியது ஏன்?

வவுனியா, ஏப். 01

வெடுக்குநாறி மலையில் உடைக்கப்பட்ட விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வதற்கு ஆலய தரப்பினர் அவசரம் காட்டியது ஏன் என்ற கேள்வியை அப்பகுதியினர் எழுப்பியுள்ளனர்.

வெடுக்குநாறி மலையில் உடைக்கப்பட்ட சிவலிங்கம் உள்ளிட்ட விக்கிரகங்களை மீளப் பிரதிஷ்டை செய்ய அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான் ஆகியோர் உறுதியளித்தனர். இந்நிலையில், அமைச்சர் ஜீவன் தொண்டமான் இன்று ஞாயிற்றுக்கிழமை அப்பகுதிக்கு 19

## சட்டம் ஒழுங்கு சீர்குலைய ஒருபோதுமே இடமளியேன்!

### ஜனாதிபதி ரணில் திட்டவட்டம்



கொழும்பு, ஏப். 02

தான் ஜனாதிபதியாக இருக்கும் காலத்தில் சட்டம் ஒழுங்கை மீற எவருக்கும் இடமளிக்கப் போவதில்லை என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். 19

'நான் இன்னும் உயிருடன் இருக்கிறேன்'

## வைத்தியசாலையிலிருந்து வெளியேறிய பாப்பரசர்



ரோம், ஏப். 02

சுவாசப் பிரச்னை காரணமாக மூன்று நாட்கள் ரோமில் உள்ள வைத்திய சாலையில் தங்கியிருந்து சிகிச்சை பெற்ற பாப்பரசர் பிரன்சிஸ் நேற்று அங்கிருந்து வெளியேறினார். 15

## ஐ. எம். எவ். கடனை கண்காணிக்கக் குழு

கொழும்பு, ஏப். 02

சர்வதேச நாணய நிதியத்திடமிருந்து பெற்றுக் கொள்ளப்பட்ட கடன், பயன்படுத்தப்படும் விதம் தொடர்பில் கண்காணிப்பதற்கு குழுவொன்றை நியமிக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திட்டமிட்டுள்ளார். 19

# வட, கிழக்கு முழுவதும் ஒரே நாளில் போராட்டம்!

### தமிழ்த் தேசியக் கட்சிகள் ஒருமித்து முடிவு

யாழ்ப்பாணம், ஏப். 02

அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட கலாசார அடிப்படையிலான இனப்படுகொலையை எதிர்த்து பெரும் எதிர்ப்பு போராட்டத்தை வடக்கு - கிழக்கின் 8 மாவட்டங்களிலும் ஒரேநாளில் முன்னெடுக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

தமிழ் தேசிய கூட்டமைப்பின் அழைப்பின் பேரில் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி அருகேயுள்ள தந்தை செல்வா நினைவு 19

## கறுப்புக் கொடிகளுக்கு தடை; வைத்தியசாலை வளாகத்தில்

கொழும்பு, ஏப். 02

வைத்தியசாலை வளாகத்தினுள் கறுப்புக் கொடி, பதாதைகள் காட்சிப்படுத்தப்படுவதற்கு தடை விதித்து சுகாதார அமைச்சின் செயலாளர் சுற்றறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளார்.

உயிருக்கு போராடும் நிலையிலுள்ள நோயாளிகள் கறுப்புக்கொடியை பார்ப்பதால் மன உளைச்சலுக்கு ஆளாகும் நிலை ஏற்படும் என சுகாதார அமைச்சின் செயலாளர் தனது சுற்றறிக்கையில் 19

## வடக்கு - கிழக்கில் எரிபொருள் விற்பனை உரிமம் ஐ. ஓ. சிக்கு!

கொழும்பு, ஏப். 02

வடக்கு - கிழக்கு மாகாணங்களில் எரிபொருள் விநியோகம் - விற்பனை உரிமையை முழுமையாக இந்திய நிறுவனமான லங்கா ஐ. ஓ. சி. நிறுவனத்திடம் வழங்கப்படவுள்ளதாக உயர்மட்டத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

நாட்டில் எரிபொருட்களை விற்பனை செய்வதற்கு சீனா, அவுஸ்திரேலியா, அமெரிக்க நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்படவுள்ளது 19

## புதிய பயங்கரவாதச் சட்டத்துக்கு தேசியவாத அமைப்புகள் எதிர்ப்பு!

கொழும்பு, ஏப். 02

"அரசால் முன்வைக்கப்பட்டுள்ள புதிய பயங்கரவாத தடைச்சட்ட மூலமானது, தற்போதுள்ள சட்டத்தைவிட 100 மடங்கு பயங்கரமானது. அதனை தோற்கடிக்க அனைவரும் ஒன்றிணைய வேண்டும்."

-இவ்வாறு கடும் போக்குடைய சிங்கள தேசியவாத அமைப்புகளின் கூட்டணியான 'தேசிய ஒருங்கமைப்பு ஒன்றியத்தின்' ஏற்பாட்டாளர் கலாநிதி குணதாச அமரசேகர தெரிவித்தார்.

கொழும்பில் 19

உண்மைகள் புனிதமானவை; கருத்துக்கள் சுதந்திரமானவை

# இப்படியும் நடக்கிறது...!

தந்தை செல்வநாயகம் ஒரு கிறிஸ்தவர். இன்றைய நாட்களில் மத ரீதியான விடயங்கள் அதிகம் பேசப்படுவதால் அதனை தவிர்க்கலாம் என்று நினைத்தாலும் தந்தை செல்வாவின் நூற்றி இருபத்தைந்தாவது பிறந்த தினம் நேற்று முன்தினம் நினைவுகூரப்பட்டதால் அதனை கூறாமல் இருக்கவும் முடியவில்லை.

தந்தை செல்வா ஒரு கிறிஸ்தவர் என்றாலும், தான் மரணித்த பின்னர் தனது உடலை தகனம் செய்யவேண்டும் என்றே விரும்பினார்.

தன்னை தந்தை ஸ்தானத்தில் இருத்தி, தன்னை ஒரு தலைவனாக ஏற்றுக்கொண்ட தமிழர்களில் பெரும்பான்மையானவர்கள் சைவர்கள் என்பதால், அவர்களை மதிக்க தந்தை செல்வா நினைத்திருக்கலாம். அதனாலேயே அவர் அப்படி தனது பூதவுடலை தகனம் செய்ய விரும்பியிருக்கலாம்.

தந்தை செல்வா தமிழர் உரிமைக்காக - தமிழர்கள் ஒரு சமஷ்டி கட்டமைப்பை தீர்வாகப் பெற்று இந்த நாட்டில் சம உரிமையுடன் வாழவேண்டும் என்று விரும்பியவர்.

அதற்காகவே, தமிழ் காங்கிரஸ் கட்சியிலிருந்து ஜி. ஜி. பொன்னம்பலத்தின் கொள்கைகளில் விரக்தியடைந்து தனிக்கட்சி தொடங்கியவர்.

பின்னர், இந்த நாட்டில் தமிழர்கள் உரிமையுடன் வாழ வேண்டும் என்றால் தனிநாடு தான் தீர்வு என்று முடிவுக்கு வந்து காங்கிரஸுடன் இணைந்து தனது கடைசிக் காலத்தில் பயணிக்க விரும்பி அதனை செயல்படுத்துவதிலும் வெற்றி கண்டவர்.

தமிழ் மக்கள் தமது உரிமைகளைப் பெற்று இந்த நாட்டில் சம உரிமையுடன் வாழவேண்டும் என்றால் தமிழ் அரசியல் கட்சிகளிடையே ஒற்றுமை ஏற்படவேண்டும் என்று விரும்பியவர்.

அத்தகைய ஒருவரின் பிறந்த நாள் - அதுவும் நூற்றி இருபத்தி ஐந்தாவது பிறந்தநாள் நினைவுகூரப்பட்டபோது நடந்த சம்பவங்களை பார்க்கின்றபோது, இதைவிட தந்தையை அவமதித்தவர்கள் வேறு யாராகவும் இருக்க முடியாது என்றே எண்ணத் தோன்றியது.

தந்தை செல்வாவின் அரசியல் குழந்தை தமிழரசுக் கட்சி. அவரது கடைசிகாலத்தில் அது காங்கிரஸுடன் இணைந்து தமிழர் விடுதலைக் கூட்டணியாக மாறிவிட்டாலும் அந்தக் கட்சி உறங்கு நிலையில் வைக்கப்பட்டிருந்தது.

அது பின்னர் என்ன காரணத்திற்காக தூசு தட்டி வெளியே எடுக்கப்பட்டது என்பதை இங்கே விளக்கித்தான் எமது வாசகர்களுக்கு தெரியவேண்டும் என்பதல்லவே.

அதுபற்றி முன்னரும் பல தடவை இந்தப் பத்தியில் எழுதியாகிவிட்டது. போதாக்குறைக்கு தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் வி. ஆனந்தசங்கரியும் தனது ஒவ்வோர் அறிக்கையிலும் அதைப்பற்றித்தானே கதைத்துக் கொண்டிருக்கிறார்.

அந்த தமிழரசு கட்சியின் தற்போதைய நிலை பற்றியும் இங்கே எழுதித்தான் வாசகர்கள் விளங்கிக் கொள்ளவேண்டும் என்பதல்ல.

தந்தை செல்வாவின் பிறந்த நாள் விழா யாழ்ப்பாணத்தில் மாத்திரமல்ல, மட்டக்களப்பு, திருகோணமலை, அம்பாறையிலும் கொண்டாடப்பட்டது.

தந்தை செல்வாவும் தன்னைப் போலவே தேசியக் கட்சி ஒன்றில் அரசியல் செய்துவிட்டுத்தான் பின்னர் தமிழ்த் தேசிய அரசியலுக்கு வந்தார் என்று தந்தையின் வரலாற்றை சொல்லிய ஒருவர்தான் மட்டக்களப்பில் தந்தையை நினைவுகூர்ந்தார்.

அதாவது பரவாயில்லை.

ஆனால், யாழ்ப்பாணத்தில் தந்தை செல்வாவின் நினைவிடத்தில் தமிழர் விடுதலைக் கூட்டணி தனியாக சென்று அவருக்கு அஞ்சலி செலுத்தியது.

அதன் பின்னர் தமிழரசு தலைவர் மாவை சேனாதிராசா, யாழ். மாநகர முன்னாள் மேயர் ஆனல்ட்டுடன் சென்று அஞ்சலி செலுத்தினார்.

சில மணி நேரங்களில் தமிழரசு கட்சியின் சிரேஷ்ட உப தலைவரும், வடக்கு மாகாண சபையின் அவைத்தலைவருமான சீ. வீ. கே. சிவஞானம் ஐயா தலைமையில் தமிழரசு கட்சியின் யாழ். மாநகர சபை முதல்வர் வேட்பாளரும் மூத்த ஊடகவியலாளருமான என். வித்தியாதரன் மற்றும் வலி. மேற்கு பிரதேச சபையின் முன்னாள் தவிசாளர் சுகிர்தன் ஆகியோர் தனியாக சென்றும் அஞ்சலி செலுத்தினர்.

தமிழரசுக் கட்சி பல்வேறு கோஷ்டிகளாக இப்போது செயல்பட்டுவருவது ஒன்றும் இரகசியமானதல்ல. ஆனால், அந்த கட்சியில் இப்போது எத்தனை கோஷ்டிகள் செயல்படுகின்றன என்பதுதான் இதுவரை சரியாகத் தெரியவரவில்லை.

அடுத்த பொதுச் சபைக் கூட்டத்தில் புதிய தலைவரைத் தெரிவுசெய்வதற்காக ஒரு தேர்தல் நடந்தால், அதில் இருவர் போட்டியிடுவார்கள் என்பது இதுவரை வெளிச்சமாகியிருக்கின்றது.

ஒருவர் சுமந்திரன், மற்றையவர் சிறீதரன். மாவை மீண்டும் தலைவர் பதவிக்கு போட்டியிட மாட்டார் என்று நம்பப்படுவதால் அவர் இருவரில் ஒருவரையே ஆதரிக்கவேண்டும். அப்படியெனில், அவர் சிறீதரனையே ஆதரிப்பார் என்றே உள்ளக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அப்படியெனில், சீ. வீ. கே., வித்தி ஆகியோர் எந்த அணியில் இருக்கின்றனர் என்பதைக் கண்டறிய அதிகம் ஆராய்ச்சி செய்யவேண்டியதில்லையே.

அவர்கள் தனி அணியெனில் தலைமைப் பதவிக்கு மும்முனைப் போட்டியோ தெரியவில்லை.!

**- ஊர்க்குருவி.**

## சொற்பொழிவு

யாழ்பாணம், ஏப். 01

நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திர சேகரப் பிள்ளையார் கோவில் வருடாந்த பெருந்திருவிழாவில் சிறப்பு சொற்பொழிவு நடைபெற்று வருகின்றது.

சிவநெறிப் பிரகாசர் சமய ஜோதி கதிர்காமன் நிஜலிங்கத்தின் ஒழுங்கமைப்பில் நடைபெறும் இந்த சிறப்புச் சொற்பொழிவில் இன்று ஞாயிற்றுக்கிழமை இரவு 8 மணிக்கு இளம்சைவப்புலவர் ச. நவநீதன் "விநாயகர் வழிபாட்டில் அறுகம்புல்" என்ற தலைப்பில் ஆற்றுவார்.

சொற்பொழிவின் நிறைவில் மாணவர்களிடம் வினாக்கள் கேட்கப்பட்டு பரிசுகளும் வழங்கப்படவுள்ளன.

## விளையாட்டு விழா

வடமராட்சி, ஏப். 02

புலோலி குரும்பைகள் முன்பள்ளி விளையாட்டு விழா இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணிக்கு முன்பள்ளி முகாமைத்துவக் குழுத் தலைவர் க. சறீகாந்தரூபன் தலைமையில் நடைபெறவுள்ளது.

இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக பருத்தித்துறை நகர சபையின் செயலாளர் திருமதி தாரணி கஜரூபன் கலந்துகொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக வடமராட்சி வலய ஆரம்பப் பிள்ளைப் பருவ உதவிக் கல்விப்பணி க. சத்தியசீலன் ஓய்வு நிலை ஆரம்ப பிள்ளைப்பருவ உதவிக் கல்விப் பணிப்பாளர் சி. தில்லைநாதன் வல்வெட்டித்துறை அ. மி. த. க. பாடசாலை அதிபர் செ. தேவகுமார் மட்டுவில் சாந்தநாயகி வித்தியாலய அதிபர் க. சந்திரபவான், சனசமூக நிலைய அபிவிருத்தி உத்தியோகத்தர் திருமதி யோ. பரமேஸ்வரி கிராம உத்தியோகத்தர் வ. சிவபரன் ஆகியோர் கலந்து கொள்வார்கள். (ஐ-02)

## இசைவிழா இன்றைய நிகழ்ச்சிகள்

யாழ்ப்பாணம், ஏப். 02

நல்லூர், சட்டநாதர் வீதியிலமைந்த நல்லூர் இளங்கலைஞர் மன்றத்தின் இசை விழா இன்றைய நிகழ்ச்சிகள்.

காலை 9.30 மணி தியாகராஜ சுவாமிகள் ஆராதனை

மாலை 5 மணி: புல்லாங்குழல் - சின்னராசா அனோஸ்ரீபன்

வயலின் - கு. சயந்தன்

மிருதங்கம் - சி. விஜிந்தன்

மாலை 5.20 மணி: பாட்டு - பொன் ஸ்ரீவாமதேவன்

வயலின் - கா. குகபரன்

மிருதங்கம் - அ. சண்முகப்பிரியன்

மோர்சிங் - நி. மோகனதர்சன்

மாலை 6.20 மணி: கலைப் போட்டி - 2023 வெற்றியாளர்களுக்கான பரிசில் வழங்கல்

மாலை 7 மணி: நடன அரங்கம் - யாழ். நர்த்தனஷேத்திரா.







நல்லூர் வடக்கு ஸ்ரீ சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் வருடாந்தப் பெருந்திருவிழா நேற்று சனிக்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பமானபோது...!

## 303ஆவது ஞானச்சுடர் இதழ் வெளியிடப்பட்டது

வடமராட்சி ஏப். 01

தொண்டைமானாறு சந்நிதியான் ஆச்சிரமத்தின் ஞானச்சுடர் 303ஆவது இதழ் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்றது.

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவையால் பங்குனி மாதத்துக்கான ஞானச்சுடர் இதழே சந்நிதியான் ஆச்சிரமத்தில் வைத்து வெளியிடப்பட்டது.

சஞ்சிகை மதிப்பீட்டு உரையை ஆசிரியர் நி.பாபுதரனும் வெளியீட்டுரையை இளைப்பாறிய அதிபர் திவ. கணேசமூர்த்தியும் நிகழ்த்தினர்.

இதில் சந்நிதியான் ஆச்சிரம சைவ கலை பண்பாட்டுப் பேரவை நிர்வாகிகள், உறுப்பினர்கள், பக்தர்கள் அடியார்கள் என பலரும் கலந்து கொண்டனர். மேலும், தெரிவு செய்யப்பட்ட மாணவர்களுக்கு கல்விக்கான உதவிகளும் வழங்கப்பட்டன. (ஐ-2)

## ஆசிரியர் கலாசாலையில் நாடக நூல் வெளியீட்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 02

கோப்பாய் ஆசிரியர் கலாசாலை நாடகத் துறை விரிவுரையாளர் சந்திரிகா தர்மரட்ணம் எழுதிய "கூடி வாழ்வோம்" என்ற நாடக நூலின் வெளியீட்டு விழா நாளை திங்கட்கிழமை பிற்பகல் 2 மணிக்கு கோப்பாய் ஆசிரியர் கலாசாலை ரதிலட்சுமி மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

கலாசாலை அதிபர் சந்திரமௌலீசன் லலீசன் தலைமையில் நடைபெறும் இந்தநிகழ்வில் பிரதம விருந்தினராக கலாசாலையின் முன்னாள் அதிபர் வீரகத்தி கருணலிங்கமும் சிறப்பு விருந்தினராக யாழ்ப்பாணம் தேசிய கல்வியியல் கல்லூரி விரிவுரையாளர் கை. திலகநாதனும் கலந்து கொள்வர்.

நூலின் வெளியீட்டுரையை கொழும்பு பல்கலைக்கழக விரிவுரையாளர் அ. பௌநந்தி வழங்குவார். நூல் நயப்புரையை யாழ். கல்வி வலய நாடகத்துறை ஆசிரிய ஆலோசகர் யோ. யோண்சன் ராஜ்குமார் ஆற்றுவார்.

நூலை கலாசாலை அதிபர் வெளியிட்டு வைக்க அதன் முதற்பிரதியை ஓய்வு நிலை விரிவுரையாளர் வ. சி. குணசீலன் பெற்றுக் கொள்வார். (ஐ)

# புதிய பயங்கரவாத சட்டத்தை ஒருபோதுமே ஏற்கமாட்டோம்!

## தமிழ் முற்போக்கு கூட்டணி போர்க்கொடி

கொழும்பு, ஏப். 02

**“உத்தேச புதிய பயங்கரவாத தடைச்சட்டமூலமானது ஜனாதிபதிக்கு கடுமையான - கொடுமையான அதிகாரங்களை வழங்கும் வகையில் அமைந்துள்ளது. இதனை ஒருபோதும் ஏற்க முடியாது.” என்று தமிழ் முற்போக்கு கூட்டணியின் தலைவரும், கொழும்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.**



புதிய பயங்கரவாத தடைச் சட்டமூலம் தொடர்பில் கருத்து வெளியிடுகையிலேயே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- நாட்டில் தற்போது அமுலில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தைவிடவும், புதிய சட்டத்தில் உள்ள ஏற்பாடுகள் பயங்கரமானவை. எனவேதான் அதனை பயங்கரவாத தடைச் சட்டம் என சொல்வதைவிட, அரச பயங்கரவாத தடைச்சட்டம் எனக்கூறுவது பொருத்தமாக இருக்கின்றது.

ஜனாதிபதிக்கு கடுமையான - கொடுமையான அதிகாரத்தைக் கொடுக்கின்றது. தொழிற்சங்கம் மற்றும் அரசியல் கட்சிகளை தடைசெய்யலாம். அது உறுப்பினர்களுக்கு பாதகமாக அமையும். மக்களுக்கு பிரச்சாரம் செய்யவும், ஒன்றுகூட முடியாத சூழ்நிலையும் உருவாகும்-என்றார்.

# எதிரணியை பலவீனப்படுத்தவே கட்சி தாவல் கதை கட்டவிழ்ப்பு!

## கூறுகின்றார் நளின் பண்டார

கொழும்பு, ஏப். 02

”ஐக்கிய மக்கள் சக்தி உறுப்பினர்கள், அரசுடன் இணைய மாட்டார்கள். எதிரணியை பலவீனப்படுத்தும் நோக்கிலேயே கட்சி தாவல் கதை கட்டவிழ்த்து விடப்பட்டுள்ளது.” - என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.



எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு கூறினார்.

ஐக்கிய மக்கள் சக்தி உட்பட எதிரணியில் உள்ள 22 பாராளுமன்ற உறுப்பினர்கள் அரசுடன் இணையவுள்ளனர் என தகவல் வெளியாகியுள்ள நிலையிலேயே, அவற்றை நிராகரிக்கும் வகையில் ஐக்கிய மக்கள் சக்தி மேற்கண்டவாறு அறிவிப்பு விடுத்துள்ளது.

(அ)

# புதிய பயங்கரவாத தடை சட்டமூலம் ஏப்ரல் மூன்றாம் வாரத்தில் சபைக்கு



கொழும்பு, ஏப். 02

புதிய பயங்கரவாத தடைச் சட்டமூலமானது ஏப்ரல் மூன்றாம் வாரத்தில் பாராளுமன்றத்தில் முன்வைக்கப்படும் என்று பிரதமர் தினேஷ் குணவர்தன தெரிவித்தார்.

கண்டிக்கு சென்றிருந்த பிரதமர் தலதாமாளிகையில் வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னர் ஊடகங்களிடம் கருத்து வெளியிடுகையிலேயே இந்த தகவலை வெளியிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்- புதிய பயங்கரவாத தடைச் சட்டமூலம் தொடர்பில் விமர்சனங்கள் எழுந்துள்ளன. பாராளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் வெகுஜன அமைப்புகளின் உறுப்பினர்கள் ஆகியோருடன் கலந்துரையாடிய பின்னரே சட்டம் நிறைவேற்றப்படும்.

ஏப்ரல் 4 ஆம் திகதிக்கு பிறகு ஏப்ரல் 3ஆவது வாரத்தில்தான் பாராளுமன்றம் கூடும். இதன்போது மேற்படி சட்டமூலம் பாராளுமன்ற ஒழுங்கு புத்தகத்தில் உள்ளடக்கப்படும்-என்றார்.

# இனப்பிரச்னைக்கு தீர்வு அவசியமானது

## ஸ்பெயின் அதிகாரியிடம் கூறிய சஜித்

கொழும்பு, ஏப். 02

இலங்கையில் இன, மத ரீதியில் எழுந்துள்ள அனைத்துப் பிரச்னைகளுக்கும் தீர்வு காணப்படவேண்டும். அப்போதுதான் நாடு முன்னேற்றப் பாதையில் பயணிக்க முடியும். தீர்வு இல்லையேல் நாட்டுக்கு முன்னேற்றம் கிடையாது என எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.

இலங்கையில் உள்ள ஸ்பெயின் தூதரகத்தின் அரசியல் விவகாரப் பிரிவின் தலைவர் அல்போன்சோ ஹெரெரோ கோரலுக்கும் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவுக்கும் இடையிலான சந்திப்பு நேற்று முன் தினம் கொழும்பிலுள்ள எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் இடம்பெற்றது.

இரு தரப்பு ரீதியிலான முக்கிய விவகாரங்கள் குறித்து இங்கு நீண்ட நேரம் கலந்துரையாடப்பட்டது.



இதன்போதே எதிர்க்கட்சித் தலைவர் மேற்படி விடயத்தைத் தெரிவித்தார்.

சஜித்தின் கருத்தை வரவேற்ற ஸ்பெயின் தூதரகத்தின் அரசியல் விவகாரப் பிரிவின் தலைவர், பிரச்னைகளுக்கு விரைந்து தீர்வு காணப்பட வேண்டும் என்று வலியுறுத்தினார். (அ)

# சுற்றுலாப் பயணிகளின் வருகையினால் பெப்ரவரியில் 170 மில்லியன் டொலர்கள்



கொழும்பு, எப். 02

சுற்றுலாப் பயணிகளின் வருகையின் மூலம் இலங்கையின் வருமானம் பெப்ரவரி மாதத்தில் 170 மில்லியன் அமெரிக்க டொலர்களாக அதிகரித்துள்ளது

இலங்கை மத்திய வங்கியின் தரவுகளின்படி, பெப்ரவரி 2022 இல், சுற்றுலாப் பயணிகளின் வருகையின் மூலம் இலங்கைக்கு 169 மில்லியன் அமெரிக்க டொலர்கள் கிடைத்துள்ளன.

இந்த வருடத்தின் மூன்று மாதங்களிலும் 100,000க்கும் அதிகமான சுற்றுலாப்பயணிகளை இலங்கை வரவேற்றுள்ளது.

மேலும் ஜனவரி 2023 இல் 102,545 வருகைகள் மற்றும் 2022 பெப்ரவரியில் 96,507 பதிவு செய்யப்பட்ட சுற்றுலா பயணிகளின் வருகையுடன் ஒப்பிடுகையில், பெப்ரவரி 2023 இல் 107,639 ஆக அதிகரித்துள்ளது.

இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகார சபையினால் வெளியிடப்பட்டுள்ள சமீபத்திய புள்ளிவிவரங்களின்படி, மார்ச் மாதத்தில் ஏற்கனவே 100,000க்கும் அதிகமான சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர். (அ)

# சஜித் அணி எம்.பிக்கள் விரைவில் ஐ.தே.க. பக்கம்



கொழும்பு, ஏப். 02

“ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர்கள், ஐக்கிய தேசியக் கட்சியுடன் இணைவார்கள். இது தொடர்பில் என்னுடன் பேச்சு நடத்தி வருகின்றனர்.” - என்று ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலைவர் ருவான் விஜேவர்தன தெரிவித்தார்.

“கட்சி அரசியலுக்காக காலையில் ஜனாதிபதி ரணிலை விமர்சிப்போர், மாலையில் எம்முடன் பேச்சு நடத்துகின்றனர். நாம் இணைவதற்கு இதுவே சிறந்த தருணம் எனவும் கூறுகின்றனர். இதன்படி அவர்கள் விரைவில் இணைவார்கள் என எதிர்பார்க்கலாம்.

அன்று ரணில் ராஜபக்ஷ என விமர்சித்தவர்கள் இன்று ரணில் சேர் என விளிக்க ஆரம்பித்துள்ளனர்” எனவும் ருவான் விஜேவர்தன குறிப்பிட்டார்.

# புதிய பயங்கரவாத தடைச்சட்டத்தால் மனித உரிமைகள் மீறல் அதிகரிக்கும்!

## சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு எச்சரிக்கை

கொழும்பு, ஏப். 02

**அரசாங்கத்தினால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தற்போதுள்ள வடிவத்திலேயே நிறைவேற்றப்பட்டால், அது மனித உரிமை மீறல்கள் மேலும் அதிகரிப்பதற்கும், அச்சட்டம் தவறான முறையில் பிரயோகிக்கப்படுவதற்கும் வழிவகுக்கும் என்று சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு எச்சரித்துள்ளது.**

அந்த ஆணைக்குழு மேலும் தெரிவித்துள்ளதாவது:

தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்துக்கு பதிலாக பிறிதொரு சட்டத்தை அறிமுகப்படுத்தும் நோக்கில் அரசாங்கம் கடந்த 22ஆம் திகதி பயங்கரவாத எதிர்ப்புச் சட்டமூலத்தை வர்த்தமானி அறிவித்தலில் வெளியிட்டது.

இருப்பினும், அதன் உள்ளடக்கம் பயங்கரவாத தடைச் சட்டத்தை விடவும் மோசமாக காணப்படுவதாக பல்வேறு தரப்பினரும் சுட்டிக்காட்டி வரும் நிலையில், இது குறித்து தமது நிலைப்பாட்டை தெளிவுபடுத்தி வெளியிட்டுள்ள அறிக்கையிலேயே சர்வதேச ஜூரர்கள் ஆணைக்குழு மேற்கண்டவாறு தெரிவித்துள்ளது.

இது பற்றி அந்த ஆணைக்குழு மேலும் கூறியிருப்பதாவது:

அரசாங்கத்தினால் புதிதாக முன்மொழியப்பட்டுள்ள பயங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தற்போதுள்ள வடிவத்திலேயே நிறைவேற்றப்பட்டால், அது மனித உரிமை மீறல்கள் மேலும் அதிகரிப்பதற்கும், அச்சட்டம் தவறான முறையில் பிரயோகிக்கப்படுவதற்கும் வழிவகுக்கும் என்று நாம் கரிசனை கொண்டிருக்கின்றோம்.

குறிப்பாக, இச்சட்டமூலம் நிறைவேற்றப்பட்டால் அதன் 4(1)(ஏ) சரத்தின் பிரகாரம், 'கொலைக்குற்றத்துக்கு' தண்டனையாக மரண தண்டனை அறிமுகப்படுத்தப்படும்.

இலங்கையை பொறுத்தமட்டில் கடந்த 1976ஆம் ஆண்டிலிருந்து மரண தண்டனையை நிறைவேற்றுவது இடைநிறுத்தப்பட்டுள்ளது. எது எவ்வாறெனினும், வாழ்வதற்கான உரிமைக்கு எதிரானதும், மனிதாபிமானமற்ற மிக மோசமான தண்டனையான மரண தண்டனையை நாம் முழுமையாக எதிர்க்கின்றோம்.

'பயங்கரவாத செயற்பாடுகளுடன்' எவ்வகையிலும் தொடர்புபடாதபோதிலும், ஏதேனுமொரு விதத்தில் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தலாக உள்ளது எனும் விடயத்தை மரண தண்டனையை நியாயப்படுத்துவதற்காக பயன்படுத்தக்கூடாது.

புதிதாக சமர்ப்பிக்கப்பட்டுள்ள இச்சட்டமூலத்தில் சில முன்னேற்றகரமான விடயங்கள் உள்ளடக்கப்பட்டிருப்பினும்கூட, இதில் உள்ள ஏனைய கரிசனைக்குரிய விடயங்கள் நேர்மறையான விடயங்களை வலுவிழக்கச் செய்கின்றன.

அதேபோன்று இப்புதிய சட்டமூலத்தில் 'பயங்கரவாதம்' என்ற சொல்லுக்கு மிகப் பரந்துபட்ட வரைவிலக்கணம் வழங்கப்பட்டுள்ள நிலையில், அதனூடாக அமைதியான முறையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள் அடக்கப்படக்கூடும் என்ற கரிசனை தோற்றம் பெற்றுள்ளது.

எனவே, திருத்தங்கள் எவையுமின்றி இச்சட்டமூலம் நிறைவேற்றப்படுமாயின், ஏற்கனவே நடைமுறையில் உள்ள பயங்கரவாத தடைச் சட்டத்தின் விளைவாக இடம்பெற்ற மீறல்கள் தொடர்ந்து நிகழ்வதற்கு வாய்ப்பேற்படும்.

எனவே, இவ்வாறானதொரு பின்னணியில் பயங்கரவாத தடைச் சட்டத்தை முழுமையாக இல்லாதொழிக்கும் அதேவேளை, அதனை விடவும் மோசமான சட்டமொன்றின் ஊடாக அச்சட்டத்தை பதிலீடு செய்வதற்கு மேற்கொள்ளப்படும் முயற்சிகளை இடைநிறுத்துமாறு இலங்கை அரசாங்கத்தை வலியுறுத்துகின்றோம்-என்றுள்ளது.

# நீதித்துறை-நிறைவேற்றதிகாரம் இடையே தேவையற்ற முரண்பாடு

## இது உடனடியாக தடுக்கவேண்டும் நீதி சேவைகள் சங்கம் கோரிக்கை

கொழும்பு, ஏப். 02

நீதித்துறைக்கும், நிறைவேற்று அதிகாரத்துக்கும் இடையில் தேவையற்ற முரண்பாடுகள் உருவாக்கப்படுவதை தடுக்க நீதி சேவைகள் ஆணைக்குழு நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று இலங்கை நீதி சேவைகள் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

1953 ஆம் ஆண்டு 21 ஆம் இலக்க பாராளுமன்ற சிறப்புரிமை சட்டத்தை துஷ்பிரயோகம் செய்து நீதித்துறைக்கும் நிறைவேற்று அதிகாரத்துக்கும் இடையில் தேவையற்ற மோதலை ஏற்படுத்தும் முயற்சிகள் இடம்பெறுவதாக மாவட்ட நீதிபதிகள் மற்றும் நீதவான்களை பிரதிநிதித்துவப்படுத்தும் நீதிச்சேவை சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இலங்கையின் அரசியலமைப்பில் குறிப்பிடப்பட்டுள்ள மக்களின் ஆணையைப் பாதுகாப்பதற்காக தாக்கல் செய்யப்பட்ட அடிப்படை உரிமைகள் விண்ணப்பம் தொடர்பாக இலங்கை உயர் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட இடைக்கால உத்தரவின் அடிப்படையில் நிறைவேற்று அதிகாரத்துக்கும் நீதித்துறைக்கும் இடையில் முறுகலை தோற்றுவிக்க முயற்சிக்கப்படுகிறது.

நிறைவேற்றுத்துறை பாராளுமன்றம் மற்றும் நீதித்துறை ஆகியவை ஜனநாயக அரசியல் அமைப்பின் மூன்று முக்கிய தூண்கள் என்றும் அவற்றுக்கிடையே சமநிலைகள் இருக்க வேண்டும் என்றும் இலங்கை நீதி சேவைகள் சங்கம் குறிப்பிட்டுள்ளது.

இந்தநிலையில் நீதிமன்றினால் வழங்கப்பட்ட உத்தரவு பாராளுமன்ற சிறப்புரிமைகளை மீறுவதாக தீர்மானம் எடுக்கப்பட்டால் அதன் அடிப்படையில் அந்த உத்தரவை வழங்கிய நீதிபதிகளை நாடாளுமன்ற சிறப்புரிமைக் குழுவிற்கு அழைப்பதற்கு தீர்மானிக்கப்பட்டால் அது சட்டத்தின் ஆட்சி மற்றும் நீதித்துறை சுதந்திரத்தின் அரிப்புக்கு வழிவகுக்கும்.

இறுதியில் அரச பொறிமுறையின் மொத்த வீழ்ச்சிக்கும் வழிவகுக்கும் என்று இலங்கை நீதிச் சேவை சங்கம் எச்சரித்துள்ளது. (அ)

# சி.ஐ.டி. விசாரணை கோருகிறார் காஞ்சன

கொழும்பு, ஏப். 02

கடந்த 28 ஆம் திகதி கொலன்னாவையில் உள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன முனையத்தில் எரிபொருள் விநியோகிக்கும் செயற்பாடுகளுக்கு இடையூறு விளைவித்தவர்களுக்கு எதிராக குற்றப்புலனாய்வு திணைக்களத்தினர் மூலம் விசாரணை நடத்துமாறு அமைச்சர் காஞ்சன விஜேசேகர பொலிஸ்மா அதிபரிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

கொலன்னாவையில் உள்ள பெற்றோலியக் கூட்டுத்தாபன முனையத்தில் உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்த சிலர் எரிபொருள் விநியோகிக்கும் பாதுகாப்பு வலயத்துக்குள் நுழைந்து ஊழியர்களை அச்சுறுத்தினர் என அமைச்சர் பொலிஸ்மா அதிபருக்கு அனுப்பியுள்ள கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இவர்களது செயற்பாடுகளால் எரிபொருள் விநியோகத்திற்கு இடையூறு ஏற்பட்டதுடன், எரிபொருள் வரிசைகளும் ஏற்பட்டதாக அமைச்சர் குறிப்பிட்டுள்ளார்.

இதனால் ஏற்பட்டுள்ள நட்டத்தை குறித்த நபர்களிடமிருந்தே அறவிடுவதற்கான நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டுள்ளதாகவும் அமைச்சர் சுட்டிக்காட்டியுள்ளார். (அ)

# நிலவும் வெப்பமான காலநிலை; நன்றாக தண்ணீர் அருந்துங்கள்

கொழும்பு, ஏப். 02

இந்த நாட்களில் அதிக வெப்பம் நிலவுவதால் சிறுவர்கள் முதல் பெரியவர்கள் வரை நன்கு தண்ணீர் அருந்துமாறு பொரளை மருத்துவ ஆராய்ச்சி நிறுவனத்தின் போஷாக்கு நிபுணர் டொக்டர் ரேணுகா ஜயதிஸ்ஸ வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மேலும் பாடசாலைக்கு செல்லும் குழந்தையின் வயதைப் பொறுத்து 4 முதல் 6 போத்தல் தண்ணீர் வரை குடிக்க வேண்டும் என்று அவர் கூறியுள்ளார்.

இதேவேளை, தொற்றா நோய்களிலிருந்து பாதுகாப்புப் பெற சுறுசுறுப்பான வாழ்வு மிகவும் அவசியம் என்று சுகாதார அமைச்சின் தொற்றா நோய்ப் பிரிவின் பணிப்பாளர், சமூக மருத்துவ நிபுணர் ஷெரின் பாலசிங்கம் தெரிவித்தார்.

ஏப்ரல் மாதம் உடல் ரீதியாக சுறுசுறுப்பு மிகுந்த மாதமாக பெயரிடப்பட்டுள்ளதாகவும், ஏப்ரல் மாதத்தில் உடல் சுறுசுறுப்பை அதிகரிக்க பல நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதாகவும் சமூக மருத்துவ நிபுணர் குறிப்பிட்டார். (அ)

# பால்மாவுக்கு திங்களே புதிய விலை!

கொழும்பு, ஏப். 02

இறக்குமதி செய்யப்படும் பால் மாவின் விலை நேற்று சனிக்கிழமை முதல் குறைக்கப்பட்டுள்ளது என பால் மா இறக்குமதியாளர்கள் சங்கம் தெரிவித்துள்ளது.

இதன்படி, நேற்று முதல் இறக்குமதி செய்யப்படும் ஒரு கிலோகிராம் பால் மாவின் விலை 200 ரூபாயினாலும் 400 கிராமின் விலை 80 ரூபாயினாலும் குறையும்.

எவ்வாறாயினும், நேற்றும் இன்றும் விடுமுறை தினங்கள் என்பதால், நாளை திங்கட்கிழமை முதல் புதிய விலையில் பொருட்கள் சந்தைக்கு வெளியிடப்படும் என சங்கம் தெரிவித்துள்ளது. (அ)

# பெண் சட்டத்தரணி சடலமாக மீட்பு

கொழும்பு, ஏப். 02

பெல்மடுல்ல பகுதியில் பெண் சட்டத்தரணியொருவர் சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

புலத்வெல்கொட பகுதியில் அவரது வீட்டின் அறையிலிருந்து சடலம் மீட்கப்பட்டுள்ளது.

40 வயதான சட்டத்தரணியின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த பெண் சட்டத்தரணியின் கணவர் சம்பவ தினத்துக்கு முதல் நாள் இரவிலிருந்து வீட்டில் இருக்கவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த நிலையில் குறித்த மரணத்தில் சந்தேகம் நிலவுவதாக உறவினர்கள் தெரிவித்தனர்.

உயிரிழந்த பெண் சட்டத்தரணி இறுதியாக உறவினர் ஒருவருக்கு அனுப்பி வைத்த குறுஞ்செய்தி தொடர்பிலும் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (அ)

ஈழநாடு
Eelanadu
02.04.2023 ஞாயிற்றுக்கிழமை
பிலவ வருடம், பங்குனி 18

**"ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்"**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# தமிழ் கட்சிகளின் போராட்டம்?

வெடுக்குநாறி சிவன் ஆலயம் தொடர்பான பிரச்னையை தொடர்ந்து, மதச் சார்பற்ற தமிழ்த் தேசியக் கட்சிகள் வழமையான ஒருநாள் போராட்டங்களில் ஈடுபட்டிருக்கின்றன. இவ்வாறான அடையாள நடவடிக்கைகள் அவ்வப்போது தமிழ் கட்சிகளால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்ற விடயங்கள்தான். இவற்றில் புதுமை எதுவுமில்லை. ஆனால், இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளுக்கு பின்னரும் பிரச்னைகள் அப்படியேதான் இருக்கின்றன. அவ்வாறாயின் இவ்வாறான எதிர்ப்பு நடவடிக்கைகளின் விளைவுகள் என்ன?

திருகோணமலை கன்னியா வெந்நீரூற்று விவகாரத்தின் போதும் - இவ்வாறுதான் எதிர்ப்புகள் காண்பிக்கப்பட்டன. ஆனால், குறித்த பகுதி தொல்பொருள் திணைக்களத்தின் கட்டுப்பாட்டுக்குள் செல்வதைத் தடுக்க முடியவில்லை. குருந்தூர்மலை விவகாரத்தின்போதும், இது போன்ற எதிர்ப்புகள் காண்பிக்கப்பட்டன. ஆனால், பௌத்த விகாரை நிர்மாணிக்கப்படுவதைத் தடுக்க முடியவில்லை. யுத்தமில்லாத, கடந்த 13 வருடங்களில் பௌத்த மயமாக்கல் விவகாரம் தொடர்பில் ஏராளம் பேசியாகிவிட்டது. இதுபோன்ற பல்வேறு அடையாள எதிர்ப்பு நடவடிக்கைகள் அரசியல் கட்சிகளால் முன்னெடுக்கப்பட்டிருக்கின்றன. இதில் தமிழ்த் தேசிய கட்சிகளுக்குள் போட்டிகளுமுண்டு. ஆனால், சிங்கள-பௌத்த நிகழ்ச்சிநிரலோ தடையின்றி முன்னேறிக் கொண்டேயிருக்கின்றது.

தமிழ் அரசியல் கட்சிகளைப் பொறுத்தவரையில், அவர்கள் கூறும் அரசியல் தீர்வையும் அவர்களால் அடைய முடியவில்லை - அரசியல் தீர்வைத்தான் பெற முடியாவிட்டாலும்கூட, ஆகக் குறைந்தது இருக்கின்ற நிலத்தையாவது அவர்களால் பாதுகாக்க முடிகின்றதா - என்றால் அதிலும் தொடர்ந்தும் தோற்றுக் கொண்டேயிருக்கின்றனர்.

அரசியல்வாதிகள் தொடர்ந்தும் இவ்வாறான விடயங்களில் பின்னடைவை சந்திப்பதற்கு அரசியல்வாதிகள் மட்டும்தான் காரணமா அல்லது மக்களும் ஒரு காரணமா? விடயங்களை சற்று ஆழமாக நோக்கினால், இவ்வாறான இந்து (சிலரின் பார்வையில் சைவம்) ஆலய விவகாரங்களில் பரந்தளவில் மக்கள் ஆர்வம் காண்பிப்பதாகத் தெரியவில்லை. இந்த விடயத்தில் மக்களை அணிதிரட்டி எதிர்ப்புகளை வெளிப்படுத்த வேண்டியது இந்து அமைப்புகளின் பணியாகும். அதாவது, பக்தர்கள்தான் கடவுளர்களின் உறைவிடத்தை பாதுகாக்க வேண்டும். ஆனால், வடக்கு - கிழக்கில் இந்து அல்லது சைவ அமைப்புகள் மக்களை அணிதிரட்டக்கூடியளவு பலமான நிலையில் இல்லை. அரசியல்வாதிகள் போன்றுதான் இந்து சமய அமைப்புகளும் இருக்கின்றன. பிரச்னைகள் ஏற்படுகின்றபோது மட்டுமே அவைகளும் வெளியில் வருகின்றன.

இந்தப் பிரச்னையை தனித்துவமான பொறிமுறை சார்ந்தே அணுக வேண்டும். முன்னர் குருந்தூர் மலை - இப்போது வெடுக்குநாறி மலை, அதேவேளை வெடியசரன் கோட்டையின் மீதும் பார்வை திரும்பியிருக்கின்றது. இவ்வாறான பகுதிகள் அனைத்தும் ஏதோவொரு வகையில் தொல்பொருள் திணைக்களத்தின் நிர்வாகத்திற்குள் செல்லத்தான் போகின்றது. அரசியல் கட்சிகளால் அதனைத் தடுக்க முடியாது.

எனவே, பிரச்னைகள் ஏற்பட்டவுடன் விடயங்களை அணுகாமல் பிரச்னைகளை முன் கூட்டியே கணித்து அதற்கேற்ப விடயங்களை கையாள்வதற்கான பொறிமுறையொன்று தொடர்பில் சிந்திக்க வேண்டும். நாம் முன்னைய தலையங்கத்தில் சுட்டிக்காட்டியது போன்று, இந்து தொல்பொருள் விவகாரங்களை கையாள்வதற்கான தனியானதோர் அலகு அவசியம். இப்போது அனைத்து விடயங்களும் பௌத்த கலாசார விவகாரமாகவே நோக்கப்படுகின்றது. பௌத்தர்களின் வழிபாட்டிடங்கள் அல்லது அதற்கான தொல்பொருள் சான்றுகள் என்னும் அடிப்படையில்தான் விடயங்கள் அரசால் கையாளப்படுகின்றன. அது எப்படிச் சாத்தியமென்று கேட்கலாம் - முதலில் நிலைப்பாட்டை கட்சிகள் எடுக்க வேண்டும். அதன் பின்னர் அதனை அடைவதற்கான முயற்சிகளை மேற்கொள்ள வேண்டும். ஆனால், இங்கு நிலைப்பாடுகளே இல்லையே!

# கிளிநொச்சி குமரித் தமிழ்ப் பணி மன்றத்தின் 10ஆம் ஆண்டு நிறைவு



*கிளிநொச்சி, மார்ச் .02*

கிளிநொச்சி குமரித் தமிழ்ப் பணி மன்றத்தின் பத்தாவது ஆண்டு நிறைவு விழாவும் தமிழ் மொழி நாள் நிகழ்வுகளும் அண்மையில் கிளிநொச்சி கூட்டுறவாளர் மண்டபத்தில்யாழ்ப் பாணப் பல்கலைக்கழக தகைசார் வாழ்நாள் பேராசிரியர் அ. சண்முகதாஸ் தலைமையில் நடைபெற்றது.

இதன் போது ஆங்கில மருத்துவத்தை தமிழில் போதித்த மருத்துவர் சாமுவேல் பிஸ்க் கிரீன் நினைவு விருது முன்னாள் பேராயர் எஸ். ஜெபநேசன் அடிகளாருக்கு வழங்கப்பட்டது.

விருதை வாழ்நாள் பேராசி ரியர் அ. சண்முகதாஸ் வழங்கினார்.

தனித்தமிழ் ஆர்வலர் நா.வை குமரிவேந்தன், கோப்பாய் ஆசிரிய கலாசாலை அதிபர் செந்த மிழ்ச் சொல்லருவி ச. லலீசன், கிளிநொச்சி மாவட்ட திட்டப் பணிப்பாளர் கணேசலிங்கம் ஆகியோர் உடன் இருந்தனர்.

## *சாரா ஜாஸ்மினின் மரணம்:*

# "சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளும் அறிக்கை சமர்ப்பிக்கப்படவேண்டும்"

*கொழும்பு, ஏப். 02*

கட்டுவாப்பிட்டி தேவாலய குண்டுதாரியின் மனைவியான சாரா ஜாஸ்மினின் மரணம் தொடர்பில் சர்வதேச ரீதியில் ஏற்றுக்கொள்ளக்கூடிய அறிக்கை சமர்ப்பிக்கப்பட வேண்டும் என அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

அரசாங்கப் பகுப்பாய்வாளர் திணைக்களத்தின் மூன்றாவது அறிக்கை அவர்களின் முன்னர் வழங்கிய இரத்தப் பரிசோதனை அறிக்கைகளுக்கு முரணானது என்பதனால் இதனை தம்மால் ஏற்றுக்கொள்ள முடியாது எனவும் அவர் கூறினார்.

ஈஸ்டர் ஞாயிறு குண்டுத் தாக்குதல்கள் நடந்த சில நாட் களுக்குப் பின்னர் 2019 ஏப்ரல் 26 அன்று சாய்ந்தமருதில் உள்ள வீட்டில் தற்கொலை குண்டு வெடிப்பில் சாரா ஜாஸ்மின் இறந்தார் என இரத்த பரிசோதனை அறிக்கை வெளிப்படுத் தியதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இருப்பினும் ஆரம்பத்தில் வெளியிடப்பட்ட அறிக்கையில் இறந்தவர்களில் இல்லை சாரா ஜாஸ்மின் எனக் கூறிய நிலையில் எதை உண்மையாக ஏற்றுக்கொள்ளவேண்டும் என்றும் அருட்தந்தை சிறில் காமினி பெர்னாண்டோ கேள்வியெ ழுப்பினார்.

270 உயிர்களைக் காவு வாங்கிய இந்தத் தாக்குதலின் பின்ன ணியில் யார் இருக்கிறார்கள் என்பதை அடையாளம் காண் பது இந்த நாட்டின் பாதுகாப் புக்கு முக்கியமானது என்றும் பாதிக்கப்பட்டவர்களுக்கு நீதி கிடைக்க உண்மை வெளிவர வேண்டும் என்றும் அருட்தந்தை குறிப்பிட்டார்.

(அ)

# வசந்தகால கொண்டாட்டம் நுவரெலியாவில் ஆரம்பம்!

*கொழும்பு, ஏப். 02*

நுவரெலியாவில் வருடாந்தம் நடத்தப்படும் வசந்த கால நிகழ்வுகள் நேற்று காலை கோலகலமாக ஆரம்பித்து வைக்கப்பட்டன.


நுவரெலியா கிறகரி வாவி கரையோரத்தில் முப்படையி னரின் அணிவகுப்பு மரியாதை, மாணவர்களின் பான்ட் வாத்திய அணிவகுப்பு மரியாதை மற்றும் கலை, கலாசார அம்சங்களுடன் நிகழ்வுகள் இனிதே ஆரம்பமாகின. ஏப்ரல் 30 ஆம் திகதி வரை வசந்தகால கொண் டாட்டங்கள் நீடிக்கும்.

நுவரெலியா மாநகரசபை விசேட ஆணையாளர் திருமதி சுஜீவா போதிமான தலைமையில் ஆரம்பமான இந்நிகழ்வில் பிரதம அதிதியாக மத்திய மாகாண செயலாளர் காமினி இராஜரத்தின , நுவரெலியா மாநகர சபை முன்னாள் முதல் வர் சந்தனலால் கருணாரட்ன , நுவரெலியா மாவட்ட செயலா ளர் நந்தன கலபட, நுவரெலியா சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் மற்றும் மாநகரபை உறுப்பி னர்களும் பொதுமக்களும் கலந்து கொண்டனர்.

தொடர்ந்து வரும் நாட்களில் மலர் கண்காட்சி, படகோட்டம், கார் பந்தய ஓட்டப் போட்டி, குதிரைப்பந்தயம், கிரிக்கெட் சுற்றுப் போட்டி, உதைபந்தாட்ட சுற்றுப் போட்டி, கிறகரிவாவி யில் நீர் விளையாட்டு, சேற்றில் மோட்டார் ஓட்டம், மோட்டார் சைக்கிள் தடைதாண்டல் போட்டி மற்றும் நாள்தோறும் இசை நிகழ்ச்சிகள் என களியாட்ட விழாக்களும் இந்த வசந்த கால விழாவில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

கடந்த வருடங்களைவிட இவ்வருடம் பெருந்தொகை யான சுற்றுலா பயணிகள் வருகை தருவார்கள் என வசந்த கால ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்தனர். (அ)

# அப்புக்குட்டி அண்ணையின் 'டவுட்'



பகிர்வு -74

# சிறு தானியச் செய்கையை மேம்படுத்துவோம்

**கணபதி சர்வானந்தா**

நாம் தொன்று தொட்டு அறுவடைசெய்து வந்த சிறு தானியப் பயிர்ச்செய்கையில் கவனம் செலுத்தாமையும் இன்றைய நிலைமைக்குரிய காரணங்களில் ஒன்று.சிறு துளி பெருவெள்ளம் என்பதற்கமையை நாம் சிறு தானியப் பயிர்செய்கையில் கவனம் செலுத்து வருவோமானால், அதன் அறுவடையை அதிகரிப்போமானால் நாட்டில் ஏற்பட்டுள்ள உணவுப் பற்றாக்குறை மற்றும் விலைவாசி ஏற்றம் போன்ற பல விடயங்களில் இருந்து எம்மை நாம் ஓரளவேனும் காப்பாற்றிக் கொள்ளலாம் என்பது எனது எண்ணம்.

சிறுதானியப் பயிர்ச்செய்கையில் அதிக கவனம் செலுத்தி அதனைப் பாதுகாத்து வளர்த்து அதனை ஒரு நிறுவனமயப் படுத்தி உலகுக்கே ஒரு உதாரண புருஷராக இருந்த ஒரு பெருந்தகை பற்றி எனது முகநூல் நண்பன் சிவராஜ் தனது முகநூலில் பதிவிட்டிருக்கிறார். அதனைப் படித்ததும் எமது மக்களோடு அதனைப் பகிரலாம் என எண்ணினேன். விளைவு.

இந்தியாவின் 'சிறுதானிய மனிதர்' எனப் போற்றப்படுப வர்தான் திரு.பி.வி.சதீஸ். அவரால் உருவாக்கப்பட்டதே 'டெக் கான் டெவலப்மெண்ட் சொசைட்டி' எனும் தொண்டு அமைப்பு. இவ்வமைப்பு கிராமப்புற விவசாயிகளின் நல்வாழ்வுக்காகத் தொடர்ந்து தொண்டாற்றி வருகிறது. அதிலும் குறிப்பாக, கிராமப்புற பெண்களுக்கான சங்கங்களை உருவாக்கி, அவர்களை பிராந்திய அரசியலமைப்புடன் தொடர்பு ஏற்படுத்தி பல்வேறு முன்னுதாரணத் திட்டங்களை வகுத்தளிக்கிறது.

உணவுப் பாதுகாப்பு, சூழலுக்குகந்த வேளாண்முறை மற்றும் மாற்றுக்கல்வி சார்ந்த பல நடைமுறைத் தீர்வுகளை யும் உருவாக்கியுள்ளனர் இவ்வமைப்பின் பெண்கள். தங் களது செயல்பாடுகள் மூலமாக அவர்கள் பெர்மாகல்சர் எனும் நிலைத்த வேளாண்மை, கிராமப்பொதுத் தானிய வங்கி, கிராமப் பொதுநிதி, கிராமப்பொது பசுமை நிதி, பொதுக் குத்தகை முறைமூலம் சீரான உழவுமேலாண்மை என கிராமங்களை அதன் ஆதார உயிர்வளத்தோடு ஒன்றிணையச் செய்யும் கூட்டமைப்பாக டெக்கான் டெவலப்மெண்ட் சொசைட்டி இயங்கி வருகிறது.

இந்தியாவின் மிகவுயர்ந்த கல்வி நிறுவனத்தில் படித்துமுடித்து, தூர்தர்சன் தொலைக்காட்சியின் செயற்கை கோள்வழி ஒளிபரப்புத் திட்டத்தில் பெரும்பங்காற்றி, அதன் பின் கிராம மக்களின் வாழ்வுநிலை உயர்வுக்காகத் தன்னை அர்ப்பணித்துக் கொண்டவர் சதீஸ். . கல்விதந்த செல்வம், அதிகாரப்பதவி அனைத்திலிருந்தும் தன்னை விலக்கிக் கொண்டு கர்நாடகா மற்றும் தெலுங்கானா பகுதிகளில் உள்ள ஒடுக்கப்பட்ட மக்களின் வளர்ச்சிக்கு உறுதுணையாக உடனின்றார்.

அதன் நீட்சியாக, கிராமப் பெண்கள் ஒன்றிணைந்த கூட்டமைப்பை நிறுவி, அதன் தலையாயப் பணியாக சிறுதானியங்களை மீட்டெடுப்பது என முடிவுசெய்தனர். சிறுதானிய பயிரிடலை ஊக்குவிப்பது, மரபுவழி விவசாயத் தொழிற்நுட்பங்களைப் பரவலாக்குவது, பயிற்சுழற்சி முறை களால் நிலத்தை வளமாக்குவது, ஒடுக்கப்பட்ட சமூகத்தைச் சார்ந்த பெண்களின் சமூகப்பங்களிப்பை வெளிச்சமாக்குவது என கடந்த மூன்று தசாப்தங்களாக சதீஸ் அவர்கள் முன்னெடுத்த பணிகள் அனைத்தும் அசாத்தியமானவை.

சிறுதானியக் காப்பாளர் பி.வி.சதீஸ் அவர்கள் கடந்த மார்ச் 19 அன்று தனது 77வது வயதில் இயற்கை எய்தியுள்ளார். அழியவிருந்த பலநூறு சிறுதானியங்கள் இன்று பொது நீரோட்ட வேளாண்மையில் பரவலாகக் காரணமான பெரு மனிதர். சமூகத்தின் அதிகாரமட்டத்தில் விளிம்புநிலை யிலுள்ள எளிய மக்களைப் பிரதான செயல்விசையாக முன்னிருத்தி அவர்களின் அளப்பரிய ஆற்றலை தேசத்திற்கு உணர்த்தியவர். அத்தகைய நல்மனிதரின் நினைவை மனமேந்தும் விதமாக குக்கூ காட்டுப்பள்ளி சிறுநிகழ் வொன்றை முன்னெடுக்கிறது. – சிவராஜின் பதிவு முற்றுப் பெறுகிறது.

எனக்கு ஞாபக மிருக்கிறது. 1950 களில் சிறுதானியப் பயிர் செய்கை எம் மண்ணில் பரவலாகக் காணப்பட்டது. எமது பரம்பரையினர் விவசாயத்தை வாழ்வாதாரமாகக் கொண்டவர்கள். அன்று நீரிறைக்கும் இயந்திரம் அவ்வளவாக இல்லை. பட்டை நீர்ப்பாசனம், சூத்திர முறைமை அதிகம் பயன்படுத்தப்பட்டு வந்தன. அதனால் அளவுக் கேற்றவாறு நிலத்தைப் பண்படுத்தி இயற்கை முறையிலேயே அதிகளவு விவசாய முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. கால்நடை வளர்ப்பே விவசாயத்தின் மூலவளமாகக் காணப்பட்ட சூழ் நிலையில் சிறு தானியப் பயிர்ச் செய்கை என்பது அதிகளவு கவனம் செலுத்தபட்தொன்றாகக் காணப்பட்டது. குரக்கன், வரகு, சாமி, பயறு,உழுந்து போன்ற பல சிறு தானியங்கள் பயிரிடப்பட்டன. அக் காலத்தே அவ் விதைகளும் எம்முடையதாக இருந்தன. இயற்கைக்குள் நாம் இருந்தோம். சகல விதங்களிலும் இயற்கை எம்மை வழி நடத்தியது.

அது மட்டுமல்லாது சிறு தானியங்களில் பல நன்மை உண்டு என இக்காலத்து ஆராய்சிகளும் சொல்லுகின்றன. சிறு தானியங்கள் மருந்தாகக் கருதப்படுகின்றன. உணவே மருந்து மருந்தே உணவு என்ற கோட்பாட்டுக்கமைய சிறு தானியங்கள் அதிக உணவு, ஆரோக்கிய பெறுமானங்களைக் கொண்டிருக்கின்றன. திணையரிசி,சாமி,குரக்கன் போன்ற வைகள் எமது நாட்டுப் பாரம்பரிய தேசிய வைத்தியத்துறையில் மிக முக்கியமான மூலிகைகளாகக் கருதப்படுகின்றன.உடலில் வீக்கங்களையும், நச்சுத்தன்மைகளையும் இல்லாமல் செய்வதற்கு எமது நாட்டுப் பாராம்பரிய நாட்டு வைத்தியத் துறையில் அதிகம் பயன்படுத்தப்பட்டதாகக் குறிப்புகள் உண்டு.

தற்போது சமூகத்தில் தொற்றா நோய்கள் அதிகரித்துக் காணப்படுகின்ற சூழ்நிலையில் அவ் வகை நோயாளிகளுக்கு நிவாரணமளிக்கக் கூடியவனவாக இச் சிறு தானியங்களே அதிகம் காணப்படுகின்றன. எனவே இறக்குமதி செய்யப்பட்ட தானிய வகைகளைத் தேடி ஓடாது எமது உள்ளூர் சிறு தானி யங்களைப் பயன்படுத்துவோமாகில் நாம் எமது வாழ்க்கையை வளப்படுத்துவதோடு மட்டுமல்லாது சிறு தானியப் பயிர்ச் செய்கையாளர்களையும் ஊக்குவிக்கலாம். •

# இந்தவார ராசிபலன் 01.04.2023 - 07.04.2023



ஏப்ரல் 2 ஞாயிற்றுக்கிழமை
சுபகிருது வருடம் - பங்குனி 19

நல்ல நேரம்: 7.30 - 9.00 ராகு காலம் : 4.30 - 06.00 திதி : துவாதசி

## மேஷம்
[ அசுவினி, பரணி, கார்த்திகை 1 பாதம் ]

குடும்பத்தில் அன்பு, பாசம் அதிகரிக்கும். எடுத்த காரியங்கள் நிறைவேறும். தர்ம காரியங்களில் ஈடுபடுவீர்கள். உடன்பிறந்தோரை அரவணைத்துச் செல்வீர்கள். உத்தியோகஸ்தர்கள் புதிய பயிற்சிகளை மேற்கொள்வீர்கள். வியாபாரிகள் கொடுக்கல் - வாங்கலில் சீரான நிலையைக் காண்பார்கள். விவசாயிகள் லாபமடைவீர்கள். அரசியல்வாதிகளின் சிந்தனை களைப் பிறர் பாராட்டுவார்கள்.கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும்.

## ரிஷபம்
[ கார்த்திகை 2,3,4, ரோகிணி, மிருகசீரிஷம் 1,2 ]

எடுத்த காரியங்களில் வேகம் கூடும். குடும்பத்தில் அமைதியைக் கையாளுங்கள். சொத்துகளை வாங்கி மகிழ்வீர்கள். தொழிலை கவனமாக நடத்துவீர்கள். உத்தியோகஸ்தர்கள் அமைதியாகப் பணியாற்றவும். வியாபாரிகளுக்கு எதிர்பாராத வருவாய் கிடைக்கும். விவசாயிகளுக்கு வராமலிருந்த பணம் திரும்பக் கிடைக்கும். அரசியல்வாதிகள் தொண்டர்களால் அனுகூலம் அடைவார்கள். பெண்கள் உறவினர்கள் வருகையால் சந்தோஷம் அடைவார்கள். மாணவர்கள் கல்வியில் முன்னேறுவார்கள்.

## மிதுனம்
[ மிருகசீரிடம் 3,4, திருவாதிரை, புனர்பூசம் 1,2,3 ]

எதிர்பாராத பண வரவும், செலவும் இருக்கும். பெற்றோரின் உடல் ஆரோக்கியம் சீராகவே தொடரும். மனச் சோர்வு நீங்கும். புதிய பொறுப்புகள் தேடி வரும். உத்தியோகஸ்தர்கள் பதவி உயர் வைப் பெறுவார்கள். வியாபாரிகள் கொடுக்கல் – வாங்கலில் லாபத் தைக் காண்பார்கள். விவசாயிகள் ஆரோக்கியத்தை மேம்படுத்திக் கொள்வார்கள். அரசியல்வாதிகளுக்கு கடந்தகால கசப்புகள் மறையும். கலைத்துறையினர் உயர்ந்தோரால் மதிக்கப்படுவார்கள். பெண்கள் பெற்றோரால் மகிழ்ச்சி அடைவார்கள்.

## கடகம்
[ புனர்பூசம் 4, பூசம், ஆயில்யம் ]

பயணம் செய்ய நேரிடும். தொழிலில் முதலீடுகளைச் செய்வீர் கள். வீட்டிலும், வெளியிலும் அந்தஸ்து உயரும். போட்டி, பந்தயங் களில் வெற்றி பெறுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் ஊதிய உயர்வைப் பெறுவார்கள். வியாபாரிகள் முதலீடுகளால் லாபம் காண்பார்கள். அரசியல்வாதிகள் தொண்டர்களின் ஆதரவோடு இலக்குகளை அடைவார்கள். கலைத்துறை யினர் திறமைகளை வெளிப்படுத்துவார்கள். பொருளாதாரம் சீராகவே இருக்கும்.

## சிம்மம்
[ மகம், பூரம், உத்திரம் 1 ]

பொருளாதாரம் சீராகவே இருக்கும். எடுத்த காரியங்களில் தடை இருக்காது. உடன்பிறந்தோருக்கு உதவுவீர்கள். புதியவர்களை நம்பி பணம் கொடுக்க வேண்டாம். உத்தியோகஸ்தர்களுக்கு புதிய வேலை கிடைக்க சற்று தாமதமாகும். வியாபாரிகளுக்கு வழக்கு, கடன் பிரச்னைகள் சாதகமாகும். விவசாயிகள் தேவையில்லாத செலவுகளைத் தவிர்க்கவும். அரசியல்வாதிகள் திடீர் பயணம் செய்ய நேரிடும்.

## கன்னி
[ உத்திரம் 2,3,4, அஸ்தம், சித்திரை 1,2 ]

புதிய முயற்சிகளைத் துணிந்து மேற்கொள்ளலாம். பணவரவு அதிகரிக்கும். தொழிலை சுமையில்லாமல் நடத்துவீர்கள். அதிர்ஷ்ட வாய்ப்புகள் தேடி வரும். உத்தியோகஸ்தர்கள் தங்கள் பணிகளில் கவனமாக இருப்பார்கள். வியாபாரிகளுக்கு வங்கிக் கடன் கிடைக்கும். விவசாயிகள் பொறுப்புகளை அடுத்தவர்களிடம் ஒப்படைக்க வேண்டாம். அரசி யல்வாதிகளுக்கு அலைச்சலுக்கேற்ற ஆதாயம் கிடைக்கும். கலைத்துறையினருக்கு புதிய ஒப்பந்தங்கள் கிடைக்கும். பெண்கள் பொறுமையைக் கைவிட வேண்டாம்.

## துலாம்
[ சித்திரை 3,4, சுவாதி, விசாகம் 1,2,3 ]

உயர்ந்தோரிடம் நல்லொழுக்கங்களைக் கற்பீர்கள். ஆரோக் கியம் சிறப்பாகத் தொடரும். நிலையான வருவாய் வருவதற்கான திட்டம் தீட்டுவீர்கள். உத்தியோகஸ்தர்கள் இடையூறுகளைச் சமாளிப்பார்கள். வியாபாரிகள் நேர்வழியில் உழைத்து முன்னேறு வார்கள். விவசாயிகளின் தன்னம்பிக்கை உயரும். அரசியல்வாதிகள் கட்சியில் தீவிரப் பணியாற்றுவார்கள். கலைத்துறையினர் தொழில்நுட்பங்களைக் கற்பார்கள்.

## விருச்சிகம்
[ விசாகம் 4, அனுஷம், கேட்டை ]

யோசித்து முடிவெடுப்பீர்கன். உடன்பிறந்தோரின் பிரச்னை களைத் தீர்ப்பீர்கள். குடும்பத் தேவைகள் நிறைவேறும். எதிர்பார்த்த சலுகைகள் கிடைக்கும். உத்தியோகஸ்தர்கள் மகிழ்ச்சியுடன் காணப்படுவீர்கள். வியாபாரிகள் முடங்கிய வியாபாரத்தை நடத்து வீர்கள். விவசாயிகள் பாசன வசதிகளைப் பெருக்குவீர்கள். அரசியல்வாதிகள் தங்கள் பெயரை நிலைநாட்டுவார்கள். கலைத்துறையினர் அதிகச் செலவு செய்ய நேரிடும்.

## தனுசு
[ மூலம், பூராடம், உத்திராடம் 1 ]

பண வரவு இருக்கும். காரியங்களைத் தடையின்றி செய்து முடிப்பீர்கள். குழப்பங்கள் அகன்று நிம்மதியாகத் தூங்குவீர்கள். புதிய தொழில்களைத் தொடங்குவீர்கள். உத்தியோகஸ்தர்களை சக ஊழியர்களால் பாராட்டப்படுவார்கள். வியாபாரிகள் புதிய இலக்கு களை எட்டுவார்கள். அரசியல்வாதிகள் கட்சி மேலிடத்திடம் இணக் கமாகப் பழகுவார்கள். பெண்களுக்கு கணவரிடம் இருந்த கருத்துவேறுபாடுகள் நீங்கும்.

## மகரம்
[ உத்திராடம் 2,3,4, திருவோணம், அவிட்டம் 1,2 ]

குடும்பத்தில் ஒற்றுமை உண்டாகும். கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுவீர்கள். புதிய வாகனங்களை வாங்குவீர்கள். விலை உயர்ந்த பொருள்களை வாங்கி மகிழ்வீர்கள். உத்தியோகஸ் தர்களுக்கு மகிழ்ச்சியான செய்தி உண்டு. வியாபாரிகள் கூட்டாள ிகளிடம் இணக்கமாகப் பழகுவார்கள். விவசாயிகளுக்கு பிறரின் ஆதரவு கிடைக்கும். அரசியல்வாதிகள் மேலிடத்தின் எண்ணங்களைப் புரிந்துகொள்வார்கள்.


## கும்பம்
[ அவிட்டம் 3,4, சதயம், பூரட்டாதி 1,2,3 ]

நினைத்த காரியங்கள் நிறைவேறும். பயணங்களால் சாதக மான சூழல் அமையும். தொழிலை விரிவுபடுத்துவீர்கள். அரசு விஷ யங்கள் தொய்வின்றி முடிவடையும். உத்தியோகஸ்தர்கள் கட மையை உணர்ந்து பணியாற்றுவார்கள். வியாபாரிகளுக்கு கொடுக்கல் – வாங்கலில் சீரான நிலையே காணப்படும். விவசாயிகள் மாற்றுப் பயிர்களைப் பயிரிடுவார்கள். அரசியல்வாதிகளுக்கு தடைப்பட்ட விஷயங்களில் முடிவு கிடைக்கும். கலைத்துறையினர் வருவாயைக் காண்பார்கள்.

## மீனம்
[ பூரட்டாதி 4, உத்திரட்டாதி, ரேவதி ]

செயல்களில் விவேகம் உண்டு. வருவாய் உயரும். தொழிலில் பிரச்னைகளை சமாளிப்பீர்கள். பூர்விக சொத்துகளில் இருந்த வில் லங்கம் நீங்கும். உத்தியோகஸ்தர்கள் பதவி உயர்வைப் பெறு வார்கள். வியாபாரிகள் கூட்டாளிகளுடன் சேர்ந்து போட்டிகளைச் சமாளிப்பார்கள். விவசாயிகள் புதிய குத்தகைகளைப் பெறுவார்கள். அரசியல்வாதிகள் தொலைநோக்குப் பார்வையுடன் செயல்படுவார்கள். கலைத்துறையினருக்கு நல்ல வாய்ப்பு கிடைக்கும். பெண்கள் ஆன்மிகத்தில் ஈடுபடுவீர்கள். மாணவர்கள் ஆசிரியர் களை அரவணைத்துச் செல்வீர்கள்.

# எம். ஜி. ஆர். தொப்பியை வென்ற ஈ. பி. எஸ்.!



சென்னை மடல்

-பகவான் சிங்-

செவ்வாயன்று சென்னை அவ்வை சண்முகம் சாலையில் உள்ள அதிமுகவின் தலைமை அலுவலகம் விழாக்கோலம் பூண்டிருந்தது. கட்சித் தொண்டர்கள் பெருமளவில் கூடி, பட்டாசுகள் வெடித்து, கட்சி நிறுவனரான எம்ஜிஆர் மற்றும் 'அம்மா' ஜெயலலிதாவின் உண்மையான வாரிசு எடப்பாடி கே. பழனிச்சாமி (ஈபிஎஸ்) தான் என்ற கோஷங்களை எழுப்பிக் கொண்டாடினார்கள். ஒரு சிலர் எதிரணித் தலைவரான ஓ. பன்னீர்செல்வம் (ஓபிஎஸ்) "ஒழிக" என்றும் "துரோகி" என்றும் கோஷமெழுப்பினர்.

ஈபிஎஸ் அணியினரின் ஆதிக்கம் நிறைந்த, கட்சியின் பொதுக் குழு, பொதுச் செயலாளர் பதவிக்கான தேர்தலை நடத்தக்கூடாது எனக் கோரிய ஓபிஎஸ்-இன் மனுவைத் தள்ளுபடி செய்து, அன்று காலை வெளியாகியிருந்த சென்னை உயர்நீதிமன்றத்தின் தீர்ப்பை அடுத்து, ஈபிஎஸ் தொண்டர்களின் இந்தக் கொண்டாட்டங்கள் அரங்கேறின. இந்த உத்தரவு வெளியான சற்று நேரத்திற்கெல்லாம், சட்டமன்றத்தில் பட்ஜெட் கூட்டத்தொடரில் பங்கெடுத்துக் கொண்டிருந்த அதிமுக உறுப்பினர்கள் அனைவரும், அவையிலிருந்து வெளியேறி, அதிமுக தலைமையகத்துக்கு விரைந்தனர் - கட்சியின் பொதுச் செயலாளராக ஒருமனதாக ஈபிஎஸ் அறிவிக்கப்படும் கூட்டத்தில் பங்கேற்க. 1972 ஒக்ரோபர் 17 அன்று எம்ஜிஆர் இக் கட்சியைத் தொடங்கியதிலிருந்து கட்சியின் ஆறாவது பொதுச் செயலாளராக உருவெடுத்திருக்கிறார் ஈபிஎஸ். எம்ஜிஆருக்குப் பிறகு, 'நாவலர்' நெடுஞ்செழியன், ப. உ. ஷண்முகம், ராகவானந்தம் மற்றும் 1989 முதல் 2016 டிசம்பர் 5 அன்று தனது இறுதி மூச்சு வரை தொடர்ந்து 'அம்மா' ஜெயலலிதா ஆகியோர் அப் பொறுப்பை வகித்துள்ளனர். அம்மாவின் உயிரிழப்புக்குப் பிறகு, கட்சி நிர்வாகிகள் அவரைக் கட்சியின் நிரந்தரப் பொதுச் செயலாளராக அறிவித்தனர்.

தொடர்ந்த சில மாதங்களில் ஓபிஎஸ், ஈபிஎஸ் ஆகிய இரு முக்கியத தலைவர்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில், 2,663 பொதுக்குழு உறுப்பினர்களில் பெரும்பான்மையினர் மற்றும் சட்ட மன்ற, நாடாளுமன்ற அதிமுக உறுப்பினர்களின் பெரும்பான்மையினர் ஆகியோரின் ஆதரவைப் பெற்றார் ஈபிஎஸ். சென்ற ஆண்டு ஜூலை 11 அன்று நடந்த சிறப்புப் பொதுக் குழுக் கூட்டத்தில் ஈபிஎஸ் 'இடைக்கால'ப் பொதுச் செயலாளராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். 'அம்மா' ஜெயலலிதாவை 'நிரந்தர பொதுச் செயலாளர்' என்ற பதவியில் இருந்து அகற்றுவதற்கு முந்திய படியாக இந்தச் செயல் கருதப்பட்டது. இந்தக் கூட்டத்தில், ஓபிஎஸ் மற்றும் அவரது ஆதரவாளர்களைப் பொதுக் குழுவிலிருந்து நீக்கும் தீர்மானமும் நிறைவேற்றப்பட்டது.

இதைத் தொடர்ந்து, அதிமுக தலைமையகத்தில் வன்முறை மோதல்கள் அரங்கேறின. அதையடுத்து, காவல் துறை உதவியுடன் அந்தக் கட்டடத்தை சீல் வைத்து மூடியது திமுக அரசு.

தன்னுடையதும் மற்றும் தமது சொந்த தேனி தொகுதியைச் சேர்ந்த நாடாளுமன்ற உறுப்பினரான தனது மகன் ரவீந்திரநாத் உள்ளிட்ட ஆதரவாளர்களின் நீக்கத்தையும் எதிர்த்து உயர்நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்தார் ஓபிஎஸ். அதே நேரத்தில், முன்னாள் அமைச்சர் உதயகுமாரை சட்டமன்ற எதிர்க்கட்சித் துணைத் தலைவராகவும் (ஈபிஎஸ் எதிர்க்கட்சித் தலைவர்) அக்ரி கிருஷ்ணமூர்த்தியைக் கட்சியின் துணைச் செயலாளராகவும் நியமித்து, ஓபிஎஸ் ஆதரவாளர்களை ஒதுக்கி வைத்துக் கட்சியின் மீதான தனது பிடியை வலுப்படுத்தினார் ஈபிஎஸ். தமிழக அரசுக்கு அதிமுக தலைமையகக் கட்டடத்தை ஈபிஎஸ் வசம் ஒப்படைக்குமாறு நீதிமன்ற உத்தரவைப் பெறுவதிலும் இவர் வெற்றி பெற்றுள்ளார். ஜூலை 20 அன்று இந்த உத்தரவைக் கட்சித் தொண்டர்கள் கொண்டாடினர். அடுத்த சில வாரங்களில், ஓபிஎஸ் தலைமைக்கு ஆதரவாக நீதிமன்றத்தின் ஒரு நபர் அமர்வு அளித்திருந்த உத்தரவைத் தள்ளுபடி செய்தது, உயர்நீதிமன்றத்தால் நியமிக்கப்பட்ட இரு நீதிபதி அமர்வு. இந்தியாவில் இந்த ஆண்டு (2023) நடக்கவிருக்கும் ஜி20 உச்சிமாநாட்டுக்குத் தயாராவது குறித்துப் பேச்சு வார்த்தை நடத்த மத்திய அரசு, தேசியக் கட்சிகளின் கூட்டத்தைக் கடந்த நவம்பர் டில்லி ராஷ்டிரபதி பவனில் நடத்தியது. அதில் பங்கேற்க, ஈபிஎஸ்-ஐ அழைத்தது. இந்த அழைப்பை அடுத்து, அவருக்கு மோடி அரசிடம் அங்கீகாரம் கிடைத்ததாக ஈபிஎஸ் ஆதரவாளர்கள் கொண்டாடினார்கள். மறுபுறம், இடைக்காலப் பொதுச் செயலாளராக ஈபிஎஸ் தேர்வானதை எதிர்த்து ஓபிஎஸ் டெல்லியில் உச்ச நீதிமன்றத்தில் தொடுத்திருந்த வழக்கு தோல்வியடைந்தது. அடிமேல் அடி வாங்கிய ஓபிஎஸ்க்கு கடைசி அடியாகக் கடந்த செவ்வாயன்று ஒரு நீதிமன்றத் தீர்ப்பு வெளியானது. அதிமுக பொதுச் செயலாளர் பதவிக்கான தேர்தலை நிறுத்தி வைக்குமாறு ஓபிஎஸ் கோரிய வழக்கை சென்னை உயர் நீதிமன்றம் தள்ளுபடி செய்தது. ஈபிஎஸ், எம்ஜிஆர் தொப்பியை அணிந்த கதை இது தான். தொடக்கத்தில், குறிப்பாக அம்மாவின் மறைவுக்குப் பிறகு, ஓபிஎஸ்-க்கு ஆதரவாக இருந்த பாஜகவும் தற்போது ஈபிஎஸ் பக்கம் சாய்ந்துவிட்டது.

ஓபிஎஸ் அணி தற்போது வெறிச்சோடியிருக்கிறது என்றால் அதற்கு முழுப் பொறுப்பும் அவரேதான். இரு முறை முதல்வர் பதவியை வகித்தவர் அவர் - முதலில், 2016-17இல் ஊழல் வழக்கில் தண்டனை பெற்ற ஜெயலலிதா முதல்வர் பதவியிலிருந்து விலகியபோதும் பிறகு, அம்மாவின் மறைவுக்குப் பிறகு 'சின்னம்மா' சசிகலா, தான் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்படும் வரை பொறுப்பை ஏற்குமாறு இவரைத் தேர்ந்தெடுத்த போதும். அதற்குப் பிறகு, உச்ச நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டதையடுத்து தான் முதல்வராக முடியாத நிலையில், தனக்கு எதிராக ஓபிஎஸ் போர்க்கொடி தூக்கியதால் அவரை விலக்கி, ஈபிஎஸ்-ஐ தலைவராக நியமித்



தார் சசிகலா. சின்னம்மாவை எதிர்த்து மரினா கடற்கரையில் தர்ம யுத்தத்தை நடத்திய ஓபிஎஸ், ஊடகங்கள் மற்றும் மக்கள் மத்தியில் நாயகனாக உருவெடுத்தார்,

பாஜகவின் ஆதரவும் மறைமுகமாக இருந்தது. ஆனால், கட்சித் தலைமைப் பதவிக்கான பரபரப்பான போட்டியில் முடிவுகள் எடுப்பதில் காட்டிய மெத்தனப் போக்கால் ஓபிஎஸ் முக்கியத்துவத்தை இழந்தார். மறுபக்கம் ஈபிஎஸ், அதிமுக அரசை மீதமுள்ள நான்கு ஆண்டுகள் வெற்றிகரமாக நிறைவு செய்ததுடன், ஆட்சியில் இருந்த காரணத்தால், கட்சி நிர்வாகிகளின் விருப்பங்களைத் திறம்பட நிர்வகித்து, கட்சியின் மீதான தனது பிடியையும் வலுப்படுத்திக்கொண்டார்.

ஆனால், ஆட்சிக்கு எதிரான மக்களின் பொதுவான மனோபாவமும், ஊழல் விவகாரத்தில் அவரது அரசுக்கு

## அவநம்பிக்கைகள் நிர்ணயிக்கும் முடிவுகள்

இருந்த கெட்ட பெயரும் ஈபிஎஸ்-க்குப் பின்னடைவைக் கொடுத்தன. மேலும், ஓபிஎஸ்-உடனான இவரது மோதலும் சேர்ந்து, 2021 சட்டமன்றத் தேர்தலில் மு. க. ஸ்டாலினின் திமுகவிடம் ஈபிஎஸ் தோல்வியடையச் செய்தது. அது மட்டுமல்லாமல், தொடர்ந்து வந்த உள்ளாட்சித் தேர்தலிலும் ஈபிஎஸ் தலைமையிலான அதிமுக மோசமான செயல்பாட்டையே வெளிப்படுத்தியது.

இதனால், முக்கிய ஊடகங்களில் கட்சி சிதைந்துவிட்டதான பிம்பமே வெளியானது. ஈபிஎஸ் இந்த அரசியல் சூழலில் காணாமல் போய்விட்டதாகவே தோன்றியது. தேவர் சமுதாய வாக்குகளைத் தக்கவைத்துக்கொள்ள, ஓபிஎஸ்-உடனும் சின்னம்மா சசிகலாவுடனும் கூட சமாதானமாகப் போகச் சொன்ன பாஜக-வின் அழுத்தத்துக்கு அடிபணியாமலும் தனது ஆதரவாளர்களைத் தக்க வைத்துக்கொண்டும் தனது சாமர்த்தியத்தை ஈபிஎஸ் நிரூபித்தார். வரும் ஆண்டு மே மாதம் நடக்கவிருக்கும் பாராளுமன்றத் தேர்தலில் திமுக கூட்டணியைத் தோற்கடிக்கும் நோக்கில், அதிமுகவுடனான கூட்டணியை மேலும் வலுப்படுத்த பாஜக நினைத்தது. ஆனால் ஈபிஎஸ், தமிழகத்தின் 39 மற்றும் புதுச்சேரியில் 1 என 40 தொகுதிகளில் கணிசமான வெற்றியைப் பெற்றுத்தர முடியும் என்று பணிவாகவும் அதே நேரத்தில் உறுதியாகவும் பாஜகவுக்கு உறுதியளித்துத் தன்னுடைய முக்கியத்துவத்தை வலியுறுத்தினார்.

பிளவுகளைச் சரிசெய்ய அதிமுக எடுக்கும் முயற்சிகள் குறித்து முதல்வர் ஸ்டாலினும் பெரிதாகக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. தமிழகத்தில் பெரு முதலீடுகளை ஈர்க்கவும் வேலைவாய்ப்பை மேம்படுத்தவும் திமுக அரசு எடுத்துவரும் பெரும் முயற்சிகளால் அடுத்த சில மாதங்களில் மாநிலத்தில் ஒட்டு மொத்த வளர்ச்சியும் பொருளாதார முன்னேற்றமும் ஏற்படும் என்று அமெரிக்கக் கல்வி பெற்ற அவரது நிதியமைச்சர் பழனிவேல் தியாகராஜன் நம்பிக்கை தெரிவித்திருக்கிறார். ஊழல் குறித்த தொடர் முணுமுணுப்புகள் இருந்தாலும், மக்கள் அது குறித்துப் பெரிதாகக் கவலைப்படுவதாகத் தெரியவில்லை. சாமானியர்களின் வாக்குகளைப் பெறப் பணமும் மதுவும் போதும் என்ற நிலைதான் காணப்படுகிறது. அறிவார்ந்த படித்த மக்கள் அலட்சியத்துடன், தங்களது வாக்குகளைச் செலுத்தக் கூட வாக்குச் சாவடிகளுக்கு வருவதில்லை.

அரசியல்வாதிகள் பொதுப் பணத்தைக் கொள்ளையடித்து நிர்வாகச் சீர்கேடுகளில் ஈடுபடுவது குறித்து நாம் ஏன் புலம்பிக்கொண்டேயிருக்கிறோம்? வெறும் குறை கூறுவதைத் தாண்டி, நம்மால் தேர்ந்தெடுக்கப்பட்ட பிரதிநிதிகளின் நன்னடத்தைக்காகப் போராடும் அளவுக்கு நமக்கு நேரமோ மனசாட்சியோ இல்லாதபோது குறை கூறுவதற்கான தார்மீக உரிமை நமக்கு என்ன இருக்கிறது? படித்த, அறிவார்ந்த நாம், படிப்பறிவில் லாத, தவறாக வழிநடத்தப்படும் பெரும்பான்மையினரின் கையில் ஏன் தேர்தல் முடிவுகளை விட்டுவிடுகி றோம்? ஆரோக்கியமான ஜனநாயகம் நிலைக்க முடி யாத இந்தப் பரிதாபமான சூழல் தமிழ்நாட்டில் தான் - மிகச்சிறந்த கலாசாரத்துக்கும் இலக்கியத்துக்கும் பெயர்போன, தந்தை பெரியாரின் புரட்சிகரமான சீர்திருத்தச் சிந்தனைகளுக்குப் பெயர் போன தமிழ்நாட் டில் தான் - நிலவுகிறது.

கல்வியிலும் கலாசாரத்திலும் வலுவான சமூகமான எனது ஈழத் தோழர்கள் மிகவும் மேம்பட்ட நிலையில் இருக்கிறார்கள் என்பது எனக்கு உறுதியாகத் தெரியும். பணத்துக்காகவோ வேறு சில சலுகைகளுக்காகவோ தங்களது வாக்குகளை அவர்கள் விற்கமாட்டார்கள். அடுத்து, எப்போது தேர்தல் நடந்தாலும், வேட்பாளர்களின் தகுதியின் அடிப்படையிலும் அரசியல் கட்சிகளின் தேர்தல் வாக்குறுதிகளின் அடிப்படையிலும்தான் தங்கள் பிரதிநிதிகளைத் தேர்ந்தெடுப்பார்கள். ஆனால், 40 ஆண்டுகளாக ஒரு பத்திரிகையாளனாக இலங்கை விவகாரங்களைக் கூர்ந்து கவனித்து வருவதன் அடிப்படையில் உங்களிடையே ஒரு பிரச்னை இருப்பதையும் நானறிவேன். உங்களில் பலர், அறிவால் வழிநடத்தப்படுவதை விட உள்ளத்தில் பொங்கிவரும் உணர்ச்சிகளால் அதிகம் உந்தப்படுகிறீர்கள். கோபமும் பரஸ்பர அவநம்பிக்கையும்தான் நம் முடிவுகளை நிர்ணயிக்கின்றன. 'நாம்' என்பதை விட 'நான்' என்ற உணர்ச்சிதான் ஆதிக்கம் செலுத்துகிறது. சிங்கள ஆட்சியாளர்கள் மட்டுமன்றி, நிதியுதவிக்காகவும் மனித உரிமைகளுக்காகவும் நாம் எதிர்பார்த்து நிற்கும் உலக வல்லரசுகள் மத்தியிலும், மரியாதைக்குரிய, சக்தி வாய்ந்த ஒரு தமிழ்ச் சமூகமாக நம்மை உடனடியாக வெளிக்காட்டிக் கொள்ள, இந்த சமூக அவலம் சரிசெய்து கொள்ளப்பட வேண்டியது அவசரமான அவசியம். பிளவுபட்ட சமுதாயம், வெளியாட்களின் ஆதிக்கத்துக்கு எளிதில் உட்பட்டுவிடும் என்பது நமக்குத் தெரிந்ததே.

ஈழ அரசியல் தலைவர்கள், சமூகத்தின் கற்றறிந்த அறிவார்ந்த பிரிவினர் மற்றும் கருத்துருவாக்கம் செய்யும் பிற அங்கத்தினர்கள் மனங்களில் எனது இந்தக் கூக்குரல் ஒரு மாறுதலை ஏற்படுத்துமேயானால், நிச்சயமாக, ஒருங்கிணைந்த ஒரு தமிழ்ச் சமூகமாக நாம் வலுப்பெறுவது மட்டுமல்லாமல், நீண்ட காலமாக வன்முறை நிறைந்த பிரிவினைகளாலும் பொருளாதார நெருக்கடியாலும் பாதிக்கப்பட்ட ஒரு நாட்டில் மீண்டும் அமைதியையும் பொருளாதார வளர்ச்சியையும் கட்டமைக்கவும் நம்மால் முடியும்.

இந்த ஈழநாடு கட்டுரைகளில் நான் கனவு கண்டு வரும் வசந்தகாலம், நமது உறுதியான மனவலிமையாலும் தொடர் முயற்சிகளாலும் கோணேஸ்வரர், திருக்கேதீஸ்வரர் மற்றும் நல்லை கந்தன் அருளாலும் நனவானால், இரவின் இருளில் இரகசியமாக அகதிகள் படகுகள் புறப்படும் நிலை மாறி, அயல்நாடுகளில் குடியேறியுள்ள நமது சுற்றத்தினரும் மீண்டும் தாய் நாடு வர விரும்பும் நிலை உருவாகும்

மீண்டும் சந்திப்போம். வணக்கம்.

தினகரன்



# ராகுல் காந்தியின் அரசியல் எதிர்காலம் குறித்து கேள்விகளை எழுப்பும் நீதிமன்ற தீர்ப்பு



வீரகத்தி தனபாலசிங்கம்

எதிர்க்கட்சிகளின் அரசியல்வாதிகளுக்கு எதிராக அரசாங்கங்கள் நீதித்துறையை பயன்படுத்துவது என்பது இன்று பெருமளவுக்கு வழமையானதாகி விட்டது. அதுவும் குறிப்பாக எமது தெற்காசிய நாடுகளில் இந்த போக்கு அண்மைக் காலமாக தீவிரமடைந்திருக்கிறது. இலங்கையில் இதற்கு பல உதாரணங்களைக் கூறமுடியும்.

மிகவும் பிந்திய உதாரணங்களாக இந்திய காங்கிரஸ் தலைவர் ராகுல் காந்திக்கு குற்றவியல் அவதூறு வழக்கு ஒன்றில் இருவாரங்களுக்கு முன்னர் குஜராத் மாநில நீதிமன்றம் ஒன்று விதித்த இரு வருட சிறைத்தண்டனையையும் பாகிஸ்தானின் முன்னாள் பிரதமர் இம்ரான் கானுக்கு எதிராக தற்போதைய அரசாங்கம் தொடுக்கும் பல வழக்குகளையும் கூறமுடியும்.

எதிரணி தலைவர்கள் அடுத்த தேர்தல்களில் பங்கேற்பதை தடுப்பதை நோக்கமாகக் கொண்டே அரசாங்கங்கள் அவர்களுக்கு எதிராக வழக்குகளை தாக்கல் செய்கின்றன. பல வழக்குகள் சோடிக்கப்பட்ட குற்றச்சாட்டுக்களின் அடிப்படையிலும் அமைவதை காணக்கூடியதாக இருக்கிறது.

ராகுலுக்கு எதிராக வழங்கப்பட்ட தீர்ப்பு அவரின் அரசியல் எதிர்காலம் குறித்த கேள்விகளை எழுப்பியிருக்கிறது.

2019 லோக்சபா தேர்தலின்போது கர்நாடகா மாநிலத்தில் பிரசாரக்கூட்டம் ஒன்றில் 'மோடிகள்' குறித்து ராகுல் தெரிவித்த கருத்தே அவருக்கு சிக்கலை ஏற்படுத்தியிருக்கிறது.

'என் மனதில் ஒரு கேள்வி எழுகிறது. இந்த கள்வர்கள் எல்லோரும் மோடி, மோடி, மோடி என்ற கடைசிப்பெயரை ஏன் கொண்டிருக்கிறார்கள்? நிரவ் மோடி, லலித் மோடி, நரேந்திர மோடி. மேலும் ஆராயப்போனால் மேலும் பல மோடிகள் வருவார்கள்" என்று அவர் கூறினார். நிரவ் மோடி, லலித் மோடி என்பவர்கள் நிதி மோசடிகளை செய்துவிட்டு இந்தியாவை விட்டு தப்பிச்சென்று வெளிநாடுகளில் வாழும் பெரும் கோர்ப்பரேட் முதலாளிகள். இவர்களின் பெயர்கள் 'இனடர்போலின்" பட்டியலில் இருக்கிறது. லலித் மோடி கிரிக்கெட் நிருவாகியாகவும் இருந்தவர். இந்தியன் பிரிமியர் லீக்கை தாபித்து அதன் தொடக்க கால தலைவராகவும் இருந்தவர்.

மோடிகள் சகலரும் 'கள்வர்கள்" என்று வியாக்கியானம் செய்யப்படக்கூடியதான தொனியில் அமைந்த ராகுலின் பேச்சு மோடி சமூகத்தைச் சேர்ந்தவர் என்ற வகையிலும் தனிப்பட்ட முறையிலும் தனக்கு பெரும் பாதிப்பை ஏற்படுத்தியதாக பிரதமர் மோடியின் சொந்த மாநிலமான குஜராத்தின் சட்'டசபையின் பாரதிய ஜனதா உறுப்பினர்களில் ஒருவரான புர்னேஷ் மோடி குற்றவியல் அவதூறு வழக்கை தொடுத்தார். ஆனால் ஒரு கட்டத்தில் அதை நிறுத்திவைக்கும்படி அவரே நீதிமன்றத்தில் மனுவொன்றை தாக்கல் செய்ததை அடுத்து நான்கு வருடங்களாக வழக்கு விசாரணைக்கு எடுக்கப்படவில்லை.

திடீரென்று புர்னேஷ் மோடி அந்த மனுவை இவ்வருடம் பெப்ரவரி மாதம் திரும்பப்பெற்றுக்கொண்டதையடுத்து சில வாரங்களுக்குள்ளாக துரிதமாக வழக்கை விசாரணை செய்த குஜராத் நீதிமன்றம் ராகுலுக்கு இரு வருட சிறைத் தண்டனை விதித்தது. ஆனால் அவரை உடனடியாகவே பிணையில் விடுதலை செய்த அந்த நீதிமன்றம் மேல்நிலை நீதிமன்றம் ஒன்றில் மேன்முறையீடு செய்வதற்கு அனுமதிக்குமுகமாக தண்டனையை ஒரு மாத காலத்துக்கு இடைநிறுத்தியது.

தீர்ப்புக்கு மறுதினமே ராகுலை லோக்சபா உறுப்பினர் பதவியில் இருந்து தகுதி நீக்கம் செய்தது பாராளுமன்ற செயலகம். உத்தியோகபூர்வ வாசஸ்தலத்தில் இருந்து அவர் வெளியேறுவதற்கு ஒரு மாத கால அவகாசம் வழக்கப்பட்டிருக்கிறது.



**அரசியலுக்கு பொருத்தமற்றவர் என்று ராகுலை நீண்டகாலமாக விமர்சனம் செய்துவரும் இந்திய பிரதமர் மோடியும் பாரதிய ஜனதாவும் அவரை இப்போது தங்களுக்கு ஓர் அச்சுறுத்தலாக நோக்குகிறார்களா?**

இதன் காரணமாக ராகுல் அடுத்த வருடம் நடைபெறவிருக்கும் லோக்சபா தேர்தலில் மாத்திரமல்ல, சிறைத்தண்டனை காலமான இரு வருடங்கள் உட்பட எட்டு வருடங்களுக்கு எந்தவொரு தேர்தலிலும் போட்டியிட முடியாமல் போகக்கூடிய ஆபத்து இருக்கிறது. மேன்முறையீட்டு வழக்கில் மேல்நிலை நீதிமன்றம் வழங்கக்கூடிய தீர்ப்பில்தான் அவரின் அரசியல் எதிர்காலம் தங்கியிருக்கிறது.

இந்திய உச்சநீதிமன்றம் பத்து வருடங்களுக்கு முன்னர் வழங்கிய வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த தீர்ப்பொன்றின் பிரகாரம் நீதிமன்றத்தினால் குற்றவாளியாக காணப்பட்டு இரு வருடங்கள் அல்லது அதற்கும் கூடுதலான கால சிறைத்தண்டனை விதிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினரின் அல்லது மாநில சட்டசபை உறுப்பினரின் பதவி உடனடியாகவே முடிவுக்கு வந்துவிடும். சிறைவாசத்துக்கு பிறகு 6 வருடங்கள் அவர் மக்களால் தெரிவு செய்யப்படும் எந்தவொரு பதவிக்கும் தேர்தலில் போட்டியிடமுடியாது.

கலாநிதி மன்மோகன் சிங் பிரதமராக இருந்தபோது உச்சநீதிமன்றத்தின் அந்த தீர்மானத்தை மாற்றியமைக்க பாராளுமன்றத்தில் அவசரச்சட்டம் ஒன்றைக் கொண்டுவந்தார். ஆனால் அதை கடுமையாக எதிர்த்த ராகுல் செய்தியாளர்கள் சந்திப்பொன்றில் அந்த சட்டமூலத்தின் பிரதியை கிழித்தெறிந்தார். அதையடுத்து மன்மோகன் சிங் சட்டத்தை நிறைவேற்றும் முயற்சியை கைவிடவேண்டியதாயிற்று.

குற்றவாளிகளாகக் காணப்பட்டு சிறைத்தண்டனை விதிக்கப்படும் பாராளுமன்ற உறுப்பினர்களும் சட்டசபை உறுப்பினர்களும் தொடர்ந்தும் மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்துபவர்களாக இருக்கக்கூடாது என்ற நேர்மையான காரணத்துக்காக ராகுல் தங்களது காங்கிரஸ் அரசாங்கத்தின் பிரதமரே கொண்டுவந்த சட்டத்துக்கு எதிர்ப்பை வெளிக்காட்டியிருக்கக் கூடும். ஆனால் அந்த எதிர்ப்பு ஒருநாள் தனக்கே வினையாக வரும் என்று அவர் ஒருபோதும் நினைத்திருக்கமாட்டார்.

குஜராத் நீதிமன்ற தீர்ப்பும் பாராளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து அவரின் தகுதி நீக்கமும் இந்தியாவுக்கு மூன்று பிரதமர்களைத் தந்த பிரபல்யமான அரசியல் குடும்பத்தின் வாரிசான 52 வயதான ராகுலுக்கு மக்கள் மத்தியில் பெருமளவு அனுதாபத்தைக் கொண்டுவருமா? அவரது அரசியல் எதிர்காலத்துக்கு அனுகூலமாக அமையுமா அல்லது பின்னடைவாக அமையுமா? என்று இந்திய அரசியல் அரங்கிலும் ஊடகங்களிலும் வாதங்கள் மூண்டிருப்பதை காணக் கூடியதாக இருக்கிறது.

சட்டரீதியாகவும் அரசியல் ரீதியாகவும் போராடப்போவதாக கூறியிருக்கும் ராகுல் இந்தியாவின் குரலுக்கான தனது போராட்டத்தில் எந்த விலையையும் செலுத்தத் தயாராயிருப்பதாக சூளுரைத்திருக்கிறார். முக்கியமான எதிர்க்கட்சி தலைவரான அவருக்கு குஜராத் நீதிமன்றம் ஓரளவு மென்மையான தண்டனையை வழங்கியிருக்கலாம் என்று சில அரசியல் வாதிகளும் அவதானிகளும் கருத்து வெளியிட்டிருந்தார்கள்.

மோடிகள் குறித்து ராகுல் பேசிய கர்நாடகா மாநிலத்தின் நீதிமன்றம் ஒன்றிலேயே அவருக்கு எதிரான குற்றவியல் அவதூறு வழக்கு தாக்கல் செய்யப்பட்டிருக்கவேண்டும் என்றும் குஜராத் நீதிமன்றத்தில் வழக்கு தொடுக்கப்பட்டமை முற்றுமுழுதாக அரசியல் நோக்கம் கொண்ட செயல் என்றும் விமர்சனங்கள் முன்வைக்கப்படுகின்றது. மேன்முறையீட்டு மனு மீதான விசாரணையில் இது தொடர்பிலான சட்ட ரீதியான சர்ச்சைகள் கிளம்புவதற்கு வாய்ப்பு இருப்பதாக எதிர்பார்க்கப்படுகிறது.

ராகுலின் தகுதி நீக்கம் நீதிமன்றத்தின் தீர்ப்பின் இயல்பான விளைவு. சட்டத்தின் முன்னால் சகலரும் சமத்துவமானவர்களே என்று ஆளும் பாரதிய ஜனதா கூறிய அதே வேளை தீர்ப்பு வழங்கப்பட்ட தினம் இந்திய ஜனநாயகத்துக்கு கரிநாள் என்றும் ராகுலினதும் எதிர்க்கட்சிகளினதும் குரல்களை ஒடுக்குவதன் மூலம் ஜனநாயகத்தின் கழுத்தை திருகுவதற்கு ஆளும் கட்சி முயற்சிக்கின்றது என்றும் காங்கிரஸ் தலைவர்கள் கண்டனம் தெரிவித்திருக்கிறார்கள்.

குஜராத் நீதிமன்றத்தின் தீர்ப்பை மேல்நிலை நீதிமன்றம் ஒன்றில் வைத்து தள்ளுபடி செய்யமுடியும் என்பது அவர்களின் நம்பிக்கையாக இருக்கிறது

ராகுல் குற்றவாளியாக காணப்பட்ட சூழ்நிலை சற்று வித்தியாசமானது என்று இந்தியாவின் முக்கியமான பத்திரிகைகள் எழுதியிருக்கின்றன. அவருக்கு எதிராக வழக்கை தொடுத்துவிட்டு பிறகு அதை விசாரணை செய்யாமல் நிறுத்திவைக்குமாறு மனு தாக்கல் செய்தவர் நான்கு வருடங்களுக்கு பிறகு சடுதியாக பெப்ரவரியில் அதை பாரதிய ஜனதாவின் உயர்மட்டத்தின் தூண்டுதலின் பேரில்தான் திரும்பப்பெற்றிருக்க வேண்டும் என்பதே இந்திய அரசியல் அரங்கில் பரவலான கருத்து

பெரு முதலாளித்துவ நிறுவனமான அதானி குழுமத்தின் கோர்ப்பரேட் ஊழல்கள் மற்றும் முறைகேடுகளை விசாரணை செய்வதற்கு பாராளுமன்றத்தின் இரு சபைகளின் உறுப்பினர்களையும் உள்ளடக்கிய கூட்டு பாராளுமன்ற குழுவொன்றை நியமிக்கவேண்டும் என்ற கோரிக்கையின் விளைவாக சபை நடவடிக்கைகள் அடிக்கடி குழப்பத்துக்குள்ளான ஒரு சூழ்நிலையில் ராகுலுக்கு எதிரான தீர்ப்பு வந்திருப்பதை அவதானிகள் குறிப்பாக சுட்டிக்காட்டுகிறார்கள்.

குஜராத் மாநிலத்தை சேர்ந்தவர்களான பிரதமர் மோடிக்கும் அதானி குழுமத்தின் தலைவரான கௌதம் அதானிக்கும் இடையிலான சர்ச்சைக்குரிய தொடர்புகள் குறித்து ராகுல் அண்மைக்காலமாக பாராளுமன்றத்தில் காரசாரமாக பேசி வந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ராகுலை அரசியலுக்கு பொருத்தமில்லாத -விவேகமில்லாத ஒரு அரசியல்வாதி என்று நீண்டகாலமாக விமர்சனம் செய்துவந்திருக்கும் பாரதிய ஜனதா தலைவர்கள் இப்போது அவரை அதுவும் அடுத்தவருடம் பொதுத்தேர்தல் நடைபெறவிருக்கும் நிலையில் அச்சுறுத்தலாக நோக்குகிறார்களா?

ராகுல் தலைமையில் ஐந்து மாதங்களாக முன்னெடுக்கப்பட்டு கடந்த ஜனவரியில் முடிவுக்கு வந்த ஐக்கிய பாரத யாத்திரை ( பாரத் ஜோடோ யாத்ரா ) அவருக்கும் காங்கிரஸ் கட்சிக்கும் மக்கள் மத்தியில் பெருமளவு ஆதரவை ஏற்படுத்தியிருக்கிறது என்று கூறும் காங்கிரஸ் தலைவர்கள் அதனால் மோடியும் பாரதிய ஜனதாவும் குழம்பிப்போயிருப்பதாக நம்புகிறார்கள். அடுத்த தேர்தலில் பங்கேற்க முடியாதவாறு ராகுலை ஓரங்கட்டுவதற்கு அரசாங்கம் முயற்சிக்கிறது என்பது அவர்களின் குற்றச்சாட்டு.

ராகுலுக்கு எதிரான தீர்ப்பும் தகுதி நீக்கமும் காஙகிரஸிடம் இருந்து நீண்டகாலமாக தூரவிலகியிருந்த எதிரணி அரசியல் கட்சிகளின் தலைவர்களின் ஆதரவை அவருக்கு பெற்றுக்கொடுத்திருக்கிறது. மேற்கு வங்க முதலமைச்சர் மம்தா பானர்ஜி, தெலுங்கானா முதலமைச்சர் சந்திரசேகர ராவ், டில்லி முதலமைச்சர் அர்விந்த் கெஜ்ரிவால் மற்றும் முன்னாள் உத்தரபிரதேச முதலமைச்சர் அகிலேஷ் யாதவ் ஆகியோர் உடனடியாகவே தங்களது கடுமையான கண்டனங்களை தெரிவித்தார்கள்.

இது நாளடைவில் பாரதிய ஜனதாவுக்கு எதிராக பரந்துபட்ட அரசியல் கூட்டணியொன்றுக்கு வழிவகுக்கக்கூடும் என்று அவதானிகள் எதிர்பார்க்கிறார்கள். அடுத்த பொதுத்தேர்தலில் ஆளும் கட்சிக்கு பாரிய சவாலை தோற்றுவிப்பதற்கு எதிரணி தலைவர்களிடமிருந்து வெளிப்பட்ட நல்லெண்ணத்தை பயன்படுத்தி மெகா கூட்டணியொன்றை அமைக்க முயற்சிப்பதே ராகுலைப் பொறுத்தவரை அரசியல் சாதுரியமான செயலாக அமையும்.

ஆனால், ஐக்கிய பாரத யாத்திரைக்கு பிறகு நடைபெற்ற சில மாநிலங்களின் சட்டசபை தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி குறிப்பிடத்தக்க செயற்பாட்டை வெளிக்காட்டவில்லை. அதேவேளை கடந்த சில நாட்களாக ராகுலுக்கு எதிரான நடவடிக்கையை கண்டித்து காங்கிரஸ் நடத்திய அமைதிவழி போராட்டங்களும் கவனத்தை ஈர்க்கக்கூடிய தாக்கத்தை ஏற்படுத்தியதாக தெரியவில்லை.

தீர்ப்பும் தகுதி நீக்கமும் ராகுல் மீது மக்கள் மத்தியில் ஒரு அனுதாப அலையை தோற்றுவித்து காங்கிரஸின் தேர்தல் வாய்ப்புக்களை அதிகரிக்குமா என்பதையும் அவருக்கு நேர்ந்த கதியை மோடி அரசாங்கத்துக்கு எதிராக மக்களை அணிதிரட்டி தேர்தல் சவாலை தோற்றுவிக்க வலுவான ஓர் அரசியல் ஆயுதமாக பயன்படுத்த முடியுமா என்பதையும் அடுத்துவரும் அரசியல் நிகழ்வுப்போக்குகள் உணர்த்தும். ●

# தமிழ்த் தேசிய தலைமைகள் எங்கே போய்விட்டார்கள் என்று இந்தியா கேட்டால் என்ன பதில்?

பனங்காட்டான்











“இனப்பிரச்சனைத் தீர்வே முழு இலங்கைக்குமான தீர்வு”. “நாட்டை முன்னேற்றத்துக்குக் கொண்டு வர இதுவே இறுதிச் சந்தர்ப்பம்”.

மேற்சொன்ன இரண்டு கூற்றுகளும் கடந்த ஒரு வாரத்தில் இலங்கை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரண்டு பொது நிகழ்வுகளில் ஆற்றிய உரைகளின் தலைப்பு.

1977ம் ஆண்டு முதல் இலங்கை அரசியலில் தவிர்க்க முடியாத ஓர் ஆளுமையாக, 45 வருடங்கள் நாடாளுமன்ற உறுப்பினராக, பல்வேறு துறைகளில் அமைச்சராக, ஐந்து தடவைகள் பிரதமராக பதவி வகித்த அதிஉத்தம சிங்கள பௌத்தர் இவர்.

இவரது மூதாதையர்கள் இலங்கையின் பழம்பெரும் பௌத்த விகாரைகளின் மூலவர்கள். களனி மகாவிகாரை இவர்களின் குடும்பச் சொத்து. எதற்கெடுத்தாலும் கண்டி தலதா மாளிகைக்கு ஓடிச் சென்று மகாநாயக்கர்களிடம் ஆசீர்வாதமும் ஆசியும் வேண்டி புனித நூல்களை கைகளில் ஏற்பது ரணிலின் சிறப்பம்சம்.

இந்த ஆண்டு சிங்கள தேச சுதந்திர தின விழாவில் தீர்வு பற்றி எடுத்துக் கூறுவதாக முற்கூட்டி உறுதி கூறிய இவர், தந்திரோபாயமாக இந்நிகழ்வில் உரையாற்றுவதைத் தவிர்த்துக் கொண்டார். ஆனால், அதற்கு முன்னர் சுடுகுது மடியைப் பிடி என்றவாறு வடக்கின் தமிழ் அரசியல்வாதிகளை அழைத்து இனப்பிரச்சனை தீர்வு பற்றி பேசினார். பின்னர் சர்வகட்சி தலைவர்களின் கூட்டத்தை நடத்தினார். தீர்வுகளின் வரைவுகளைக் காட்டுங்கள் என்று அவர்கள் கேட்டதோடு அந்தக் கூட்டத் தொடர் முடிவு கண்டது.

பெப்ரவரி 4ம் திகதி காலிமுகத்திடல் நிகழ்வில் தமது படையினரின் அணிவகுப்பை நடத்தி ராணுவ பலத்தை வெளிப்படுத்தி, இதுதான் இனப்பிரச்சனைக்கான தீர்வு என்பதுபோல காட்சி கொடுத்தார். அன்றிரவு நாட்டு மக்களுக்கு இலத்திரனியல் ஊடகங்கள் வழியாக ஆற்றிய உரையில் வழமையான அரசியல்வாதிகள் பாணியில் பிரச்சனைக்குத் தீர்வு காண்பதை உலகுக்குக் காட்டுவதற்காக சில வார்த்தைகளை ‘ரொய்லற் கடதாசி’ போன்று பயன்படுத்திக் கொண்டார்.

மாறாக, இவரது ஆட்சியில் மதவாதம் விஸ்வரூபம் எடுத்து தலைவிரித்தாடுகிறது. இவரது வழிகாட்டலில் அரச இயந்திரங்கள் இதனை ஊதி வளர்க்கின்றன. தமிழரின் பூர்வீக நிலம் என்றும், தாயக பூமி என்றும் அடையாளப்படுத்தப்பட்ட வடக்கும் கிழக்குமே அதற்கான பிரதேசங்களாக்கப்பட்டுள்ளன.

ஓர் இனம், அதற்கான மொழி, அதனுடைய பிரதேசம் என்பவைகளுடன் வாழும் இடம் அதன் பூர்வீகம் என ஐ.நா.பிரகடனம் கூறுவதை ஏற்க நேரின், அந்தப் பிரதேசம் தனிநாடாகப் பிரிந்து செல்லும் தகுதி உடையது என்பதை ஏற்றுக்கொள்ளும் நிலைக்கு தள்ளப்படக்கூடாது என்பதை கருத்தில் கொண்டுள்ள சிங்களப் பேரினவாதம்இ அந்தப் பிரதேசத்தை கருவறுக்கும் திட்டமே நிலப்பறிப்பு.

1956ல் கல்ஓயாவில், இங்கினியாகல என்ற இடத்தில் ஆரம்பித்து வைக்கப்பட்ட சிங்களக் குடியேற்றம், டி.எஸ். சேனநாயக்க காலத்தில் அங்குரார்ப்பணம் செய்யப்பட்டது. இதற்காகவே தமது மகன் டட்லி சேனநாயக்கவை தமது முதலாவது மந்திரிசபையில் காணி - விவசாய அமைச்சராக நியமித்து, கிழக்கு மாகாணத்தை சிங்கள மயமாக்கும் கைங்கரியத்தை ஆரம்பித்து வைத்தார் டி.எஸ். சேனநாயக்க.

1952ல் சேர்.ஜோன் கொத்தலாவலை பிரதமராகியதிலிருந்து 1973 வரையான 22 வருடங்கள் டட்லி சேனநாயக்க, எஸ். டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க, டாக்டர் டபிள்யு. தகநாயக்க, சிறிமாவோ பண்டாரநாயக்க ஆகியோர் பிரதமர்களாக இருந்த அனைத்து கட்சிகளின் அரசாங்கத்திலும் காணி அமைச்சராகவிருந்து சிங்களக் குடியேற்றத்தை கச்சிதமாக நிறைவேற்றி வந்தவர் சி.பி.டி.சில்வா. அரசியலுக்கு வருவதற்கு முன்னர் பொல்லனறுவ மாவட்ட காணி அதிகாரியாகக் கடமையாற்றிய இவரது கனவு கிழக்கை சிங்கள பிரதேசமாக மாற்றுவதாக இருந்தது.

1977ல் ஆட்சிக்கு வந்த ஜெ.ஆர்.ஜெயவர்த்தன மகாவலி திட்டத்தை வேகப்படுத்த காமினி திசநாயக்கவை அமைச்சராக்கினார். மட்டக்களப்பின் கல்குடாவுக்கு மாதுறு ஓயா என்ற பெயரில் திசை திருப்பப்பட்ட மகாவலி, பல்லாயிரம் சிங்களக் கைதிகளை குடும்பம் குடும்பமாக அங்கு குடியேற்றியது. அதன் தொடர்ச்சி இன்றும் வன்னி மாவட்டத்தை இலக்கு வைத்து அச்சுறுத்தி வருகின்றது.

ஜே.ஆர்.ஜெயவர்த்தன பயங்கரவாத தடைச்சட்டத்தை அமுல்படுத்தியதிலிருந்து வடமாகாணம் சிங்கள படைகளின் குடியேற்றப் பிரதேசமாக மாற்றப்பட்டது. இலங்கை ராணுவத்தின் ஐந்தில் நான்கு பங்கினர் தமிழர் தாயகத்தில் குடியேற்றப்பட்டனர். யுத்தம் முடிந்து ஒன்றரை தசாப்தங்களாகின்றபோதிலும் ராணுவ நிர்வாகம் குறைக்கப்படவில்லை. முக்கியமாக வடக்கு கிழக்கின் எல்லைப்புறங்கள் - தென்னை மரவாடி, குச்சவெளி, நாயாறு, மணலாறு போன்ற இடங்கள் சிங்கள பிரதேசங்களாக மாற்றப்பட்டு வடக்கும் கிழக்கும் துண்டாடப்படுகிறது.

**மீனவர் பிரச்சனைக்கு ஒற்றைப் படகில் போராட்டம் நடத்திய, விவசாயிகள் பிரச்சனைக்கு நெல் முளைத்த வயலில் ஏர் பூட்டிப் போராட்டம் நடத்திய, எரிபொருள் தட்டுப்பாட்டுக்கு துவிச்சக்கர வண்டியில் வீதியில் பயணித்து காட்சி கொடுத்த... ரணிலினால் தங்களின் சட்டமா அதிபர் என்று புகழாராம் சூட்டப்பட்ட அந்தத் தலைவர் எங்கே போனார்?**

கடந்த சில மாதங்களாக சிங்கள ராணுவத்தின் காணி அபகரிப்பின் சிறுபகுதிகள் மீளளிக்கும் ஏற்பாடுகளுக்கு பெருமளவில் பிரசித்தம் கொடுக்கும் ரணில் அரசு, அதற்கு மாற்றீடாக தமிழர் களின் புராதன சைவ வழிபாட்டு இடங்களை தொல்பொருள் திணைக்களத்தினதும், அதனுடன் இணைந்து இயங்கும் மற்றைய அரச திணைக்களங்களின் உதவியுடன் பௌத்த பாரம்பரிய நிலங்களாக மாற்றும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டு வருகிறது.

தமிழர் தாயக அரசியல் கட்சிகள், முக்கியமாக தமிழ் தேசியத்தை தங்கள் கட்சிகளின் பெயர்களுக்கு முன்னால் சூட்டியிருக்கும் கட்சிகளின் பிரமுகர்கள், அதன் தலைவர்கள் பதவிகளுக்காக கூறு கூறாகப் பிரிந்து பிளவுபட்டும் நிற்கும் சூழ்நிலையை சிங்கள் பௌத்த பேரினவாத அரசு தனக்கு சாதகமான காலமாகப் பயன்படுத்துகிறது.

காணாமலாக்கப்பட்டோர் உறவுகளின் போராட்டம் ஆண்டுக் கணக்கில் தொடர்ந்தும் அதற்கான பரிகாரம் கிடைக்கவில்லை. இது போதாதென்று தினமும் வெவ்வேறு தேவைக்கான போராட்டங்கள் - முக்கியமாக வழிபாட்டுத் தலங்களை மீட்பதற்கான போராட்டம் இப்போது நாளாந்தமாகியுள்ளது. எந்த விடயத்தை முறையிட்டாலும் அதற்கொரு விசாரணைக்குழு அல்லது ஜனாதிபதி ஆணைக்குழு நியமிப்பது ஒரு பகடி விளையாட்டாகிவிட்டது இலங்கை அரசியலில்.

அந்த விசாரணையின் முடிவு என்ன, அறிக்கை என்ன கூறுகிறது, அதற்குரிய நடவடிக்கை என்னவென்று எப்போதும் தெரியவராது.

தமிழர் தாயகத்தின் ஒரு பகுதியாகவே காலம் காலமாக இருந்து வந்த வவனியா இப்போது சிங்களப் பிரதேசமாகிவிட்டது. வவனியா தெற்கில் முதலாவதாக ஓர் உதவி அரசாங்க அதிபர் நியமிக்கப்பட்டார். பின்னர் வவனியாவின் அரசாங்க அதிபரே ஒரு சிங்களவரானார். இப்போது வடமாகாண சபையின் பிரதம செயலாளராக இருப்பவர் முன்னர் வவுனியா அரசாங்க அதிபராக இருந்த ஒரு சிங்களவரே.

அண்மைய நாட்களில் வவனியாவின் வெடுக்குநாறிமலை உலகப் பிரசித்தி பெற்றுவிட்டது. இங்கிருந்த ஆதி சிவனாலய சிவலிங்கம் உட்பட பல விக்கிரகங்கள் அங்கிருந்து பெயர்க்கப்பட்டு ஆங்காங்கே வீசப்பட்டுள்ளன. குறுந்தூர் மலைப் பகுதியில் நீதிமன்ற உத்தரவையும் மீற படையினரின் பாதுகாப்புடன் பாரிய விகாரையொன்று நிர்மாணிக்கப்படுகிறது. வன்னியிலுள்ள முல்லைத்தீவின் தண்ணிமுறிப்புப் பகுதியில் இது இடம்பெறுகிறது.

எந்த நீதிமன்ற உத்தரவும் பௌத்த பிக்குகளை கட்டுப்படுத்தாது என்ற போக்கில் இலங்கையின் சட்டத்துறை இயங்குகிறது. பிக்குகளை மீறி நீதிமன்றம் செயற்பட்டால் நீதிபதிதான் இடமாற்றம் செய்யப்படுவார்.

சிங்கள ராணுவ சிப்பாய் ஒருவர் கனவு கண்டதால் புத்தூர் நிலாவரையில் ஓரிரவில் புத்தர் சிலையொன்று வந்ததும், கச்சதீவில் தங்கியிருக்கும் கடற்படையினருக்காக அங்கு புத்தரும் அரச மரமும் முளையிட்டதும் தமிழ் பகுதிகளில்தான் நடைபெறும். சிங்கள பிரதேசங்களில் எவர் கனவிலும் புத்தர் வரமாட்டார். அங்குள்ள படையினருக்கு முகப்பில் புத்தர் வழிபாட்டுப் பகுதி கிடையாது.

இவ்வாறாக தமிழர் வாழ்விடத்தில், அவர்கள் தாயக பூமியில் நிலம் கபளீகரம் செய்யப்படுவதையும், வழிபாட்டுத் தலங்கள் நிர்மூலமாக்கப்படுவதையும் தடுப்பதற்கு எத்தனை நாட்கள், எத்தனை மாதங்கள் மக்கள் போராட முடியும்? பொருளாதார சீர்கேட்டினால் வாழ்வாதாரத்துக்கு போராடும் அப்பாவி பொதுமக்கள், வாழ்விடத்தின், வழிபாட்டிடத்தின் பாதுகாப்புக்காக போராடுவது நித்திய பணியாகிவிட்டது.

**தமிழர் தாயகத்தில் பொது இடங்களிலும் வீதிகளிலும் நீதி கேட்டுப் போராட்டம் நடத்துபவர்கள், தமிழ்த் தேசிய கட்சிகளின் பிரதிநிதிகளதும், பிரமுகர்களினதும் இருப்பிடங்களின் முன்னால் போராட்டம் நடத்துவதே இன்று அவசரமான அவசியம்.**

இலங்கை தொடர்பிலும் இந்துக்கள் மீதும் இந்தியாவுக்கு அக்கறை இருக்கிறது என்பதால் இந்து ஆலயங்கள் அழித்தொழிக்கப்படும்போது இந்தியா ஏன் மௌனமாக இருக்கிறது என்று இலங்கை இந்துமாமன்றம் கேள்வி எழுப்பியுள்ளது. இந்தியாவிடம் உதவி கேட்பதில் எந்தத் தவறுமில்லை. கேட்கத்தான் வேண்டும்.

‘இந்த நேரத்தில் உங்கள் தலைவர்கள், உங்களால் தெரிவு செய்யப்பட்ட அரசியல் பிரதிநிதிகள் என்ன செய்கிறார்கள்?” என்று இந்தியாவிலிருந்து யாராவது திருப்பிக் கேட்டால் அதற்கு என்ன பதில் கூற முடியும்?

தேர்தல் திருவிழாக்களின்போதும் அபேட்சகர்கள் தெரிவின்போதும் கும்பிடு கையுடன் காணப்படுபவர்கள் இப்போது எங்கே தலைமறைவாகியுள்ளனர். தேர்தலின் போது ஆயிரம் ஆயிரமாக வாக்குப் பெற்ற இவர்களால் ஆகக்குறைந்தது ஓராயிரம் பேரையாவது வீதிக்கு இறக்க முடியாதா?


கட்சியின் தலைமைப் பதவிக்கு சூம் வழியாக புலம்பெயர் உறவுகளுடன் கூட்டம் நடத்துபவர்களுக்கு உள்ளூர் பிரச்சனைகளைத் தீர்க்க எவ்வாறு நேரம் கிடைக்கும்? தமிழர் தாயகபூமி மீதான இவர்களின் அக்கறையின்மை, பாராமுகம் ரணிலுக்கான பொற்காலம்.

பயங்கரவாத தடைச்சட்டத்துக்குப் பதிலாக அதனிலும் மோசமான பங்கரவாத எதிர்ப்புச் சட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது. இந்த மாதம் 3ம் திகதி நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படவுள்ள இதனை

(18ஆம் பக்கம் பார்க்க)

# ஆசிரியர் தொழிற்சங்கங்கள் மாணவர் கல்விக்கு வரமா? சாபமா?

கந்தையா அருந்தவபாலன்



இலங்கையில் இரண்டாயிரத்துக்கு மேற்பட்ட தொழிற்சங்கங்கள் பதிவு செய்யப்பட்டுள்ள போதும் அவற்றுள் மிகக்குறைந்த எண்ணிக்கையான தொழிற்சங்கங்களே உயிர்த்துடிப்புடன் இயங்கி வருவதை அவதானிக்க முடியும். இது இங்குள்ள ஆசிரிய சங்கங்களுக்கும் பொருந்தும். இலங்கையில் ஆசிரியர்களுக்கான தொழிற்சங்கம் நூறு ஆண்டுகளுக்கு மேற்பட்ட வரலாற்றைக் கொண்டது. இலங்கையில் 1920இல் முதன்முதலில் அகில இலங்கை ஆசிரியர்சங்கம் உருவாக்கப்பட்டது. இது தனியார் பாடசாலை ஆசிரியர்களுக்கானதாக இருந்தமையால் 1960களில் பெரும்பாலான பாடசாலைகள் அரசுடைமை ஆக்கப்பட்டதனால் அதுதன் முக்கியத்தை இழந்தது. பின் இலங்கை சுதந்திர ஆசிரியர் சங்கம் (1971), இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம்(1974), இலங்கை ஆசிரியர் சங்கம், இலங்கை ஆசிரியர்சேவைச் சங்கம் (1997) போன்ற பல ஆசிரியர் சங்கங்கள் உருவாகியுள்ள போதும் இன்று செயற்பாடுகளிலும் செய்திகளிலும் அதிகம் பேசப்படும் ஒரு சங்கமாக இலங்கை ஆசிரியர் சங்கமும் நபராக ஜோசப் ஸடாலினும் காணப்படுகின்றனர். சுமார் 42 இலட்சம் மாணவர்களைக் கொண்ட 10155 அரச பாடசாலைகளில் சுமார் 236000 ஆசிரியர்கள் உள்ளபோதும் 20 வீதத்திற்கும் குறைவானவர்களே இச்சங்கங்களில் உறுப்பினர்களாக உள்ளனர். இதில் பெரும்பாலானோர் பெயரளவிலான உறுப்பினர்கள் மட்டுமே. இருந்தபோதும் ஆசிரியர்களுக்கான நியாயமான கோரிக்கைகள் பலவற்றை இவை வென்றெடுத்துள்ள அதேவேளை அதுவே

இலங்கைத் தமிழர் ஆசிரியர் சங்கம்
CEYLON TAMIL TEACHERS' UNION

தாங்கள் எதையும் செய்ய முடியும் என்ற தவறான எண்ணத்தையும் அவர்களுக்கு ஊட்டியுள்ளதோ என்று பொது மக்களை மட்டுமன்றி பெரும்பாலான ஆசிரியர்களையும் எண்ண வைத்துள்ளது.

தமது உறுப்பினர்களுக்கு நியாயமான ஊதியத்தையும் ஏற்றுக்கொள்ளத்தக்க வேலை நிபந்தனைகளையும் பெற்றுக்கொடுப்பதே தொழிற்சங்கங்களின் பிரதான பணியாகும். அதற்கப்பால் தமது தொழில் சார்ந்த துறைகளின் விருத்திக்கும் ஒரு சமூக நிறுவனம் என்றவகையில் மக்களின் ஜனநாயக உரிமைகளுக்காகவும் குரல் கொடுப்பதற்கும் ஏனைய அமைப்புகளுடன் இணைந்து செயற்படவும் அவற்றிற்கு உரித்துண்டு. தமது கோரிக்கைகளை வென்றெடுப்பதற்கு தொழிற்சங்கமொன்று வேலைநிறுத்தம் உட்பட ஜனநாயக வழிகளிலான போராட்ட வடிவங்களை கைக்கொள்வதற்கான உரிமையை ஐ.நா அமைப்பு, சர்வதேச தொழிலாளர்அமைப்பு என்பன அங்கீகரித்துள்ளன. இலங்கைத் தொழிற்சங்கக் கட்டளைச் சட்டமும் வேலை நிறுத்தத்தை மறைமுகமாக அங்கீகரித்துள்ளது. எவ்வாறாயினும் தொழிற்சங்கமொன்றின் போராட்ட வெற்றியானது தனியே அச்சங்கத்தின் உறுப்பினர்களில் மட்டும் தங்கியியிருப்பதில்லை. கோரிக்கைகளின் நியாயத் தன்மை, அது தொடர்பான மக்களின் அபிப்பிராயம், ஆதரவு போன்றனவும் அதற்கு அவசியமாகின்றன. குறிப்பாக தான் சார்ந்திருக்கும் தொழிலுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள், பயனாளிகளுக்கு ஏற்படக்கூடிய பாதிப்புகள் போன்றவற்றையும் சங்கமொன்று கருத்திலெடுக்க வேண்டியது அவசியமாகும். நியாயமான கோரிக்கைகள் கூட பயனாளிகளுக்கு கூடிய பாதிப்புகளை ஏற்படுத்தும் போதும் அப்பாதிப்புகள் முடிவில்லாது தொடரும் போதும் மக்களின் அபிப்பிராயம் தொழிலாளர்க்கு எதிராகத் திரும்புவதற்கான வாய்ப்புகளும் உள்ளன. இந்தப் பின்னணியில் வைத்தே ஆசிரியர் சங்கங்களின் இன்றைய போராட்டங்களையும் நாம் நோக்கவேண்டும்.

ஆசிரியத் தொழில் என்பது சமூக நலனுடன் அதிகளவில் பின்னிப் பிணைந்த அடிப்படைத் தேவை சார்ந்த பணித்துறைத் தொழிலாகும். பொருள்சார் உற்பத்தி விநியோகத் தொழில்களிலிருந்து பெரிதும் வேறுபட்டது. பயனாளிகள் என்றவகையில கல்வி நாட்டிலுள்ள அத்தனை குடும்பங்களுடனும் நேரடியாகத் தொடர்பு பட்டிருப்பதுடன் அது எதிர்காலம் தொடர்பான உணர்வுபூர்வமான ஒரு விடயமாகவும் அவர்களால் பார்க்கப்படுகிறது. இதனால் தங்கள்



சந்ததியின் கல்வியைப் பாதிக்கும் எந்தவொரு விடயத்தையும் அவர்கள் நீண்டகாலம் சகித்துக் கொண்டு இருக்க மாட்டார்கள். கொவிட் தொற்றுக் காரணமாக இருவருடங்கள் மாணவர்களின் வழமையான கற்றல் நடவடிக்கைகளும் பரீட்சைகளும் வெகுவாகப் பாதிக்கப்பட்டிருந்தன. கல்வியாண்டு பின்தள்ளப்பட்டிருப்பதுடன் மாணவர்களிடையே அதன் தாக்கம் பல்வேறு வகையில் காணப்படுகிறது. அந்த இக்கட்டான காலத்தில் கூட ஆசிரியர்களின் சம்பளம் தொடர்பான நியாயமான போராட்டத்துக்கு மக்கள் ஆதரவை வழங்கினார்கள். இதன்காரணமாக சென்ற ஆண்டு ஜனவரியிலிருந்து ஆசிரியர்களுக்கு திருப்தியான சம்பளத்திட்டம் அமுல்படுத்தப்படுகிறது. அதன்பின்னர் இன்றுவரை ஆசிரியர் சங்கங்களினால் குறிப்பாக ஜோசப் ஸ்டாலினைச் செயலாளராகக் கொண்ட இலங்கை ஆசிரியர் சங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டு வரும் போராட்டங்கள் எவ்வளவு தூரம் ஆசிரியர்களின் நலன்களுடன் சம்பந்தப்பட்டவை என்பது கேள்விக்குரியதாக மாறி வருகிறது. அடிக்கடி போராட்டங்களுக்கு அழைப்பு விடும் ஜோசப் ஸ்டாலின் அதற்காக முன்வைக்கும் கோரிக்கைகள் குழந்தைத் தனமானவயாகக் காணப்படுகின்றன. மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் இல்லை என்பதற்கு ஒருபோராட்டம், சீருடை வழங்கப்படவில்லை என்பதற்கு ஒரு போராட்டம், போக்குவரவு வசதி இல்லை என்பதற்கு ஒரு போராட்டம் என அவ்வப்போது வாயில் வருவதையெல்லாம் கூறுவதை ஊடகங்களில் காண்கிறோம். இதன்காரணமாக அண்மையிற்கூட ஒருநாள் மாணவர்கள் தமது கல்வியை இழந்தனர்.

சென்ற ஒகஸ்ட் மாதம் நடைபெறவேண்டிய உயர்தரப் பரீட்சை காலம்பிந்தி இந்த ஆண்டின் ஆரம்பத்தில் நடந்து முடிந்தது. வழமையாக பரீட்சை முடிந்தவுடன் தொடங்கும் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் இன்னும் தொடங்கவில்லை. அதற்கு முக்கிய காரணமாகச் சொல்லப்படுவது போதியளவு ஆசிரியர்கள் மதிப்பீட்டுப் பணிக்கு விண்ணப்பிக்கவில்லை என்பதே. இதற்குப் பின்னாலும் குறித்த ஆசிரியர் சங்கமே இருப்பதாகக் குறைகூறப்படுகிறது. மதிப்பீட்டாளர்களுக்கான விசேட கொடுப்பனவுக் கோரிக்கையை ஏற்று நாளொன்றுக்கு 2000 ரூபா வழங்குவதாக அரசாங்கம் அறிவித்தும் போதிய விண்ணப்பங்கள் கிடைக்கவில்லையென கல்வி அமைச்சர் தெரிவித்திருப்பது குறிப்பிடத்தக்கது. தற்போது பல்கலைக்கழக ஆசிரியர்களும் தம்மீதான வரியறவீட்டுக்கு எதிர்ப்புத் தெரிவித்து வேலைநிறுத்தத்தில் இறங்கியுள்ளதால் விடைத்தாள் மதிப்பீட்டுப் பணிகள் தொடங்குவதற்கான உடனடிச்சாத்தியமில்லை. இதனால் ஏலவே காலம் பிந்திய சாதாரணதரப் பரீட்சை மேலும் தாமதாகப்போகிறது. இவை பற்றியெல்லாம் இந்தத் தொழிற்சங்கங்களுக்கு அக்கறை உள்ளதாகத் தென்படவில்லை. அரச பாடசாலைக் கல்வியில் ஏற்படக்கூடிய இத்தகைய காலதாமதங்கள் மாணவர்களைத் தனியார் பாடசாலைகளை நோக்கித் தள்ளும் சூழ்நிலைகளை உருவாக்கும். அரச பாடசாலையில் படித்து பல்கலைக் கழகம் சென்று பட்டம் பெற்று வேலை தேட வெளிக்கிடும்அதே காலத்தில் அதே வயதை ஒத்த மாணவன் தனியார் பாடசாலையிலும் பின் தனியார் பல்கலைக்கழகத்திலும் கற்று இளநிலைப் பட்டம் மட்டமன்றி முதுமாணிப் பட்டத்தையும் பெற்று வேலையொன்றில இணைந்துவிடும் நிலையே இன்று காணப்படுகிறது. தனியார் மயப்படுத்தலுக்கு எதிராக குரல் எழுப்பும் இச்சங்கங்கள் தமது நடவடிக்கைகள் மறைமுகமாக அதை ஊக்குவிக்கும் என்பதை உணர மறுக்கின்றன. இத்தனைக்கும் இச்சங்கங்களின் யாப்புகளில் மாணவர்நலன், கல்வித்தர மேம்பாடு என்பன முக்கிய நோக்கங்களாக குறிப்பிடப்பட்டுள்ளதைக் காணமுடிகிறது.

ஆசிரியர்களின் கற்பித்தல் பணி என்பது மதிப்பீட்டையும் உள்ளடக்கியதே. அந்தவகையில் தாம் கற்பித்த மாணவர்களின் விடைத்தாள்களை மதிப்பிடவேண்டியது அவர்களின் கடமைகளில் ஒன்று. பொதுப் பரீட்சைகளின் பெறுபேற்றுத் தரத்தை பேணும் முகமாக இப்பணி ஒழுங்கு முறைப்படுத்தப்பட்டுள்ளது. ஆசிரியர்களின் வழமையான சம்பளத்துக்கு மேலாக மதிப்பிடப்படும் ஒவ்வொரு விடைத்தாளுக்கான கொடுப்பனவுடன் நாளாந்தம் 2000 ரூபா விசேட கொடுப்பனவும் வழங்கப்படுகிறது. அத்துடன் இம் மதிப்பீட்டுப் பணி முன்னரைப்போல கொழும்பில் இல்லாது பிராந்தியங்களுக்கு பரவலாக்கப்பட்டுள்ளது. அதனால் ஒப்பீட்டு ரீதியில் மதிப்பீட்டாளருக்கு போக்குவரவுச் செலவு, உணவுச்செலவு போன்றனவும் குறைவாகும். இவற்றைவிட ஒரு ஆசிரியரின் வினைத்திறனான கற்பித்தலுக்கு விடைத்தாள் மதிப்பீடு மிகமுக்கியமானது. மாணவர்கள் எவ்விடங்களில் சறுக்குகிறார்கள், தவறான துலங்கள்களை வெளிப்படுத்துகிறார்கள் என்பதைக் கண்டறிவதற்கும் வினாத்தாள் தயாரிப்பவர்களின் எதிர்பார்ப்புகள் எவையென அறிந்து கொள்வதற்கும் அதனடிப்படையில் கற்பித்தலை மேம்படுத்த அது ஆசிரியர்களுக்கு பெருமளவு உதவுகிறது. இதற்காகவே ஒரு காலத்தில் யாழ்ப்பாணத்தைச்சேர்ந்த உயர்தர பாடங்களுக்கான ஆசிரியர்கள் பல்வேறு துறை ஆபத்துகள், சிரமங்களுக்கு மத்தியில் கிளாலி, கொம்படியூடாக சிலவேளைகளில் விமானத்திலும் மதிப்பீட்டுப் பணிக்காக கொழும்பு சென்று வந்தார்கள் என்பதை இன்றைய ஆசிரியர்கள் அறிவது அவசியம். விடைத்தாள் மதிப்பீட்டுப் பணியில் மாணவர் நலன் சார்ந்த இந்தவிடயங்கள் எவற்றையும் ஆசிரிய தொழிற்சங்கங்கள் கவனத்தில் கொண்டு செயற்படுவதாகத் தெரியவில்லை.

தொழிற்சங்கமொன்று தனது உறுப்பினர்களது நலன்கள், துறைசார் விடயங்களுக்கு அப்பால் வேறு விடயங்களுக்காக போராட்டக் களங்களைத் திறக்குமானால் அதன் பின்னால் வேறுபட்ட நிகழ்ச்சி நிரல்

ලංකා ගුරු සංගමය
இலங்கை ஆசிரியர் சங்கம்
CEYLON TEACHERS' UNION

காணப்படுகின்றது என்பதை ஊகிக்கமுடியும். குறிப்பாக அதன் பின்னால் அரசியல் நோக்கங்கள் இருக்கக் கூடும். இலங்கையில் கடந்த காலத்தில் சில ஆசிரியர் தொழிற்சங்கங்கள் அரசியல் கட்சிகளுக்கு சார்பான போக்கை வெளிப்படுத்தியிருந்தாலும் அவை தமது தனித்துவத்தை காப்பாற்றியே வந்துள்ளன. இந்தவகையில் இலங்கை சுதந்திர ஆசிரியர் சங்கம் சிறிலங்காசுதந்திரக் கட்சியின் சார்பானதாகவும் இலங்கை தமிழர் ஆசிரியர் சங்கம் இலங்கைத் தமிழரசுக்கட்சி சார்பானதாகவும் காணப்பட்ட போதிலும் அவை ஒருபோதும் அக்கட்சிகளின் அரசியல் நிகழ்ச்சி நிரலுக்குள் தம்மை ஈடுவைக்காது தனித்துவத்தை பேணி வந்துள்ளன. ஆனால்இன்று இலங்கை ஆசிரியர் சங்கம் இதிலிருந்து முற்றாக விலகி ஓர் அரசியல் கட்சிபோலச்செயற்படுவது போலத் தோன்றுகிறது. இலங்கை ஆசிரியர் சங்கம் தான் ஒரு தொழிற்சங்கம் என்பதை மறந்து மக்கள் விடுதலை முன்னணியின் ஓர் அரசியல் அலகாக முழுமையாகச் செயற்பட்டு வருவதை அதன் அண்மைக்கால ஊடக அறிக்கைகளும் செயற்பாடுகளும் வெளிப்படுத்தி நிற்கின்றன. இதனால் இச்சங்கத்தின் செயற்பாடுகள் தொடர்பாக பொதுமக்கள் மட்டுமல்ல ஆசிரியர்களும் எதிர்மறையான விமர்சனங்களை முன்வைக்கத் தொடங்கியுள்ளனர்.

தற்போது தமிழ் மக்களிடத்தில் தன்னைப் பிரபல்யப்படுத்த மக்கள் விடுதலை முன்னணி முயல்வதற்குச் சமாந்தரமாகத் தமிழ் ஆசிரியர்கள் மத்தியில் தன்னை வளர்க்கும் நோக்கில் இலங்கை ஆசிரியர் சங்கமும் முயற்சித்து வருவதை அவதானிக்க முடியும். இதற்கான களநிலைமையை இலங்கைத் தமிழர் ஆசிரிய சங்கம் வழங்கியுள்ளது என்ற கசப்பான உண்மையை ஏற்றுக் கொள்ள வேண்டும். ஒரு காலத்தில் தமிழ் ஆசிரியர்களுக்கான உறுதியான தொழிற்சங்கத் தலைமையை இலங்கை தமிழர் ஆசிரிய சங்கம் வழங்கியது என்பதை மறுக்க முடியாது. வடக்கு, கிழக்கு மட்டுமல்லாமல் மலையகம், மேல்மாகாணம் போன்ற பிரதேசங்களிலும் கணிசமான உறுப்பினர்களைக் கொண்ட சங்கமாக இருந்தமையால் அதன் பின்னால் தமிழ் ஆசிரியர்கள் அணிவகுத்தனர். இதனால் ஆசிரியர்க்கான எந்தவொரு தேசிய தொழிற் சங்கமும் தமிழ்ப்பிரதேசத்தில் அல்லது தமிழ் ஆசிரியர்களிடத்து காலூன்ற முடியாதிருந்தது. ஆனால் இன்று அச்சங்கம் இருக்கிறது என்பதை எப்போதாவது வரும் ஊடக அறிக்கை மூலமே ஆசிரியர்கள் தெரிந்து கொள்ளும் நிலை காணப்படுகிறது. இச்சங்கத்தின் உறுப்பினர்களில் கணிசமானோர் இளைப்பாறி விட்டனர். ஆசிரியர் நலன்சார்ந்த

(18ஆம் பக்கம் பார்க்க)

# எரிபொருள் விலை குறைப்பும் மக்களின் மனவெளிப்பாடும்

பொருளாதாரத்தின் அச்சாணியாக இருக்கிறது எரிபொருள். சிறு, நடு, பெரும் முதலீடுகளாகட்டும் நமது தனிப்பட்ட வாழ்வு ஆகட்டும் அனைத்தும் ஒழுங்காக – சிறந்த முகாமையோடு பின்பற்றுவதற்கு போக்குவரத்து வலைப்பின்னலே அடிப்படையாக உள்ளது. ஒரு நாட்டின் பொருளாதாரத்தில் அந்தளவுக்கு செல்வாக்கு செலுத்துகின்றது எரிபொருள் சக்தி.

நாடு பொருளாதார நெருக்கடியில் சிக்கியபோது எரிபொருளை பெறமுடியாது நாடே முடங்கியது. இது நாட்டின் பொருளாதாரத்தை மேலும் பின்னகர்த்தியது. தொடர்ச்சியாக எரிபொருட்களின் விலைகள் மளமள வென்று வேகமாக உயர்ந்தன. 137 ரூபாயாக இருந்த ஒரு லீற்றர் பெற்றோல் கள்ளச்சந்தையில் 2 ஆயிரம் ரூபாய் வரை உயர்ந்தது. அப்படியிருந்தும் பெற்றோலை பெறுவது என்பது மிகவும் கடினமானது. ஆனால், ஓரளவுக்கு நிலைமை சுமுகமாகி – அதனைத் தொடர்ந்து தக்க வைக்க எரிபொருளுக்கு கோட்டா முறைமை அறிமுகமாகியது. பெற்றோலின் விலை 400 ரூபாயானாலும் அனைவராலும் அதை தொடர்ச்சியாகப் பயன்படுத்தாத நிலை... இந்நிலையில், சர்வதேச சந்தையில்105 டொலராக இருந்த ஒரு பீப்பாய் மசகு எண்ணெய் இப்போது 70 – 75 டொலர்களாகக் குறைந்துள்ளது. இந்த நிலையில், டொலருக்கு நிகரான ரூபாயின் மதிப்பும் அதிகரித்துள்ளது. இந்த வேளையில் எரிபொருட்களின் விலைகள் முதன்முறையாகக் குறைக்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் மக்கள் தங்கள் அபிப்பிராயங்களை வெளியிடுகின்றனர்....

## கியூ. ஆர். முறையை நீக்கக்கூடாது!

**அ. ஜெயசீலன்**
பாஷையூர்



எரிபொருள் நாட்டின் முக்கியமான - மனித வாழ்க்கைக்கு இன்றியமையாத ஒன்றாகக் காணப்படுகின்றது. நிச்சயமாக எங்களுடைய கருமங்களை விரைவாக ஆற்ற வேண்டிய தேவை காணப்படுகின்றது. அவ்வாறான தேவைகளை நிறைவேற்றுவதற்கு வாகனம் கட்டாயமாகத் தேவைப்படுகின்றது.

இலங்கையைப் பொறுத்த வரைக்கும் எரிபொருளில் இயங்கும் மோட்டர் சைக்கிள்கூட இல்லாத வீடு என்பது இல்லை அல்லது அறவே இல்லை என்றே கூற வேண்டும். எரிபொருள் விலையேற்றத்தால் பொதுமக்கள் பல்வேறு இடர்பாட்டுக்கு முகம் கொடுத்தார்கள். ஒரு வாரத்துக்கு 5 முதல் 6 லீற்றர் எரிபொருள் தேவையான வாகனம் 400 ரூபாய் விலை இருக்கும் போது எரிபொருளுக்காக வாராந்தம் மூவாயிரம் ரூபாய்க்கு மேல் செலவிட வேண்டியிருந்தது.

தற்போது விலை குறைக்கப்பட்டது மக்களுக்கு ஒரு சந்தோசத்தையும் நம்பிக்கையையும் ஏற்படுத்தி இருக்கின்றது. பெற்றோல் மாத்திரமல்ல ஏனைய பொருட்களும் விலை குறைக்கப்பட்டுள்ளன. குறிப்பாக, 80 ரூபாய் விற்ற டீசல் இன்று 300 ரூபாய்க்கு மேல் விற்கக் கூடிய நிலை காணப்பட்டாலும் பொதுவாக பல சரக்கு பொருட்களாக இருந்தாலும் விளம்பர பலகைகளில் ஒரு நேரத்தில் 300 ரூபாய் விற்ற பொருட்கள்கூட இன்று பல மடங்காக விலைகள் குறைந்துள்ளன. 300 ரூபாய் விற்ற அரிசி இன்று 200 ரூபாயாக குறைந்து விட்டது.

அன்றாடம் நாங்கள் மக்கள் பயன்படுத்தும் உணவு பொருட்கள் கணிசமாக விலை குறைந்துள்ளன. இந்த விலையேற்றத்திற்கு காரணம் எரிபொருள்தான். குறிப்பாக ஒரு மரக்கறியோ ஏனைய பொருட்களோ ஏற்றி இறக்கல் மற்றும் ஏனைய செயல்பாடுகள் வாகனங்கள் மூலம் முன்னெடுக்கப்படும். அவ்வாறு வாகனங்களுக்கு பாவிக்கும் எரிபொருள் விலை அதிகரிப்பின் காரணமாகவே பொதுமக்கள் அதிகரித்த விலையில் பெற வேண்டிய நிலை காணப்பட்டது.

ஆனால், இன்று அந்த எரிபொருள் விலை குறைப்பால் ஏனைய பொருட்களின் விலைகளும் குறைவடைந்துள்ளன. இன்னும் மேலும் குறைவடையும் என நாங்கள் எதிர்பார்க்கின்றோம்.

தற்போது எரிபொருள் விநியோகம் கியூ. ஆர். முறையில் விநியோகிக்கப்படுகின்றது. இந்த எரிபொருள் விநியோகமானது தற்போது சீராக முன்னெடுக்கப்படுகின்றது. அந்த சீரான முறையை இந்த அரசாங்கம் தொடர்ச்சியாக பேண வேண்டும். ஏனென்றால், ஒரு வாகனத்தை வைத்திருக்கும் உரிமையாளருக்கு வாராந்தம் 5 லீற்றர் கியூ. ஆர். முறையில் வழங்கப்பட்டால் அவர் அந்த ஐந்து லீற்றருக்குள்தான் வாகனத்தை பயன்படுத்த கட்டுப்பட்டுள்ளார்.

அந்தக் கட்டுப்பாடு மிக முக்கி யமானது. குறிப்பாக கியூ. ஆர். எங்களை கட்டுப்படுத்துகின்றது. அது ஒரு நல்ல விடயம். எரிபொருள் என்பது இறக்குமதி செய்யப்படும் ஒரு பொருளாகவே காணப்படுகி றது. அந்நிய செலாவணி வெளியே செல்கின்றது. அந்நிய செலாவ ணியை நாங்கள் எமது நாட்டுக் குள்ளே பேண முடியாத நிலை காணப்படுகிறது.

இதன் காரணமாக எரிபொருள் பாவனையை கட்டுப் படுத்துவதற்கு அரசாங்கத்தால் கொண்டு வரப்பட்ட ஒரு நல்ல - சிறந்த முறை இந்த கியூ. ஆர். முறை இதை தொடர்ச்சியாக அரசாங்கம் பேண வேண்டும்.




## சர்வதேச விலைக்கு நிகராக குறையுங்கள்



**மைக்கல்**
சமூக ஆர்வலர்

தற்போது நாட்டில் எரிபொருள் விலை குறைவடைந்துள்ளது. ஆனால், குறைக்கப்பட்ட அளவு சர்வதேச விலையுடன் ஒப்பிட்டு பார்க்கும்போது 150 ரூபாய்க்கு குறைக்கக்கூடிய நிலை காணப்படுகின்றது.

அப்படி இருந்தும் பெற்றோலுக்கு 60 ரூபாய் குறைத்து இருக்கின்றார்கள். இந்த அளவு குறைத்ததுபோதாது என்றாலும் இங்கே சிறிய அளவு தொகையை குறைத்ததானது, பொதுமக்களுக்கு கொஞ்சம் நன்மையை ஏற்படுத்தி இருக்கின்றது.

போக்குவரத்து கட்டணங்கள் குறைக்கப்பட்டு இருக்கின்றன. மரக்கறி விலைகள் குறைந்து இருக்கின்றன. சாதாரண வாகனங்களை பயன்படுத்துவோர் கொஞ்சம் சந்தோசமாக பெற்றோலை பாவிக்கக்கூடிய நிலை காணப்படுகின்றது.

எப்படி இருந்தாலும் இது சர்வதேசத்தில் பெற்றோலின் விலைக்கு அமைவாக குறைக்கப்பட வேண்டும். எரிபொருள் விலையேற்றத்தின் காரணமாக பொதுமக்கள் பல்வேறுபட்ட இடர்களுக்கு முகம் கொடுக்க வேண்டியநிலை காணப்படுகின்றது. தற்போதைய நிலையில் எரிபொருள் என்பது ஒரு முக்கியமான தேவை பொருளாகக் காணப்படுகின்றது.

தொடர்ந்து எதிர்காலத்திலும் இப்படியான எரிபொருள் விலை குறைப்பு டொலருக்கு நிகராக ரூபாயின் பெறுமதி ஏறும்போது - அடுத்த முறை விலை குறைக்கும் போது சரியாக குறைக்கப்பட வேண்டும் என்பதே பொதுமக்களின் கோரிக்கையாகும்.

அறிக்கையிடல்
REPORTING
**என். குகராஜ்**

## மின் கட்டணத்தையும் குறையுங்கள்!

**அ. சுந்தரம்**
மானிப்பாய் வீதி,
ஆறு கால்மடம்.



எரிபொருள் விலை குறைப்பானது வாகன உரிமையாளர்களுக்கு ஒரு வரப்பிரசதமாகும். இது வரவேற்க வேண்டிய விடயமாகும். தற்போது ஐம்பது ரூபாய் குறைத்து விட்டு நூறு ரூபாய் கூட்டுவது ஒழுங்கற்ற விடயம். ஆனால், முறைப்படி விலை குறைத்தால் சிறிது காலத்துக்கேனும் விலைக்குறைப்பு பேணப்பட வேண்டும்.

எல்லோருக்கும் அது நன்மை பயக்கும். அதை விடுத்து சாதாரணமாக, ஆனைகோட்டையில் இருந்து யாழ்ப்பாணத்துக்கு ஆஸ்பத்திரிக்கு வருவதற்கு ஓட்டோ ணவுக்கு 500 ரூபாய் எடுத்தார்கள். ஆனால், தற்போதைய நிலையில் ஆயிரம் ரூபாய்க்கு அதிகமாக எடுக்கிறார்கள்.

காரணம் இந்த பெற்றோல் விலை அதிகரிப்பு. பெற்றோல் விலை குறைவடைந்தால் ஓரளவுக்கு கஷ்டப்பட்டவர்கள் மற்றும் ஏனையவர்கள் ஆஸ்பத்திரி தேவையை பூர்த்தி செய்பவர்களுக்கு மிகவும் இலகுவாக இருக்கும். பெற்றோல் விலை குறைவடைந்ததை நாங்கள் வரவேற்க வேண்டிய கட்டாயத்தில் உள்ளோம்.

இதேபோல பெற்றோல் விலை உயர்வால்தான் பல்வேறு மட்டங்களில் விலை அதிகரிப்புகள் காணப்பட்டன. அனைத்து உணவு பண்டங்கள், மரக்கறி, மீன் என அனைத்துக்கும் இந்த விலை ஏற்றம் காராண மாயிருந்தது.

ஆனால், பெற்றோல் விலை குறைப்பால் எமக்கு ஏனைய பொருட்களின் விலைகளும் குறையக்கூடிய சாத்தியக்கூறுகள் காணப்படுகின்றன. குறிப்பாக, மின்சார கட்டணத்தையும் இந்த அரசாங்கம் குறைத்தால் இன்னும் இலகுவாக இருக்கும்.



## விஜயை இயக்கும் வெற்றிமாறன்!

வெற்றிமாறன் இயக்கத்தில் வெளியான விடுதலை படம் பெரும் வரவேற் பைப் பெற்றுள்ளது.

இந்த நிலையில், விஜய்க்கு தான் கூறிய ஒரு வரிக் கதை பிடித் துள்ளதாகவும் அந்தக் கதையில் நடிக்க சம்மதம் தெரிவித்து விட்டார் என்றும் ஒரு பேட்டி ஒன்றில் வெற்றிமாறன் தெரி வித்துள்ளார்.

## காதலே வேண்டும்!

தமிழில் இமைக்கா நொடிகள், அடங்க மறு, அயோக்யா, அரண்மனை 3, திருச்சிற் றம்பலம், சர்தார் படங்களில் நடித்து பிரபலமானவர் ராஷி கண்ணா.

அவர் அதிக காதல் படங்களில் நடிக்க விரும்புகிறார் என்று கூறியுள்ளார். இதுகுறித்து அவர் அளித்துள்ள பேட்டியில் ”காதல் கதையம்சம் உள்ள படங்களை ரசிகர் கள் விரும்பி பார்க் கிறார்கள். காதல் படங்கள் போர டிக்காது. எனக்கு வித்தியாசமான காதல் படங்களில் நடிக்க ஆர்வம் உள்ளது - என்று கூறியுள்ளார்.





## அதிரடி நாயகி

ஒரு காலத்தில் பொலி வுட்டின் அதிரடி நாயகியாக இருந்தார் காத்ரினா கைப். இப்போது அந்த இடத்துக்கு வந்திருக்கிறார் தீபிகா படுகோன்.

‘பைட்டர்“, ‘ஜவான்“, ஹசிங்கம் -3“ என அடுத்தடுத்த படங்களில் தீபிகாவுக்கு பல அதிரடி காட்சிகள் இருக்கின்றன.

## தமிழிலும் கேம் சேஞ்சர்

காதலன், இந்தியன், ஜீன்ஸ், முதல்வன், சிவாஜி, எந்திரன் என்று பல வெற்றிப்படங்கள் கொடுத்தவர் இயக்குநர் சங்கர். அவர் இயக்கிய அனைத்தும் பிரமாண்ட படங்களாகவும் இருந்தன.

தற்போது தெலுங்கு திரையுலகில் முன்னணி கதாநாயகனாக இருக்கும் ராம்சரணை வைத்து தனது 15ஆவது படத்தை சங்கர் இயக்கி வருகிறார். படத்துக்கு “கேம் சேஞ்சர்“ என்று பெயர் வைத்துள்ளனர். தெலுங்கு மொழியில் தயாராகும் இந்த படத்தை தமிழ், ஹிந்தி மொழிகளில் வெளியிடவும் திட்டமிட்டுள்ளனர். இதில் ராம்சரணுக்கு ஜோடியாக கியாரா அத்வானி நடிக்கிறார்.




## கதாநாயகியை விஞ்சிய சாயிஷாவின் சம்பளம்

சிம்பு நடிப்பில் கிருஷ்ணா இயக்கத்தில் உருவான படம் “பத்து தல“ இந்தப் படத்தில் கதாநாயகியாக பிரியா பவானி சங்கர் நடித் துள்ளார். இந்தப் படத்தில் ஒரு பாடலுக்கு நடனமாடியுள்ளார் சாயிஷா.

திருமணம், குழந்தை பிறப்பு என ஓரிரு ஆண்டுகள் திரையுலகை விட்டு ஒதுங்கியிருந்த சாயிஷா இந்தப் படத்தின் மூலம் நடிப்புலகுக்கு மீளவந்துள்ளார்.

இந்நிலையில், இந்தப் பாடலில் ஆடியதற்காக மட்டும் சாயிஷா 40 இலட்சம் இந்திய ரூபாயை சம்பளமாக வாங்கியுள்ளார். படத்தின் நாயகிக்கு 30 இலட்சம் இந்திய ரூபாய்தான் சம்பளமாம்.






**திரைப்படம் - விடுதலை**
**இயக்கம் - வெற்றிமாறன்**
**இசை - இளையராஜா**
**நடிப்பு - சூரி, பவானிசிறீ, விஜய் சேதுபதி, கவுதம் மேனன்**

அரசின் திட்டங்கள், இயற்கை வளங்களின் பாதுகாப்பு, மக்களின் எதிர்ப்பு, சில குழுக்களின் வன் முறை, காவல்துறையின் அடக்குமுறை, கடமைக்காக தங்கள் இன்னுயிரை பலி கொடுக்கும் அப்பாவிக் காவலர்கள் என தமிழ் திரையுலகில் இதற்கு முன்பும் பல கதைகள் வந்திருக்கிறது. அவற்றில் ஒரு சில கதைகள் வர்த்தக படமாக மட்டுமே அடையாளம் காட்டப்பட்டன. ஆனால், விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சில படங்கள் மட்டுமே முதல் வரியில் குறிப்பிட்ட விஷயங்களை அவரவர் சார்ந்த நிலையில் ஒரு வாழ்வியலாகக் காட்டியுள்ளன. அப்படி ஒரு படத்தை இயக்குநர் வெற்றிமாறன் கொடுத்திருக்கிறார்.

வெற்றிமாறன், இளையராஜா, சூரி, விஜய் சேதுபதி என இந்தப் படத்தில் பங்கேற்றுள்ள சில கலைஞர் களை முதலிலேயே பாராட்டாமல் இந்த விமர்சனத் தைப் பதிவு செய்யவும் முடியாது. அவரவர் பங்களிப் பில் இதுவரையிலான அவர்களின் திறமையின் சிறந்த வெளிப்பாடு இந்தப் படம்.

அருமபுரி என்ற ஊருக்கு அருகில் சுரங்கம் அமைக்க அரசு திட்டமிடுகிறது. ஆனால், அந்த சுரங்கத்தை எதிர்த்து விஜய் சேதுபதி தலைமையிலான மக்கள் படை என்ற தீவிரவாதக் குழு பேராடுகிறது. ரயில் குண்டு வெடிப்பு, காவலர்களைக் கொல்வது என பலவித தீவிரவாத செயல்களில் ஈடுபடுகிறது. மக்கள் படை தலைவனான விஜய் சேதுபதி யார் என்றே அரசுக்கு தெரியாது. அவரைக் கண்டுபிடிக்கவும், அவரின் படையை அழைக்கவும் பல மாதங்களாக சேத்தன் தலைமையில் ஒரு காவல்துறை அணி போராடி வருகிறது. அந்தக் குழுவில் சாரதியாக




வேலைக்குச் சேரும் சூரி, ஓரிரு முறை விஜய் சேது பதியை பார்க்கிறார். தனது கடமையில் ஈடுபாட்டு டன் இருக்கும் சூரி, மேலதிகாரி சேத்தன் ஆணையை மதிக்காத காரணத்தால் குறிப்பாணை (மெமோ) கொடுக்கப்பட்டு பணித் தண்டனை கொடுக்கப்படுகி றார். காவல்துறை குழுவுக்கு புதிய அதிகாரியாக மூத்த காவல்துறை அதிகாரி கௌதம் மேனன் நியமிக் கப்படுகிறார். அதன் பிறகு அந்தக் குழுவினர் விஜய் சேதுபதியைக் கண்டுபிடித்தார்களா, சூரி அதனுள் எப்படி வருகிறார் என்பதுதான் படத்தின் மீதிக் கதை.

படத்துக்காகத் தேர்வு செய்யப்பட்டுள்ள காட்டுப்பகுதி, காவல்துறை குழு இருக்கும் இடம், படத்தில் கதாபாத்திரங்களுக்காகத் தேர்வு செய்யப் பட்டுள்ள நடிகர்கள் என ஒவ்வொருவருமே குறிப்பிடும்படியான அதிகப்படியான ஈடுபாட்டைக் காட்டியிருக்கிறார்கள். தமிழ் திரையில் தொடர்ந்து பலத்த விமர்சனங்களுக்குள்ளாகும் படங்களைக் கொடுத்து வரும் இயக்குநர் வெற்றிமாறன் இந்தப் படத்தையும் அப்படியே கொடுத்திருக்கிறார்.

வெற்றிமாறன் படத்தில் சூரி கதாநாயகனா என யோசித்தவர்கள், இந்தப் படத்தைப் பார்த்த பின் குமரேசன் என்ற காவல்துறை சாரதி கதாபாத்திரத்தில் சூரி எந்த அளவுக்குப் பொருத்தமாக நடித்திருக்கிறார் என்பதை ஆச்சரியத்துடன் பார்ப்பார்கள். ஓர் இடத்தில்கூட இதற்கு முன்னர் நகைச்சுவை நடிகர் சூரியை படத்தில் பார்க்க முடியாது. மேலதிகாரியாக இருந்தாலும் தான் தவறு செய்யாத போது எதற்காக மன்னிப்பு கேட்க வேண்டும் என்ற குணம் கொண்ட வர். பவானிசிறீ மீது வரும் காதலில் அவருடைய காதல் நடிப்புக்கூட கவனத்தை ஈர்க்கிறது. படத்தின் கடைசி அரை மணி நேரத்தில் சூரியின் நடிப்புக்கும், அதிரடிக்கும் திரையரங்கு முழு வதும் கைதட்டல் கிடைப்பதே கதையின் நாயகனாக சூரிக்குக் கிடைத்துள்ள மிகப் பெரும் பாராட்டு.

இந்த முதல் பாகத்தைப் பொறுத்தவரையில் விஜய் சேதுபதியைத் தேடும் குழுவுக்கு முதல் அதிகாரியாக இருக்கும் கௌதம் மேனனை விட அவருக்குக் கீழ் பணி புரியும் சேத்தன் தனது கடுகடுப்பை அந்த அளவுக்குக் காட்டியிருக்கிறார். சூரியைப் பார்த்தாலே எரிச்சல் வருகிறது என்று சொல்லுமளவுக்கு அவரது கதாபாத்திரம் உள்ளது.

மூத்த காவல்துறை கௌதம் மேனன், அந்தப் பதவிக்குரிய மிடுக்குடன் நடித்திருக்கிறார். இரண்டாம் பாகத்தில் இவருக்கான காட்சிகள் அதிகம் இருக்கலாம் எனத் தெரிகிறது. சூரியின் ஜோடியாக மலை கிராமத்துப் பெண்ணாக பவானிசிறீ. அந்தப் பார்வையும், தன் பெற்றோரைப் பறிகொடுத்த சோகத்தையும் பற்றிச் சொல்லும்போது கண்கலங்க வைக்கிறார். தலைமைச் செயலாளராக ராஜீவ்மேனன். அந்தப் பதவிக்குரிய அதிகாரத் தோரணை அற்புதமாக வெளிப்படுத்தியிருக்கிறார்.

விஜய் சேதுபதிக்கு இந்த முதல் பாகத்தில் காட்சி கள் குறைவுதான். இடையிடையே வந்து போகிறார். உச்சக்கட்ட காட்சிக்கு முன்பாகக் கொஞ்சமாக வருகி றார். இரண்டாம் பாகத்தில் அவருடைய காட்சிகள் தான் அதிகம் இருக்கும் எனத் தெரிகிறது. படம் முடிந்த பிறகு இரண்டாம் பாகக் காட்சிகள் சிலவற் றைக் காட்டுவதிலிருந்து அப்படி ஓர் எதிர்பார்ப்பு உள்ளது.

தமிழ் திரையுலகில் 1500 படங்களுக்கும் மேல் இசையமைத்தவர் இளையராஜா. அவருடைய இசைத் திறமை என்னவென்பது பற்றி தமிழ் திரையுலகில் இரசிகர்கள் நன்கறிவார்கள். இந்தப் படத்திற்காக தனி கவனம் செலுத்தி, உலகத் தரம் வாய்ந்த வேறொரு விதமான பின்னணி இசையைக் கொடுத்திருக்கிறார். படத்தின் ஆரம்பக் காட்சியிலேயே நம்மை படத்துக் குள் இழுத்துக் கொண்டு செல்கிறது அவரது பின் னணி இசை. இரண்டு பாடல்களும் அப்படியே மன தோடு கலக்கிறது. தன் காதலியை காவல்துறை பிடியி லிருந்து காப்பாற்ற சூரி ஓடும்போது இளைய ராஜா வின் குரலில் வரும் அந்தப் பாடல் உருக வைக்கிறது.

காடு, மேடு, மலை, இரவு, பகல், பனி எனக் கடந்து இயற்கையுடன் ஒன்றி ஒளிப்பதிவு செய்திருக்கிறார் வேல்ராஜ். ராமர் படத்தொகுப்பு, ஜாக்கி கலை, பீட் டர் ஹெய்ன், ஸ்டன்ட் சிவா ஆகியோரின் சண்டைக் காட்சிகள், என மற்ற தொழில்நுட்பக் குழுவினர்களும் கடுமையாக உழைத்திருக்கிறார்கள்.

காவல்துறையின் விசாரணைக் காட்சிகளை மிகவும் வெளிப்படையாகக் காட்டியிருக்கிறார்கள். சென்சார் செய்யப்பட்டும் அந்தக் காட்சிகள் இடம் பெற்றுள்ளமை ஆச்சரியம்தான். படத்தின் ஆரம்ப ரயில் குண்டு வெடிப்புக் காட்சி நீளமாகவும், இடை வேளைக்கு பின் கொஞ்ச நேரம் கதையோட்டம் கொஞ்சம் தடைபடுவதும் படத்தின் வேகத்தைக் குறைக்கிறது.

# ஐ. பி. எல். கோலாகல ஆரம்பம் - பதிவுகள்!



ஐ. பி. எல். இருபது - 20 தொடர் கோலாகலமாக நேற்று முன்தினம் அஹமதாபாத் மோடி விளையாட்டரங்கில் ஆரம்பமானபோது எடுக்கப்பட்ட படங்கள்...!

# பந்துவீச்சு பலவீனத்தால் வாய்ப்பை இழந்த சென்னை

சென்னை சுப்பர் கிங்ஸ் கடந்த முறை ஜாம்பவானாக இருந்துகொண்டு புதிய அணியான குஜராத்திடம் அடிவாங்கியதால் கடுப்பிலிருந்தார்கள் ரசிகர்கள். இந்த முறை முதல் ஆட்டத்திலேயே வென்று அந்தக் கடுப்பில் தண்ணீர் ஊற்றி அணைப்பார்கள் எனப் பார்த்தால் மேலும் கொஞ்சம் எண்ணெய் ஊற்றிப் பற்றியெரிய விட்டிருக்கிறது டோனியும் அவரின் அணியும்.

மூன்றாண்டுகளுக்கு பிறகான சொந்த மைதானத்தில் ஆடும் முறை, உட்படப் புதிய விதிமுறைகள், டோனியின் கடைசி தொடர் என ஏகப்பட்ட காரணங்கள் இருந்தன. அஹமதாபாத்தில் நடந்த இந்தத் தொடரின் தொடக்க ஆட்டத்தைப் பார்க்க! கூட்டம் ஆர்ப்பரிக்க, களத்தில் நாணயச் சுழற்சிக்கு நுழைந்தார் டோனி. அதிர்ந்து அடங்கியது அரங்கம். கூட்டத்தில் மஞ்சள் நிறங்களே அதிகம். சிஷ்யப்பிள்ளை பாண்ட்யா சகிதம் இந்தத் தொடரின் முதல் நாணயச் சுழற்சியை அவர் தொடங்கி வைக்க, முடித்து வைத்தார் பாண்ட்யா. துரத்தியடிக்க சாதகமான ஆடுகளத்தில் பந்துவீச்சை தெரிவு செய்தார்.

சும்மாவே பத்து பேர் துடுப்பெடுத்தாடும்படிதான் அணியை தெரிவார் டோனி. இதில் இம்பேக்ட் பிளேயர் விதிமுறையும் இருக்கும்போது சும்மா விடு வாரா... இந்த முறை 11 பேரும் துடுப்பாட்டம் ஆடக்கூடியவர்கள். கொன்வே, கெய்க்வாட், மொயீன், ஸ்டோக்ஸ், ராயுடு, ஜடேஜா, டோனி, தூபே, சாண்ட்னர், தீபக் சஹார், அப்புறம் போன தொடர் முழுவதும் இருக்கையிலேயே அமர்ந்திருந்த ஹங்கர்கேக்கர். குஜராத்தில் கேன் வில்லியம்சன், ரஷித், ஜோஸ் லிட்டில், அல்ஸாரி ஜோசப் ஆகிய வெளிநாட்டு வீரர்களோடு போன தொடரில் ஆடிய அதே இந்திய வீரர்கள்.

பவர்பிளே முழுக்க நிதானமாக ஆடிவிட்டு நடு வரிசை ஓவர்களில் இறங்கி அடிப்பது கெய்க்வாட் - கொன்வே இணையின் ஸ்ரைல். அதேபோலத்தான் முதல் ஓவரை இரண்டு ஓட்டங்களோடு தொடங்கினார்கள். ஆனால், அடுத்த ஓவரிலேயே, 'இதெல்லாம் சரிப்படாது' என பௌண்ட்ரிகள் வெளுத்தார் கெய்க்வாட். பாண்ட்யாவின் அந்த ஓவரில் மட்டும் 11 ஓட்டங்கள்.

பவர்ப்ளேயில் ஷமியை எதிர்த்து ஆடும்போது நீங்கள் விக்கெட்டை மறைத்து சுவரே கட்டினாலும் சரி, அதன் சிறுவிரிசல் வழியே கசியும் நீரைப் போலச் சட்டென விக்கெட்டை தகர்த்துவிடுவார். அடுத்த ஓவரில் கொன்வேவுக்கு அதுதான் நடந்தது. போன வருடம் சென்னையின் பந்துவீச்சாளராக இருந்த ஜோஸ் லிட்டில்தான் இப்போது எதிரணியில். அவரின் முதல் ஐ. பி. எல்



பந்தையே ஷோர்ட் பைன் லெக் பக்கம் சிக்ஸருக்குத் தூக்கினார் கெய்க்வாட். அடுத்த பந்து பௌண்ட்ரிக்கு. மொயீனும் தன் பங்குக்கு ஒரு பௌண்ட்ரி அடிக்க அந்த ஓவரில் 15 ஓட்டங்கள்.

கொன்வேயை பந்தாடிய ஷமியை ஐந்தாவது ஓவரில் பழிக்குப் பழி தீர்த்தார் மொயீன். 17 ஓட்டங்கள். ஓட்டங்கள் குவிப்பை பார்த்து ரஷீத் கானை கொண்டு வந்தார் பாண்ட்யா. பவர்ப்ளேயின் கடைசி ஓவரில் மொயீன் அவுட். எல்லாரும் எதிர்பார்த்த பென் இறங்கும் நேரம். ஆனால் அவருக்கு வாய்ப்பே கொடுக்காமல் விரட்டி விரட்டி அடித்துக்கொண்டிருந்தார் கெய்க்வாட். கடைசியில், ஒரே ஒரு பௌண்ட்ரி மட்டும் அடித்துவிட்டு நடையைக் கட்டினார் ஸ்டோக்ஸ். உபயம்: ரஷித்தான்.

அல்ஸாரி ஜோசப் வீசிய 9ஆவது ஓவரில் மட்டும் மூன்று சிக்ஸ்கள். 23 பந்துகளில் அரைச்சதம் கடந்தார் கெய்க்வாட். ராயுடு ஒருபக்கம் தனது பந்து படாததுக்குக் காரணம் யோசித்துக்கொண்டிருக்க, இந்தப் பக்கம் சிக்ஸர்களை மட்டுமே பறக்கவிட்டுக்கொண்டிருந்தார் கெய்க்வாட். ஓட்டவீதம் 9இற்கு குறையாமலேயே இருந்தது.

13ஆவது ஓவரில் ஜோஸ் லிட்டில் ராயுடுவின் பரிதாபங்களுக்கு முற்றுப்புள்ளி வைக்க, உள்ளே வந்தார் தூபே.

18ஆவது ஓவரில் அல்ஸாரி வீசிய முழுப்பந்தில் ஆட்டமிழந்தபோது கெய்க்வாட் 50 பந்துகளில் 92 ஓட்டங்கள். சென்னையின் ஓட்டம் 151ஃ5. அதே ஓவரில் ஜடேஜாவும் நடையைக் கட்ட நிகழ்ந்தது தல தரிசனம். கடைசி ஓவரில் ஜோஸ் லிட்டில் ஸ்லாட்டில் வீசிய பந்தை தூக்க்க்க்....கி அடித்தபோது விண்ணைத் தொட்டது கரகோஷம். அவரின் ஆட்டத்தால் 179 ஓட்டங்களை இலக்காக வைத்தது சென்னை.

சஹாரின் அற்புதமான முதல் ஓவரில் வெறும் 3 ஓட்டங்கள். இரண்டாவது ஓவர் வீச ஐ. பி. எல்லின் முதல் இம்பேக்ட் பிளேயரான துஷார் தேஷ்பாண்டே வந்தார். 15 ஓட்டங்கள் விளாசி அவருக்கு அதிர்ச்சி கொடுத்தனர் பந்துவீச்சாளர்கள். நான்காவது ஓவரில் ஹங்கர்கேக்கர் சஹாவை பெவிலியனுக்கு அனுப்பி வைக்க, இப்போது குஜராத்தின் இம்பேக்ட் பிளேயர் சாய் சுதர்சன் களத்தில். முதல் இன்னிங்ஸின்போது காயம்பட்ட வில்லியம்சனுக்குப் பதிலாக அதிரடி காட்டினார். இதனால், பவர்பிளே முடிவில் 65 ஓட்டங்கள் ஒரு விக்கெட் இழப்புக்கு.

இந்த இணையை மீண்டும் ஹங்கர்கேக்கர் வந்தே பிரிக்க வேண்டியதாக இருந்தது. சாய் சுதர்சன் நடையைக் கட்டினார். அணித் தலைவர் பாண்ட்யாவை ஜடேஜா பார்த்துக்கொள்ள, இவ்வளவு களேபரங்களுக்கு நடுவிலும் பௌண்ட்ரி அடிக்கத் தவறவில்லை கில். ஒருவழியாய் 15வது ஓவரில் துஷார் கைவண்ணத்தில் அவர் கிளம்பும்போது அவரின் ஸ்கோர் 36 பந்துகளில் 63 ஓட்டங்கள். அணியின் ஸ்கோர் 138ஃ4. அதன்பின் நடந்தது சம்பிரதாயமான துரத்தல்தான். அழுத்தம் ஏற்றிக்கொள்ளாமல் இலகுவாக ஆடி வெற்றிக்கோட்டைத் தொட்டார்கள் திவேதியாவும் ரஷித் கானும். ஆட்ட நாயகன் ரஷித்தே!

கோப்பையைக் காத்துக்கொள்ளும் பயணத்தில் குஜராத்துக்கு இதுவொரு நல்ல தொடக்கம். சென்னையின் பந்துவீச்சு பலவீனமாக இருக்கிறது என்பது தெரிந்ததுதான். ஆனால், எந்தளவுக்கு என்பது இம்பேக்ட் பிளேயர்களுக்காக டோனி கொடுத்த லிஸ்ட்டைப் பார்க்கும்போது தெரிந்தது. பரீச்சயமான அனுபவம் வாய்ந்த பந்துவீச்சாளர் என ஒருவர்கூட இல்லை. தீக்ஷன, பத்திரண, மகலா எல்லாரும் இங்கே வந்து தரையிறங்கும்வரை சென்னையின் பாடு திண்டாட்டம்தான்.

# இலங்கையில் அழிவை சந்திக்கும் ஆசிய யானைகள்

பி. சிறிவித்தியா



வழமையைப் போல அன்றும் பத்திரிகையில் என்ன என்ன விடயங்கள் பேசப் பட்டுள்ளன என்பதினை அறிய ஆர்வத்துடன் பார்க்க தொடங்கினேன். அதிலிருந்த ஒரு செய்தி என்னுள் பல கேள்விகளை எழுப்பியதுடன் அதிர்ச்சியையும் கொடுத்தது. ஆம், இலங்கையில் சமீப காலமாக யானைகள் அழிவடைந்து செல்கின்றன என்ற செய்தியே அது. ஆசியாவில் இந்தியாவிற்கு அடுத்த படியாக அதிக யானைகள் வாழும் நாடாக இலங்கை இருந்த போதும் இன்று அந்த நிலை மாறியுள்ளது. உலகில் ஆசிய யானைகள், ஆபிரிக்க யானைகள் என்ற இரண்டு வகையான யானைகள் காணப்படும் அதேவேளை ஆரம்பத்தில் ஈரான் முதல் சீனா வரை பல நாடுகளில் யானைகள் வாழ்ந்து வந்த போதிலும் இன்று அவை மிக அதிகமாக அழிவடைந்து பதின்மூன்று நாடுகளில் மாத்திரமே வாழ்ந்து வருகின்றன. இந்தியா, நேபாளம், இலங்கை, இந்தோனேசியா, தாய்லாந்து ஆகிய நாடுகளில் அவை காணப்பட்டாலும், இந்தியாவை தவிர மற்ற நாடுகளில் அவை சிறிய அளவிலேயே உள்ளன.

இலங்கையில் உள்ள விலங்குகளில் முக்கியத்துவம் வாய்ந்த விலங்குகளில் ஒன்றாக யானைகள் காணப்படுகின்றன. இலங்கை சுற்றுலாத்துறையினை நம்பி இருக்கும் நாடாக இருப்பதால் சுற்றுலாப்பயணிகளின் நினைவில் இலங்கை எனும் போது நினைவிற்கு வரும் விடயங்களில் இலங்கை யானைகளும் முக்கிய ஓர் இடத்தினை பெற்றுள்ளன. அத்துடன் மதம் சார் விடயங்களிலும் இலங்கை யானைகள் அதிகம் ஈடுபடுத்தப்படுகின்றன. பௌத்த மதத்தின் முக்கிய நிகழ்வான கண்டி பெரஹெராவின் போது புனித தந்ததாதுவும் அலங்கரிக்கப்பட்ட யானை மீது வைத்தே கொண்டு செல்லப்படுகின்றது. இவ்வாறு இலங்கையின் ஓர் தனித்துவ அடையாளமாக உலக மக்களால் பார்க்கப்படும் யானை இன்று அழிவினை நோக்கி சென்றுகொண்டிருக்கிறது. இலங்கையின் யானைகள், IUCN இனால் 1986 ஆம் ஆண்டிலிருந்து அழிந்து போகும் அபாயமுள்ள விலங்குகளின் பட்டியலில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

அண்மைத்தேய தரவுகளின் படி இலங்கையில் ஏழாயிரம் வரையான யானைகள் வாழ்வாதாக புள்ளி விபரங்கள் தெரிவிக்கின்றன. எனினும், சராசரியாக ஒரு ஆண்டிற்கு 331 யானைகள் இலங்கையில் உயிரிழக்கின்றன என்றும் புள்ளி விபரங்கள் தெரிவிக்கிறது. பல்வேறு காரணங்களால் இலங்கையில் உள்ள யானைகள் அழிவினை சந்திக்கின்றன. அதில் முக்கியமான விடயம் காடழிப்பு. இன்று இலங்கையில் காட்டினை அழித்து கட்டடங்கள் காட்டுவதும் விவசாயம் செய்வதும் சாதாரண விடயமாகிவிட்டது. இவ்வாறு காடுகள் அழிக்கப்படுவதனால் காடுகளில் வாழ்கின்ற யானைகள் வாழ்வதற்கு வழி இன்றி புகளிடம் தேடி அலைகின்றன. இதனால் பல்வேறு இயற்கை சிக்கல்களுக்கு முகம் கொடுத்து இறக்கின்ற நிலையினை எதிர்நோக்குகின்றன. இலங்கையில் 2019 ஆண்டு வெளியான புகைப்படமும் செய்தியும் இதனை பறைசாற்றுகின்றன. அதாவது அம்பாறையில் யானைகள் உணவின்றி குப்பைகள், பொலித்தீன்கள், ஆபத்தான பொருள்கள் நிறைந்த குப் பையை யானைகள் உண்கின்ற படமும் செய்தியுமே அது. இதற்கு காரணம் அவற்றின் புகலிட அழிப்பு! அவை வாழ்கின்ற காடுகள் அளிக்கப்பட்டமையால் அவை உண வின்றி மனித வாழ்விடங்களுக்குள் புகுந்து குப்பைகளை உண்கின்ற நிலை ஏற்பட்டுள்ளது. இது வன விலங்கு பாதுகாப்பின் மத்தியிலும் விலங்கு ஆர்வலர்கள் மத்தியிலும் பெரும் கண்டனத்திற்குரிய விடயமாகவும் பார்க்கப்பட்டது. அத்தோடு இப் புகலிடங்கள் அழிக்கப்படுவதால் யானைகள் மனிதர்கள் வாழ்கின்ற பிரதேசங்களுக்குள் புகத் தொடங்கியுள்ளன. அதேவேளை இவ்வாறு யானைகள் மனித குடிருப்புக்களுக்குள் புகுவதால் மனித - யானை மோதல்களும் இன்று அதிகளவில் இடம்பெறுகின்றது. இதன் காரணமாக வருடாந்தம் 271 யானைகளும் 85 மனிதர்களும் இருப்பதாக அறிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

ஆசிய மற்றும் ஆபிரிக்க யானைகள் அழிந்து போகும் நிலைக்கு மற்றுமோர் காரணம், அவற்றின் தந்தங்கள் வேட்டையாடப்படுவதாகும். இதற்காக ஆயிரக்கணக்கான யானைகள் வேட்டை யாடப்படுகின்றன. இவ்வாறு யானைகள் வேட்டையாடப்படுவதால் அதனை தடுக்கும் நோக்கில் 1989ஆம் ஆண்டில் சர்வதேச ரீதியில் யானைத் தந்த வியாபாரம் சட்ட விரோதமாக அறிவிக்கப்பட்ட போதிலும் கடந்த பத்து வருடங்களில் இதன் எண்ணிக்கை அதிகரித்துள்ளதே தவிர குறையவில்லை. ஆபிரிக்க யானைகளில் ஆண், பெண் என இரண்டு யானைகளுக்கும் தந்தங்கள் காணப்படுவதனால் அவை இரண்டுமே வேட்டையாடப்படுகின்றன. ஆனால் ஆசிய யானைகளில் ஆண் யானைகளுக்கு மட்டுமே தந்தங்கள் இருப்பதனால் அவை மட்டுமே வேட்டையாடப்படுகின்றன. இதனால் ஆண், பெண் சம நிலை மாற்றமடைந்து அவற்றின் இனப்பெருக்கமும் வீழ்ச் சியடைந்துள்ளது. இதனால் யானைகளின் பெருக்கமும் தற்காலத்தில் மிகவும் குறைவடைந்துள்ளது.

19ஆம் நூற்றாண்டிலிருந்து இலங்கையின் யானைகள் சுமார் 65வீதம் வரை அழிவடைந்துள்ளது. தந்தத்திற்காக வேட்டையாடப்படுவதை விட, தங்களது வாழ்விடங்களை இழப்பதாலும், மனிதர்களோடு ஏற்படும் மோதல்களாலுமே அதிகளவான ஆசிய யானைகள் ஆபத்துக்குள் ளாகின்றன.

இலங்கையில் யானைகள் அழியும் எண்ணிக்கை அதிகரித்துச் செல்கின்றமை குறிப்பிடத்தக்கது. 2017ஆம் ஆண்டு 256 யானைகள் உயிரிழந்த நிலையில், 2018ஆம் ஆண்டின் முதல் 10 மாதங்களில் மட்டும் 311 யானைகள் இறந்துள்ளன. இன்றைய சூழ் நிலையில் அனைத்து இயற்கை வளங்களும் மனிதர்களின் நடவடிக்கைகளினால் அழிவினை நோக்கி சென்ற வண்ணமே உள்ளன. பல்வேறு

அரிய உயிரினங்களும் இன்று இவ் உலகத்திலேயே இல்லை என்ற நிலையே உருவாகியுள்ளது. அந்த நிலையில் அழிவின் விளிம்பிலேயே இலங்கையின் பாரம்பரிய யானைகளும் உள்ளன. அதன் அழிவை தடுப்பதற்கு உரிய நடவடிக்கை எடுக்கவிட்டால் இயற்கை சமநிலை குழம் பும் என்பதுடன் அது மனித இனத்திற்கே ஆபத்தாக அமையும்.

---




# வியுக்தியார் பதில்கள்

**எஸ். நிதர்சன் வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்**

**கேள்வி:** வவுனியா வெடுக்குநாறி மலை ஆதிசிவன் ஆலயம் இடித்தளிக்கப்பட்டது எந்த வகையிலும் ஏற்றுக்கொள்ள முடியாததுதான். ஆனால் அதற்கு எதிராக ஆங்காங்கே நடக்கும் போராட்டங்களைப் பார்க்கின்றபோது ஒரு சில பிரமுகர்களும் அல்லது அரசியல் தலைவர்களும் மாத்திரமே காணப்படுகின்றனர். ஒவ்வொரு தமிழனையும் கோபப்படுத்திய இந்தச் சம்பவத்தைக் கண்டித்து நடக்கும் போராட்டங்களில் கூட மக்கள் திரட்சியாக கலந்துகொள்வதைக் காணமுடியவில்லையே அது ஏன் என்று நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** திருக்கேதீஸ்வரத்தில் ஆலய வளைவு கத்தோலிக்கர்களால் இடித்தழிக்கப்பட்டபோது வாய்திறக்காமல் இருந்த நமது தலைவர்கள் வவுனியாவில் ஆதிசிவன் ஆலயம் இடித்தழிக்கப்பட்டபோது பொங்கி எழுகின்றார்கள். பௌத்த மயமாக்கலுக்காக இந்து ஆலயம் அழிக்கப்படுவது எப்படி ஏற்றுக்கொள்ள முடியாததோ அதேபோன்றதுதான் கத்தோலிக்கர்களால் அழிக்கப்படுவதையும் ஏற்றுக்கொள்ள முடியாதுதானே. ஆனால் அதனை கண்டுகொள்ளாத தலைவர்கள் இதனை மட்டும் கண்டிப்பது ஏன் என்பதை மக்கள் புரிந்துகொண்டதால்தான் திரட்சியாக கண்டிக்க முன்வரவில்லை என்றே எண்ணவேண்டியிருக்கின்றது. வெடுக்குநாறி ஆதிசிவன் ஆலய அறங்காவலர்கள் போராட்டத்திற்கு அழைப்பு விடுத்த போது அதற்கு தாமும் ஆதரவு என்று அறிக்கை வெளியிட்ட தலைவர்களையே போராட்டத்தில் காணவில்லையே. அவர்களே பத்திரிகையில் அறிக்கை வெளியிட்டால் போதும் என்று நினைக்கின்றபோது மக்கள் அவர்களைத்தானே பின்பற்றுவார்கள். முகநூலில் கண்டிப்பதோடு நகர்ந்துசென்றுவிடுவார்கள்.

---

**சபா. செந்துஜன், தேற்றாத்தீவு, மட்டக்களப்பு**

**கேள்வி:** : அடுத்த ஆண்டுதான் தேர்தல் நடைபெறும் என்றும் அது மக்கள் தமக்கு விரும்பிய ஆட்சியைக் கொண்டுவருவதற்கான தேர்தல் என்றும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க திரும்பத்திரும்பக் கூறிக்கொண்டிருக்க, டிசெம்பர் மாதத்துக்கு முன்னர் தேர்தலொன்று நடத்தப்படும் என பொதுஜன பெரமுனவின் தலைவர் முன்னாள் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ தெரிவித்திருக்கிறாரே?

**வியுக்தியார்:** : அவர் டிசம்பர் மாதத்திற்குள் தேர்தல் ஒன்று நடைபெறும் என்றுதானே கூறியிருக்கிறார். சில வேளை அவர் தனது கட்சிக்குள் தேர்தல் ஒன்றை நடாத்தி தனது மகனிடம் கட்சியை ஒப்படைக்கப்போகிறாரோ என்னவோ?

**வி. வினோஜன், அராலி வடக்கு, அராலி**

**கேள்வி:** அரசியல் அனுபவமற்ற கோட்டாபய ராஜபக்ஷவை ஜனாதிபதி வேட்பாளராக்கியதே சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி இழைத்த பெறும் தவறு என்று அந்தக் கட்சியின் தலைவர்கள் எல்லோருமே சொல்கிறார்களே. அப்போ வேறு ஒருவர் ஜனாதிபதியாகியிருந்தால் நாடு இப்படியொரு பொருளாதார நெருக்கடியைச் சந்தித்திருக்காதா?

**வியுக்தியார்:** பொது பரீட்சையில் சித்தியடையத்தவறிய மாணவன் ஒருவன், தான் பரீட்சையில் சித்தியடையத் தவறியதற்கு காரணம், தனது வகுப்பு ஆசிரியர் என்று சொல்லியிருந்தாலும் அதில் சிறிதேனும் நியாயம் இருந்திருக்கும். ஆனால் அவர் தனது பாடசாலையின் அதிபர் சரியில்லை அதனால்தான் நான் சித்தியடையவில்லை என்பதுபோலத்தான் இது. பெரமுன கட்சியில் யார் ஆட்சியில் இருந்திருந்தாலும், நாடு இந்த நிலையைத்தான் அடைந்திருக்கும். டொலர் கையிருப்பு முடிவடைந்த பின்னர் தேவையான இரசாயன உரத்தை இறக்குமதி செய்ய தடைவிதித்திருக்காவிட்டாலும் இறக்குமதி செய்ய டொலர் இருந்திருக்காது. தடைசெய்யாமல் விட்டிருந்தால் அந்த பழி கோட்டா மீது வந்திருக்காது. அதுபோல சில தவறுகளை அவர் செய்தது உண்மைதான். ஆனாலும் அவர்களில் யார் இருந்தாலும் நிலைமை இப்படித்தான் இருந்திருக்கும்.

---

**ஏ. சண்முகராஜா, சங்கிலியன் வீதி, நல்லூர்**

**கேள்வி:** இலங்கை தொடர்பில் இந்தியாவுக்கு அக்கறை இருக்கிறது என்றால் ஏன் இந்து ஆலயங்கள் அழித்தொழிக்கப்படும்போது மௌனமாக இருக்கிறீர்கள்? விரைந்து நடவடிக்கை எடுக்க இலங்கை அரசாங்கத்துக்கு அழுத்தம் பிரயோகியுங்கள் என்று அகில இலங்கை இந்துமா மன்றம் கோரிக்கை விடுத்துள்ளதே. இனியாவது இந்தியா அழுத்தம் கொடுக்குமா?

**வியுக்தியார்:** இலங்கை மீது இந்தியாவுக்கு அக்கறை இருக்கின்றதோ இல்லையோ அதானிக்கு நிச்சயம் அக்கறை இருக்கும் என்று நம்புகின்றேன். அதானியின் காற்றலை மின்திட்டத்திற்கு எதிராக நாமே போராட்டங்களையும் நடத்திக்கொண்டு, இந்தியா எங்களைக் கவனிக்க வேண்டும் என்றால் எப்படி. தமிழ் நாட்டில் திராவிடக் கழகம் ஆட்சிக்கு வந்த பின்னர் வீதிகளை அபிவிருத்தி செய்வதற்காக அறுநூறுக்கும் அதிகமான கோவில்களை இடித்தழித்தபோதே கண்டுகொள்ளாத இந்திய மத்திய அரசாங்கம், நமது கோவில் இடிக்கப்பட்டதற்கு எதிராக எதிர்வினையாற்றும் என்று நம்பவது புத்திசாலித்தனமானதா என்பதை நம்மவர்கள் முதலில் சிந்திக்கவேண்டும்.

---

**பி. பிரதாப், கோப்பாய் மத்தி, கோப்பாய்**

**கேள்வி:** தென்மராட்சியில் தந்தையையே வெட்டிக் கொன்றனர் என்ற சந்தேகத்தில் 18, 19 வயதான இரு மகன்களையும் அவர்களின் 19 வயதேயான நண்பரையும் கொடிகாமம் பொலிஸார் கைது செய்துள்ளதாக செய்தி ஒன்றை பார்த்தேன். யாழ்ப்பாணத்து இளைஞர்களின் மனநிலை இப்படி மாறியதற்கு என்ன காரணம் என்று நினைக்கின்றீர்கள்?

**வியுக்தியார்:** இதில் நினைப்பதற்கு என்ன இருக்கின்றது. குடும்பத்தை கவனிக்காத தந்தையை மகன்கள் வெட்டிக்கொன்றதைவிட கொடுமையான சம்பவங்கள் கூட நடந்துகொண்டிருக்கின்றனவே. சகோதரியையே போதைக்கு அடிமையான சகோதரன் வன்புணர்வுகொண்டதால் சகோதரி தற்கொலை செய்யுமளவிற்கு நிலைமை கவலையளிக்கின்றபோது அதைப்பற்றி யாரும் நமது சமூகத்தில் உள்ளவர்கள் சிந்திப்பதாக தெரியவில்லையே என்பதுதான் அதைவிட கொடுமையானது.

# ஒரு விநாடி

தேவகி கருணாகரன்
(சிட்னி)



முகுந்தன் குறுக்கும் நெடுக்குமாக நடக்கிறார். அவர் முகம் கவலையில் தோய்ந்திருக்கிறது. திடீரென்று அழுதிடுவார் போல் கண்கள் சிவந்து கலங்கு கிறது. பல தடவை வாசற்கதவ டிக்கு வந்து ரோட்டை எட்டி எட்டிப் பார்த்து நிலை கொள்ளாமல் தவிக்கிறார்

யார் யாருக்கோ டெலிபோன் பண்ணுகிறார். “மதுரா உங்கே வந்தாளா?” என்று கேட்கிறார்.

“அம்மா... காலமை வேலைக்குப போன மது இன்னும் வீட்டே வரல்லே. அப்பாவும் நீங்களும் உடனே வெளிக்கிட்டு வாங்கோ,” என்று தன் தாய்க்கு டெலிபோனில் கூறுகிறார். முகுந்தனின் குரல் கிணற்றுக்குள் இருந்து வரு வது போல் ஒலிக்கிறது.

உள்ளே வந்த குடும்ப நண்பர் டாக்டர் கிரி, “முகுவெஸ் மீட் போலீஸ் ஸ்டேசனுக்குப் போனேன், அவர்கள் ஒருவர் காணாமற்போய் இருபத்தி நாலு மணித்தியாலத்திற் குப் பின் தான் என்ரி போடலாமாம்.”

“ஐயோ! அதுவரைக்கும் மதுவை எங்கே போயத் தேடுவது? பிற் ஸ்றீற்றுக்கு போய் அவள் அலுவலகத்திலும் விசாரித்திட்டேன். என்ன செய்வது கிரி?” முகுந்தனின் குரலில் வேதனை, ஏக்கம் பயம் ஒலிக்கிறது. தலையைக் கைகளால் பிடித்துக் கொண்டு நாற்காலியில் அமருகிறார். அவர் நிலை கண்டு நான் உருகுகிறேன்.

“முகுந்தன் நீ கவலைப் படாதே. மது எங்கேயாவது சிநேகிதிகள் வீட்டே போயிருப்பாள்.” அவரின் தோளை கையால் அழுத்தியபடி ஆறுதல் கூறுகிறார் கிரி.

“அப்படி என்றால் டெலிபோன் பண்ணியிருப்பாளே? மோபைலையும் ஒஃப் பண்ணி வைத்திருக்கிறாள்.” சிறிது நேரம் மௌனமாகச் சிந்தித்தவர், “கிரி அவளுக்கு ஏதே னும் ஆகியிருக்குமோ? ஐயோ என் மதுவுக்கு - நினைக் கவே பயமாகவிருக்கிறது.” எழுந்து மேலும் கீழுமாக நடக்கிறார். தலைமுடியைக் கோதிப் பிய்க்கிறார். சிட்னி யின் இலை உதிர் கால குளிரிலும் அவர் நெற்றியில் வியர்வை முத்துகளாக மிளிர்கிறது. மேற் சட்டையின் முதுகுப்புறம் வியர்வையால் நனைந்திருக்கிறது.

முகுந்தனின் அம்மாவும் அப்பாவும் காரில் வந்திறங்குகிறார்கள். முகுந்தனின் நிலை கண்டு ஆறுதல் சொல்ல முடியாது தவிக்கிறார் அவரின் அப்பா.

“அந்தப் பெண் மது எங்கே போறேன் என்று சொல்லிட்டுப் போயிருக்கலாம். இப்படி எங்களை எல்லாம் அலைக் களிக்க வைத்திட்டாளே. அவள் குணம் மாறவே மாறாதே.” தேக்கி வைத்திருந்த முகுந்தனின் அம்மாவின் ஆதங்கம் வார்த்தைகளாக வெளிவருகிறது. தாயை முறைத்துப் பார்க்கிறார் முகுந்தன்.

“ஆன்ரி இிப்ப எதுக்கு அதெல்லாம் சொல்லிக்கொண்டு. பிள்ளைகள் பசியோடு இருக்கிறார்கள். தயவு செய்து அவர்களைக் கவனியுங்கள்,” என்று கிரி சமாதானப்படுத்துகிறார். பிள்ளைகளை அழைத்துக் கொண்டு உள்ளே போகிறாள்.

உள்ளே போனவள் வெளியே வந்து, “முகுந்தா வேலையாலே வந்து சாப்பிட்டிருக்கமாட்டாய். இடியப் பமும் கறியும் கொண்டு வந்திருக்கிறேன் சாப்பிடிறியா?”

“வேண்டாம். எனக்கு பசிக்கல்லே”

“ஆன்ரி ப்ளிஸ்! சூடா ஒரு கப் பால் கொண்டு வாங்கோ,” கேட்கிறார் கிரி. பாலை வாங்கியவர்,

“முகு வெறும் வயித்தோடை இராதே, பாலைக் குடி. இந்தா இரண்டு தூக்க மாத்திரை.” வற்புறுத்திக் குடிக்க வைக்கிறார்.

மாமியிடம் சென்று, “நீங்களும் அங்கிளும் இரவைக்கு இங்கேயே தங்குங்கள். நான் வீட்டே போயிட்டு வந்து இங்கேயே படுத்துக் கொள்கிறேன்,” என்று சொல்லி விட்டு காரில் ஏறிப் போகிறார் கிரி.

மாத்திரையின் தாக்கத்தில், ஆழ்ந்த நித்திரையில் இருந்தார் முகுந்தன். அந்தச் சுருட்டை முடி, கூர்ந்த நாசி, அவர் பிடிவாத குணத்திற்கு அறிகுறியான அந்த மேல் எழும்பிய சொண்டு, இதை எல்லாவற்றையும் பார்த்துத் தானே நான் காதலித்தேன். தூங்கும் போதும் அவர் முகத்தில் தேங்கிய கவலை என் நெஞ்சை உருக்கியது. கலைந்திருந்த அவர் முடியைக் கோதி ஆறுதல் சொல்ல ஏங்கினேன். ஆனால்.. பக்கத்தில் அமர்ந்திருந்து அவரையே பார்த்துக் கொண்டிருக்கத் தான் முடிந்தது. எவ்வளவு நேரம் இருந்தேனோ தெரியவில்லை. பின்பு பிள்ளைகளின் அறைக்குள் போனேன்.

மூத்தவள் தன் தாராப் பொம்மையை அணைத்தபடி தூங்கிக் கொண்டிருந்தாள். கடைக்குட்டியை அப்பாச்சி அணைக்க, தன் கரடிப் பொம்மையை அணைத்தபடி ஆழ்ந்த நித்திரையில் இருந்தான். ‘அம்மா வேண்டும்’ என்று அழுத பிள்ளைகளின் கன்னத்தில் கண்ணீர் வழிந்து உப்பாகக் காய்ந்திருந்தது. அவர்களைக் கொஞ்சுவோம் எனக் குனிந்தேன். ஆனால்...?

காலையில் எழுந்தவுடன் கிரியும் முகுந்தனும் வெஸ்ட் மீட் பொலிஸ் நிலையத்திற்குப் போய் போட்டோவைக் காட்டி என்ரி போடுகிறார்கள். போட்டோவைப் பார்த்து விட்டு ஏதோ சொல்லுகிறார் அந்த அதிகாரி. பிறகு எல்லோரும் போலீஸ் வாகனத்தில் ஏறிப் போகின்றனர். முகுந்தனின் முகம் பேயறைந்தது போல் வெளுத்திருக்க, அதே முகபாவம் கிரியின் முகத்திலும் பிரதிபலிக்கிறது. வெஸ்ட்மீட் ஆஸ்பத்திரியிலுள்ள பிரேத அறைக்குள் அழைத்துச் சென்று அங்கே வைக்கப்பட்டிருந்த ஒரு பிரே தத்தின் வெள்ளைத் துணியை நீக்கிக் காட்டுகிறார் அதிகாரி.

அருகே போய்ப் பார்த்த முகுந்தன், “ஐயோ! மது என்னை விட்டுட்டுப் போயிட்டியா. மது! மது!” என்று உடல் மேல் விழுந்து சத்தமாகக் கதறி அழுகிறார். என் நெஞ்சைக் கசக்கிப் பிழிகிறது அந்தக் கதறல். புருவங்கள் உயர அவரைப் பார்க்கின்றனர் அங்கு நின்ற வெள்ளை அவுஸ்திரேலியர்கள். இப்ப டித் தங்கள் உணர்வுகளை வெளியே காட்டாத பண்பு அவர்களுடையது போலும்.

நான் பிரேதத்திற்கு அருகே போய்ப் பார்க்கிறேன். தலையிலே ஆழமான வெட்டுக்காயம், நெற்றிப் பொட்டு மட்டும் நீண்டிருக்கிறது. உடல் வெள்ளைத் துணியால் மூடியிருந்தது. என் சடலத்தை நான் பார்க்கிறேன். விந் தையாக இருந்தது. உடலை விட்டு பிரிந்த என் ஆத்மா தானா இதை எல் லாம் பார்த்துக் கொண்டிருக்கிறதோ? பிள்ளைகளைத் தொடவோ கொஞ் சவோ முடியாமலும், பக்கத்தில் நின்றும் என்னை முகுந்தனுக்கும் மற்றவர்களின் கண்களுக்கும் தெரியாத காரணம் இப்போ புரிகிறது.

முகுந்தனைச் சாந்தப் படுத்தப் பார்க்கிறார் கிரி. மெது வாக அவரை அழைத்துக் கொண்டு திரும்பவும் போலீஸ் நிலையத்திற்குப் போகிறார்கள்.

“இது ஒரு விபத்து என்று நாங்கள் நினைக்கிறோம். உங்கள் மனைவியின் கவனக் குறைவால் தான் இது நடந்திருக்கிறது. ரோட்டைக் கடக்கும் நடைப்பாதையின் சிக்னல் விளக்கு பச்சை காட்டிய போதும் உங்கள் மனைவி திடீரென்று குறுக்கே வந்ததாகவும், பிரேக்கைப் போட் டும் டிரக்கை நிறுத்த முடியவில்லை என்றும் டிரக்கை ஓட்டி வந்தவர் வாக்குமூலம் கொடுத்திருக்கிறார். இதைப் பார்த்த இரண்டு சாட்சிகளும் இருக்கிறார்கள். இறந்தவ ரின் கைப் பையில் எந்த வித அடையாளங்களும் இருக்கவில்லை. ஆகையால் தான் உங்களுக்கு அறிவிக்க முடியவில்லை,” என்கிறார்கள்.

தாங்கள் எழுதி வைத்திருந்த அறிக்கையை முகுந்தனிடம் வாசிக்கக் கொடுத்து, “நீங்களும் இதற்கு உடன்பா டென்றால் கையொப்பம் இடுங்கள்,” என்கிறார்கள்.

“மதுவே போயிட்டாள். பிறகு எப்படிப் போனா என்று வாதாடி என்னத்தைக் காணப் போறேன். அதற்கு எனக்கு தேவையுமில்லை, தெம்பும் இல்லை.” கையெழுத்தைப் போட்டுவிட்டு எழுகிறார் முகுந்தன்.

வீட்டிற்கு வந்த முகுந்தன், “கிரி! தயவு செய்து அடி லேய்டில் இருக்கும் மதுவின் அப்பா அம்மா மற்றும் உனக்குத் தெரிந்த எங்க சொந்தக்காரர்களுக்கும் சிநேதித ருக்கும் அறிவித்துவிடு,” என்றவர் எங்கள் அறைக்குள் போய்க் கதவைச் சாத்துகிறார்.

--------------

முகுந்தனின் சகோதரன் குடும்பத்தினரும், சகோதரி வாணியின் குடும்பத்தினரும் வந்திறங்குகிறார்கள். எல்லோரும் கும்பல் கும்பலாகக் கூடி மெதுவாகக் கிசு கிசு என்று கதைக்கிறார்கள்.

“அம்மா, மது இப்படிக் கவனக் குறைவாக இருந்திட்டாளே. கோர்ட் கேசு என்று அண்ணாவை சந்தி சிரிக்க வைத்திட்டாளே,” என்கிறாள் வாணி.

“இவளைக் கட்டாதே, தலைக் கெறுக் குப் பிடித்தவள், சாதகமும் பொருத்த மில்லை என்று சொன்னேனே கேட்டானா?” பெருமூச்சு விடுகிறார் முகுந் தனின் அம்மா.

“உஸ் அம்மா, அண்ணாவுக்கு கேட்டிடப் போகுது,” என்று தாயின் வாயை அடைக்கிறாள் வாணி.

எனது அப்பாவும் அம்மாவும் இரவு அடிலேய்டிலிருந்து வந்திறங்குகிறார்கள். “பாவி மகள் இப்படிக் கவலையீனமாக இருந்திட்டாளே. உன் பச்சைக் குழந்தைகளைப் பரிதவிக்க விட்டுப் போயிட்டியே, ” அம்மா தலையிலும் மார்பிலும் அடித்து ஒப்பாரி வைக்கிறாள்.

முகுந்தன், தன் மாமனாரைக் கட்டி அணைத்து “ஐயோ மாமா! மது எங்கள் எல்லோரையும் விட்டிட்டுப் போயிட்டா! ரோட்டைக் கடக்கும் போது கவனம் என்று எத்தனை தடவை சொல்லியிருக்கிறேன். நான் இனி என்ன செய்யப் போகிறேன். மது இல்லாத ஒரு வாழ்க்கையை - ஐயோ ஐயோ - நினைத்துக்கூடப் பார்க்க முடியவில்லையே.” என் முகுந்தன் கதறக் கதறி அழுகிறார். அப்பா வும் அவரை அணைத்துக் கொண்டு அழுகிறார். முகுந்தன் அவருக்கு மருமகன் மட்டுமல்ல மகனில்லாத அப்பாவுக்கு மகனும் கூட.

என் வாழ்க்கையில், நான் மிகவும் நேசிக்கிற இரு ஆண் களும் வாய் விட்டு அழுவதைப் பார்த்துப் பதறுகிறேன், துடிக்கிறேன். என் மரணத்தின் கொடூரத்தால் என்னைச் சார்ந்தவர் அனுபவிக்கும் வேதனையைப் பார்க்கிறேன்,. என் கண்ணீரைத் துடைப்போம் என்று கையை உயர்த்தி முகத்தைத் தேடுகிறேன். ஆத்மாவுக்கு உருவமில்லையே.

என் மூத்த செல்வம் பிரியா ஒரு பர்ஸ்ஸை எடுத்து விளையாடிக் கொண்டிருந்தாள்.

“இது மதுவின் பர்சே” என்ற முகுந் அதை எடுத்து, “இதை எங்கேயிருந்து எடுத்தாயம்மா” அவள் மேசை லாச்சியைக் காட்டுகிறாள்.

லாச்சியைத் திறந்து பார்த்தவர், “மோபைலையும் பார்ஸையும் விட்டிட்டு போயிருக்கிறாளே” என்று முணு முணுத்தபடி இரண்டையும் கையில் எடுக்கிறார். மாறி மாறிப் பார்க்கிறார். ஐயோ மது நீ விபத்திலே சாகவில்லை வேணுமென்றே டிரக் முன் போயிருக்கிறாய்! முந்த நாள் இரவு எமக்குள் நடந்த வாக்கு வாதத்தால் தான் இப்படிச் செய்தியா? என்னைத் தனியே விட்டுட்டுப் போயிட்டியே! எனக்கு இருந்த வேலை அழுத்தத்தில் என்ன பேசுறோம், என்ன செய்றோம் என்று தெரியாமல் நடந்து கொண்டேன். ஐயோ பாவி நான்.” கைகளால் தலையில் அடித்துக் கொள்கிறார். “நீ அழுது கொண்டு அப்பால் போன பின் என் நெஞ்சு வலித்த வலி உனக்கு தெரியுமா? என் செய்கை மனதை உறுத்தியது. உன்னிடம் மன்னிப்புக் கேட்டுச் சமாதானப் படுத்துவோம் என்று உன்னைத் தேடி வந்தேன். நீ பிள்ளைகளை அணைத்தபடி படுத்திருந்தாய். காலையிலே பார்க்கலாம் என்று திரும்பி வந்து படுத்திட்டேன்.” என்று முகுந் சொல்லிச் சொல்லி அழுகிறார்.

“ஐயோ முகுந் குஞ்சு நான் வேணுமென்று இதை செய்யல்லை. வேலைக்கு போகத்தானே வேண்டும். நான் இருந்த மன நிலையில் கைப்பையில் என்ன இருந்தது என்று எங்கே கவனித்தேன். நடந்து போகும் போது இரவு நடந்ததெல்லாம் என் மனக்கண் முன் படமாக ஓடிக் கொண்டிருந்தது. உங்களுக்கு என் மேல் இருந்த அன்பு, காதல் முடிந்து விட்டது என்று எண்ணினேன். என் உயிருக்கும் மேலாக காதலித்த நீங்கள் என்னை வார்த்தைகளாலும் செய்கையாலும் என் உணர்வுகளைக் காயப் படுத்திவிட்டீங்கள். ஏமாற்றம், வேதனை எல்லாமே சேர்ந்து நெஞ்சு வலித்தது. அதன் விளைவு தான் இது. என்னை மன்னித்து விடுங்கள்” அவர் காலில் விழுகிறேன். என்னால் அவரைத் தொட முடியவில்லையே. நான் சொன்னது அவர் காதில் விழவுமில்லையே.

என் முகுந் தேம்பித் தேம்பிச் சிறு பிள்ளை போல் அழுகிறார். என்னை இழந்து முகுந் படும் வேதனையிலும், துடித்த துடிப்பிலும் அவர் என் மேல் வைத்திருந்த ஆழ்ந்த அன்பு பிரவாகித்து வழிந்தது. துரோகி நான் இப்படி மோசம் பண்ணிட்டேனே! என் மனப் பலவீனத்தால், கடவுள் கொடுத்த அன்பார்ந்த கணவனையும் பிள்ளைகளையும் வஞ்சித்து விட்டேனே!

(அடுத்தவாரமும் வரும்)

# 55 ஆண்டுகளுக்கு முன் நிகழ்ந்த ‘மை லாய்’ படுகொலை வியட்நாமில் இன்னமும் மாறாத போரின் வடுக்கள்

ஐங்கரன் விக்கினேஸ்வரா



55 வருடங்களுக்கு முன்னர், உலகை உலுக்கிய கொடூர படுகொலைகளில் மிக மிலேச்சத்தனமாக கருதப்படும் ‘மை லாய்’ படுகொலையின் வடுக்கள் இன்னமும் வியட்மாநாமில் மாறவில்லை.

தெற்கு வியட்நாமில் மார்ச் 16, 1968 ஆம் ஆண்டு அமெரிக்கப் படைகளினால் 347 முதல் 504 வரையான பொது மக்கள் படுகொலை செய்யப்பட்ட நிகழ்வைக் குறிக்கும் இப்படுகொலைகளின் கோரம் வரிகளில் வடிக்க முடியாது.

இக்கொடூரத்தில் மிக மிலேச்சத்தனமாக கொல்லப்பட்டவர்களில் பெரும்பாலானோர் அப்பாவி பெண்களும் குழந்தைகளுமாவர்.

**பாலியல் வதை துன்புறுத்தல் :**

கொல்லப்பட்ட அல்லது காயமடைந்த பெரும்பாலானோர் பாலியல் வதை, அடிக்கப்பட்டு, அல்லது துன்புறுத்தப்பட்டனர். பெரும்பாலானோரின் உடல்கள் பெரும் சிதைவுக்குள்ளாகிக் கண்டுபிடிக்கப்பட்டன.

இப்படுகொலைகள் வியட்நாம் போரின் போது சோன் மை என்ற கிராமத்தில் மை லாய் (My Lai Massacre) மற்றும் மை கே ஆகிய பகுதிகளில் இடம்பெற்றது. ஆரம்பத்தில் 26 அமெரிக்கப் போர்வீரர்கள் இப்படுகொலைகளுக்குக் குற்றம் சுமத்தப்பட்டிருந்தாலும், 2ம் லெப். வில்லியம் கேலி என்பவனுக்கு மட்டுமே தண்டனை கிடைத்தது. முதலில் ஆயுள் தண்டனை வழங்கப்பட்டாலும், இது பின்னர் 3 ஆண்டுகளாகக் குறைக்கப்பட்டு, அத்தண்டனையை தனது வீட்டிலேயே கழித்தான்.

**அமெரிக்க எதிர்ப்பலை ஆரம்பம்:**

இப்படுகொலை நிகழ்வானது உலகின் பல இடங்களிலும் அமெரிக்காவுக்கு எதிராக எதிர்ப்பலைகளை ஏற்படுத்தியது மட்டுமல்லாமல் வியட்நாம் போரில் ஐக்கிய அமெரிக்காவின் ஈடுபாடு குறித்து உள்நாட்டிலும் பெரும் எதிர்ப்புகள் தோன்றின.

இத்தாக்குதலின் பின்னணியை ஆராய்ந்தால், டிசம்பர் 1967 இல் தெற்கு வியட்நாமில் அமெரிக்க இராணுவத்தின் ஒரு பகுதி தரையிறங்கியது. முதல் ஒரு மாதம் பெரிதாக எந்தத் தாக்குதலும் இடம்பெறவில்லை. ஆனாலும் அடுத்தடுத்த மாதங்களில் இடம்பெற்ற கண்ணிவெடித் தாக்குதல்களில் 28 அமெரிக்க இராணுவத்தினர் படுகாயமடைந்தனர். இவர்களில் 5 பேர் கொல்லப்பட்டனர்.

ஜனவரி 1968 இல் வியட் கொங் படைகள் அமெரிக்கப் படைகள் மீது தாக்குதலில் இறங்கினர். அவர்களில் பெரும்பாலானோர் சோன் மை கிராமத்தில் ஒளிந்திருப்பதாக அமெரிக்கப் படைகளுக்கு தகவல் எட்டியது.

அமெரிக்கப் படைகள் இக்குக்கிராமங்கள் மீது பெரும் தாக்குதல் ஒன்றை நடத்தத் திட்டமிட்டனர். அக்கிராமத்தைப் பலமாகத் தாக்கி அனைவரையும் கொன்று விடும்படி கேணல் “ஓரான் ஹெண்டர்சன்” என்பவன் தனது படைகளுக்கு உத்தரவிட்டான்.

அநேகமாக பொது மக்கள் காலை 07:00 மணிக்கு முன்னர் சந்தைகளுக்கு சென்று விடுவரென்றும் மீதமுள்ளோர் வியட் கொங் தீவிரவாதிகளாகவோ அவர்களின் ஆதரவாளர்களாகவோ இருப்பர் என்றும் தாக்குதல் தொடங்க முன்னர் கப்டன் ஏர்னெஸ்ட் மெடினா என்பவன் தனது படைகளுக்குக் கூறினான்.

**வியட்டு கொங் அதிரடி:**

இப்போரானது அதிகாரப்பூர்வமாக வியட்நாம் சனநாயகக் குடியரசான வட வியட்நாமுக்கும் ஐக்கிய அமெரிக்காவின் ஆதரவுடன் வியட்நாம் குடியரசான தென் வியட்நாமுக்கும் இடையில் இடம்பெற்றது.

வியட்நாம், லாவோசு மற்றும் கம்போடியாவிலிருந்து ஏப்ரல் 30, 1975ல் சைகானின் வீழ்ச்சி வரை நடைபெற்ற போரில் பல நூற்றுக்கணக்கான மக்கள் கொல்லப்பட்டனர்.

வட வியட்நாம் படை சோவியத் ஒன்றியம், சீனா மற்றும் பிற கம்யூனிச நாடுகளால் ஆதரிக்கப்பட்டது, தெற்கு வியட்நாமியப் படை அமெரிக்கா, தென்கொரியா, ஆஸ்திரேலியா, தாய்லாந்து மற்றும் பிற கம்யூனிச எதிர்ப்பு அணியால் ஆதரிக்கப்பட்டது. எனவே இப்போர் பனிப்போர் காலத்திய பதிலிப்போர் என்று கருதப்படுகிறது.

வியட்டு கொங் (தேசிய விடுதலை முன்னணி என்றும் அறியப்படுகிறது), வடக்கினால் ஆதரிக்கப்பட்ட ஒரு தெற்கு வியட்நாமிய கம்யூனிச முன்னணி, அப்பகுதியில் இருந்த கம்யூனிச எதிர்ப்பாளர்களுக்கு எதிராக கொரில்லா போர் முறையில் சண்டையிட்டது.

அதேவேளையில், வியட்நாமின் மக்கள் படை, வடக்கு வியட்நாமிய இராணுவம் என்றும் அழைக்கப்படுகிறது, பெரும் படைகளுடன் வழக்கமான போர்முறையில் சண்டையிட்டது. போர் தொடர்ந்த போது வியட்டு கொங்கின் இராணுவ நடவடிக்கைகள் குறைந்தது.

ஏனெனில் வடக்கு வியட்நாமிய இராணுவத்தின் பங்கு மற்றும் செயல்பாடுகள் அதிகமாகின. அமெரிக்கா மற்றும் தெற்கு வியட்நாமிய படைகள், தேடி அழிக்கும் செயல்பாடுகளுக்கு, வான் வலிமை மற்றும் தரைப்படைகள், ஆட்டிலரி, வான்வழித் தாக்குதல்கள் போன்றவற்றைச் சார்ந்திருந்தன.

1950 களின் தொடக்கத்தில் அமெரிக்க இராணுவ ஆலோசகர்கள் அப்போதைய பிரஞ்சு இந்தோசீனாவிற்கு வந்தனர். 1960களில் அமெரிக்க படைகளின் பங்கு, 1961 மற்றும் 1962இல் படைகளை மும்மடங்காக்கியதுடன் அதிகமாகியது.

**பாரிஷ் அமைதி ஒப்பந்தம்:**

அமெரிக்கா படைகளின் பங்கு 1964இல் டோகின் வளைகுடாவில் வடக்கு வியட்நாமியப் படையின் விரைவுப் படகுடன் அமெரிக்காவின் அழிப்பு போர்க்கப்பல் மோதிய நிழ்வுக்குப் பின் இன்னும் அதிகமாகியது.







அதைத் தொடர்ந்து வியட்நாமில் அமெரிக்கப் படைகளின் இருப்பை அதிகப்படுத்தும் அதிகாரத்தை அமெரிக்க அதிபருக்கு வழங்கும் டோகின் வளைகுடாத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1965இன் தொடக்கத்தில் அமெரிக்க தாக்குதல் படைகள் தொடர்ந்து வியட்நாமில் நிலைநிறுத்தப்பட்டன.

அவற்றின் தாக்குதல்கள் பன்னாட்டு எல்லைக்கோட்டையும் தாண்டியது. 1968 இல் அமெரிக்காவின் பங்கெடுப்பு உச்சத்தில் இருந்தபோது லாவோசு மற்றும் கம்போடியாவின் எல்லைப் பகுதிகளிலும் கடுமையாக வெடிகுண்டுகள் வீசப்பட்டன.

அதேவேளையில் வியட்நாமிய கம்யூனிசப் படை எதிர் தாக்குதல்களைத் தொடங்கியது. இந்த எதிர்தாக்குதல்கள் அதன் இலக்கான தெற்கு வியட்நாம் அரசை பதவியிலிருந்து விலக்குவதில் தோல்வியுற்றது, ஆனால் இது போரின் மிக முக்கியத் திருப்புமுனையாக அமைந்தது. தெற்கு வியட்நாமிற்கு பல ஆண்டுகள் இராணுவ உதவி செய்திருந்தாலும், இந்தப் போரில் அமெரிக்க அரசு வெற்றியை நோக்கி நகர்கிறது என்ற அரசின் வாதம் கற்பனையானது என்பதை இந்த எதிர்தாக்குதல் பெரும்பான்மையான அமெரிக்க மக்களுக்கு உணர்த்தின.

1973இல் அனைத்து தரப்பினரும் கையெழுத்திட்ட பாரிசு அமைதி ஒப்பந்தத்திற்குப் பின்னும் போர் தொடர்ந்தது. அமெரிக்கா மற்றும் மேற்கத்திய உலகில் ஒரு எதிர்ப்புக் கலாச்சாரமாக வியட்நாம் போர் எதிர்ப்பு இயக்கம் பெருமளவில் தோன்றியது.

**அமெரிக்கா முழு பின்வாங்கல்:**

1973, ஆகஸ்ட் 15 அமெரிக்கப் படைகள் முழுமையாகப் பின்வாங்கின. 1975 வடக்கு வியட்நாம் படை சைகானைக் கைப்பற்றியதுடன் போர் முடிவுக்கு வந்தது. அதை அடுத்த ஆண்டில் வடக்கு மற்றும் தெற்கு வியட்நாம் ஒன்றிணைந்தது.

இப்போர் பெருமளவும் மனித உயிர்களைப் பலிவாங்கியது. இப்போரின் போது இறந்த வியட்நாமிய வீரர்கள் மற்றும் மக்களின் எண்ணிக்கை 966,000 இலிருந்து 3.8 மில்லியன்கள் வரை இருக்கும்.

240,000 - 300,000 கம்போடியர்களும், 20000 - 62,000 லாவோசு மக்கள், 58,220 அமெரிக்க வீரர்களும் இப்பிரச்சினைகளில் கொல்லப்பட்டனர், மேலும் காணாமல் போன 1626 நபர்கள் இன்னும் கிடைக்கவில்லை. வியட்நாம் போரின் போது பாரிய எண்ணிக்கையான போர்க்குற்றங்கள் நடைபெற்றன.

இப் போரின்போது கற்பழிப்பு, குடிமக்கள் படுகொலை, பொதுமக்களை குறி வைத்து குண்டு வீச்சுகள், பயங்கரவாதம், சித்திரவதை மற்றும் போர்க் கைதிகள் கொலை போன்ற பரவலான போர்க்குற்றங்கள் இழைக்கப்பட்டன. அத்துடன் மேலதிக பொதுக் குற்றங்களான திருட்டு, தீவைப்பு, மற்றும் சொத்துக்களை அழித்தல் போன்றவையும் இடம்பெற்றன.

இப்போரில் காடுகளில் மறைந்து வந்து தாக்கிய வியட்காங் கொரில்லா போராளிகளின் மறைவிடங்களை அழிக்க, அமெரிக்க இராணுவம் வியட்நாம் காடுகளை அழிக்க ஏஜன்ட் ஆரஞ்ச் எனும் நச்சு அமிலத்தை வான் வழியாக காடுகளின் மீது பொய்து, வேதி தாக்குதல் நடத்தினர்.

இந்த நச்சு அமிலத்தால் வியட்நாம் காடுகள் அழிந்ததுடன், வியட்நாம் மக்கள் உடல் அளவில் பெரும் பாதிப்புக்கு உள்ளாகினர்.

அமெரிக்காவின் இந்த நச்சு வேதித் தாக்குதல்களால் பாதிக்கப்பட்ட வியட்நாமியர், பிரான்சு நீதிமன்றத்தில் இன்னமும் வழக்கு தொடுத்து நட்ட ஈடு கோரி வருகின்றனர்.

•

# ‘துணையாகும் தொழும் தெய்வம்’! லண்டன், ஈலிங் கனகதுர்க்கை அம்மன் ஆலயத்தின் மக்கள் சேவை

ஆர். டி. இரத்தினசிங்கம்

**பொதுமக்களால் பொதுமக்களுக்காக நிர்மாணிக்கப்பட்ட ஆலயம், மொத்த வருவாயில் செலவு தவிர்ந்த மிகுதியில், மூன்றில் ஒரு பங்கை தாயக மக்களின் கஷ்ட நிவாரணங்களுக்காக செலவிடுகிறது. தாயகத்தில் வறுமைக்கோட்டுக்கு கீழுள்ள பெண்கள் தலைமைத்துவ குடும்பங்கள், வசதியற்ற மாணவர்களின் கல்வி மேம்பாடு என்பவற்றுக்காக, இதுவரை மூன்று கோடி ஸ்ரேர்ளிங் பவுண்களுக்கு மேலான தொகையை தாயகத்துக்கு அனுப்பியுள்ளது.**
**புலத்தில் வாழும் மக்களுக்காக மூன்று கோடி ஸ்ரேர்ளிங் பவுண்களில் கல்யாண மண்டபம், தியான மண்டபம் என்பன அண்மையில் திறக்கப்பட்டன.**





லண்டனில் 1991ஆம் ஆண்டு ஓகஸ்ட் மாதம் 9ஆம் திகதி ஒன்பது அடியார்களி னால் ஸ்ரீகனகதுர்க்கை அம்மன் அறக்கட்டளை மூன்று படங்களுடன் ஆரம்பிக்கப்பட்டு, சவுத்தோல், வெம்பிளி ஆகிய இடங்களில் முறையே வெள்ளிக்கிழமை, செவ்வாய்க் கிழமைகளில் நடமாடும் ஆலயமாக செயல்பட்டது.

இதனையடுத்து, ஒரு நிரந்தர ஆலயத்தை உருவாக்க விரும்பி, பொது மக்களின் பணத்தில், ஈலிங் ஸ்ரீ கனக துர்க்கை அம்பாளின் ஆலயம் நிர்மாணிக்கப்பட்டது.

இவ்வாலயம், பொதுமக்களினால் பொது மக்களுக்காக நிர்மாணிக்கப்பட்டது. இக் கோட்பாட்டுக்கு அமைவாக, தாயகத்தில் வறுமைக்கோட்டுக்குக்கீழ் உள்ள எமது உடன்பிறப்புகளின் கஷ்டங்களை நிவர்த்திசெய்வதை கருத்திற்கொண்டு, ஆலயத்தின் மொத்த வருவாயில் செலவு தவிர்ந்த மிகுதியில், மூன்றில் ஒரு பங்கை தாயக மக்களின் கஷ்ட நிவாரணங்களுக்காக உபயோ



கப்படுத்தப்பபடவேண்டும் என்று, ஆலயத்தின் யாப்பிலேயே திருத்தம் கொணர்ந்து நிறைவேற்றப்பட்டதனால், தொடர்ந்து அதற்கு அமைவாக, அவ்வாறாக வரும் பணம், தாயகத்தில் வறுமைக் கோட்டுக்கு கீழுள்ள பெண்கள் தலைமைத்துவ குடும்பங்கள், வசதியற்ற மாணவர்களின் கல்வி மேம்பாடு என்பவற்றுக்காக, இதுவரை மூன்று கோடி ஸ்ரேர்ளிங் பவுண்களுக்கு மேலான தொகையை ஆலயம் தாயகத்துக்கு அனுப்பியுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

இதுதவிர, பதினைந்துக்கும் மேற்பட்ட அநாதை இல்லங்களை தாயகத்தில் பராமரிப்பதற்கு உதவியாக ஆலயத்தின் அடியார்கள் மாதாமாதம் பணத்தைச் செலுத்திவருகிறார்கள்.

இதேபோன்று, பல்கலைகழக மாணவர்களில் கஷ்டப்பட்ட குடும்பங்களிலிருந்து வருபவர்களுக்கும் ஆலய அடியார்கள் மாதாமாத பண உதவியைச் செய்துவருகிறார்கள். நடப்பாண்டில், 240 மாணவர்களுக்கு அடியார்கள் உதவித் தொகையை வழங்கிவருகிறார்கள்.

எமது புலம்பெயர் உறவுகளுக்கு மாத்திரமன்றி, லண்டனில் இருக்கும் முதியவர்களுக்கும், அவர்கள் தமது பொழுதை நல்ல முறையில் செலவிட வேண்டும் என்ற நோக்கத்திற்காகவும், அம்பாளின் சந்நிதியில் தங்கள் திருமணம் நடைபெறவேண்டும் என விரும்புபவர்களின் எண்ண நிறைவுக்காகவும் கல்யாண மண்டபம், தியான மண்டபம் என்பன அடங்கிய மூன்று மாடி தியான மண்டபத்தை மூன்று கோடி ஸ்ரேர்ளிங் பவுண்கள் செலவில் ஆலயத்தினர் அமைத்திருக்கிறார்கள். இதற்குரிய பணம் முழுவதும் பொதுமக்களினாலேயே வழங்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

‘மக்கள் சேவையே மகேசன் சேவை’ என்று இவ்வாலயம் செயல்படுவதனால், தாயகத்தில் உள்ள மக்களுக்காகவும், புலத்தில் இருக்கும் மக்களுக்காகவும் ஏறத்தாழ ஆறு கோடி ஸ்ரேர்ளிங் பவுண்களைச் செலவிட வசதியாக அம்பாளின் அடியவர்கள் இதுவரை வாரி வழங்கி உள்ளார்கள்.

இப்படி அமைக்கப்பட்ட தியான மண்டபம், கடந்த மார்ச் மாதம் 19ஆம் திகதி, லண்டனிலுள்ள பல்வேறு உள்ளூராட்சி தமிழ்ப் பிரதிநிதிகள் முன்னிலையில், ஆலயம் அமைந்த ஈலிங் கவுன்சிலின் மேயரினால் திறந்துவைக்கப்பட்டது.






# அறிவியல் ஒழுக்க வரலாற்று ஆய்வை மீறும் தொல்லியல் நடவடிக்கையை நிறுத்துங்கள்!

## ஜனாதிபதிக்கு சந்திரகுமார் கடிதம்

கிளிநொச்சி, ஏப். 02

**அறிவியல் ஒழுக்கத்தின் படியான வரலாற்று ஆய்வுகளுக்குப் பதிலாக, அதற்கு மாறான முறையில் ஆக்கிரமிப்பு நோக்குடன் வரலாற்றுப் புனைவைச் செய்யும் தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகளை உடனடியாக நிறுத்தி நாட்டை ஆபத்திலிருந்து பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என்று கோரி முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மு. சந்திரகுமார் ஜனாதிபதிக்கு கடிதம் ஒன்றை எழுதியுள்ளார்.**

அந்தக் கடிதத்தில், இனப்பிரச்னை, பொருளாதார நெருக்கடி போன்றவற்றினால் நாடு பலவிதமான துயரங்களில் புதையுண்டு போயிருக்கும் சூழலில், இவற்றிலிருந்து மீண்டெழுவதற்குப் பதி லாக மேலும் தீயை மூட்டுவதாகவும் புதைசேற்றில் அமிழ்த்து வதாகவுமே தொல்லியல் திணைக்களம் செயற்படுவருகிறது.

இனப்பிரச்னைக்குத் தீர்வு காணமுடியாமல் நாடு தத்தளித்துக் கொண்டிருக்கும் போது மத முரண்பாடுகளையும் உருவாக்குவது மிகப்பெரிய பின்னடைவையே தரும்.

கடந்த நான்கு ஆண்டுகளுக்குள் வடக்குக் கிழக்கில் தொல்லியல் திணைக்களத்தாலும் படையினராலும் மேற்கொள்ளப்பட்ட அத்துமீறல் - இனமுரண், மத முரண் - நடவடிக்கைகளை கீழே அட்டவணைப்படுத்துகிறோம்.

நீதிமன்றத்தின் தீர்ப்பையும் மீறி குருந்தூர்மலையில் விகாரை அமைக்கப்பட்டமை, பொத்துவில் பிரதேச செயலாளரின் நிர்வாக எல்லைக்குட்பட்ட தாண்டியடி சங்கமன்கண்டி படிமலை அடிவாரத்திலேயே இரவோடு இரவாக புத்தர் சிலை வைக்கப்பட்டமை, வவுனியா வடக்கு ஊற்றுக்குளம் பகுதியில் புத்தர் சிலை அமைக்கப்பட்டமை, யாழ்ப்பாணம் - நெடுந்தீவில் வரலாற்று சிறப்பு மிக்க வெடியரசன் கோட்டை தொல்லியல் திணைக்களத்தினால் ஆக்கிரமிக்கப்பட்டிருப்பது, நெடுங்கேணியில் வெடுக்குநாறிமலையில் அமைந்திருந்த ஆதிசிவன் கோவில் இரவோடிரவாக அழிக்கப்பட்டிருப்பது, கச்சதீவில் புத்தர் சிலை அமைக்கப்பட்டுள்ளமை.

இந்த நடவடிக்கைகள் தமிழ், முஸ்லிம் மக்களிடம் பதற்றத்தையும் கொந்தளிப்பையும் உருவாகியுள்ளன. இது மேலும் தொடருமாக இருந்தால் இலங்கைச் சமூகங்கள் மேலும் மேலும் பிளவுண்டு செல்வதற்கே வழிவகுக்கும். அப்படி சமூகங்கள் பிளவுண்டால் அதை வெளிச் சக்திகள் தமக்கு வாய்ப்பாகப் பயன்படுத்திக் கொள்ளும்.

இலங்கை ஒரு பன்மைத்துவ நாடு. பல மதங்களுக்குரிய தேசம். பல் பண்பாட்டுக்குரிய இடம் என்பதற்குப் பதிலாக, நாட்டில் ஐக்கியத்தையும் அமைதியையும் சமாதானத்தையும் உருவாக்கி அதைக் கட்டியெழுப்புவதற்குப் பதிலாக தமிழ், முஸ்லிம் சமூகங்களைக் கலவரப்படுத்தும் வகையிலேயே மேற்படி தொல்லியல் திணைக்களத்தின் நடவடிக்கைகள் உள்ளன.

நாடு இன்றுள்ள சூழலில் இத்தகைய சிலைகளை அமைக்கும் நடவடிக்கைள் அவசியமா? நாட்டில் தொழிற்சாலைகளையும் உற்பத்தி மையங்களையும் உருவாக்குவதற்குப் பதிலாக இன முரணை ஏற்படுத்தும் விதமாக தொல்லியல் திணைக்களம் செயல்படுவது மிக மிகத் தவறானது. இது மேலும் பாரதூரமான பின்னடைவுகளையும் பின்விளைவுகளையும் உருவாக்கும். எனவே, இது தொடர்பாக தாங்கள் உடனடியான இவற்றைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கையை மேற்கொண்டு நம்பிக்கையைக் கட்டியெழுப்ப வேண்டும்- என்றுள்ளது.

# நிரந்தர முகவரி பதிவு இல்லை; அடிப்படை உரிமை மீறல் மனு!

## மலையக தொழிலாளி தாக்கல்

கொழும்பு, ஏப். 02

இலங்கையில் மலையக சமூகத்தை சேர்ந்த மக்களுக்குப் பதிவு செய்யப்பட்ட நிரந்தர முகவரி இல்லாதமையை சுட்டிக்காட்டி மலையக தோட்டத் தொழிலாளியொருவர் உயர் நீதிமன்றில் அடிப்படை உரிமை மீறல் மனுவை தாக்கல் செய்துள்ளார்.

நாடளாவிய ரீதியில் தோட்டத்தொழிலாளர் சமூகத்திற்கு பதிவு செய்யப்பட்ட நிரந்தர முகவரியை அதிகாரிகள் வழங்கவேண்டும் என நீதிமன்றம் உத்தரவிடவேண்டும் என்று அவர் தனது மனுவில் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மாவத்தகம மூவாகந்தவத்தையைச் சேர்ந்த ஜீவரட்ணம் சுரேஷ்குமார் என்பவரே இந்த மனுவை தாக்கல் செய்துள்ளார்.

தோட்டத்தொழிலாளர்களுக்கான பதிவு செய்யப்பட்ட நிரந்தர குடியிருப்பு முகவரிகள் அவர்கள் அரசாங்க சேவைகளை அணுகுவதையும் நாட்டின் ஜனநாயக செயல்பாடுகளில் பங்கேற்பதையும் உறுதி செய்யும் அந்த விடயத்தில் முக்கிய பங்களிப்பை வழங்கும் என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

மூவாங்கந்தை தோட்டத்தில் சுமார் 300 குடும்பங்கள் வசிக்கின்றன. இந்த குடும்பங்களில் உள்ள எவருக்கும் நிரந்தர முகவரி இல்லை எனவும் சுட்டிக்காட்டியுள்ள மனுதாரர். எனவே மேற்படி பகுதியில் வசிக்கும் மக்கள் தபால்களை பொருட்களை தங்களின் வீடுகளில் பெற்றுக்கொள்ள முடியாத நிலை காணப்படுகிறது.

அந்த பகுதியில் வசிக்கும் அனைவருக்கும் பொதுவான முகவரியாக காணப்படும் மூவாங்கந்தை வத்தை மாவத்தகமை என்ற முகவரிக்கே அனைத்து கடிதங்களும் பொருட்களும் அனுப்பப்படுகின்றன என்றும் அவர் சுட்டிக்காட்டியுள்ளார்.

இந்த பகுதியில் வசிக்கும் மக்களின் வீடுகளுக்கு என தனிப்பட்ட நிரந்தர முகவரில் இல்லை. இவர்களுக்கு அனுப்பப்படும் கடிதங்கள் மாவத்துகம பிரதான தபால் நிலையத்துக்கே அனுப்பப்படுகின்றன. தபால்காரர்கள் மூவாங்கந்தை உப தபால் நிலையத்திற்கே வழங்குகின்றனர்.

பின்னர் குறிப்பிட்ட தோட்டத்தின் முக்கிய அதிகாரியிடம் இந்த கடிதங்கள் வழங்கப்படுகின் றன. அவர் நம்பகதன்மை அற்ற தனது முகவர் மூலம் கடிதங் களை விநியோகிப்பதற்கான நடவடிக்கைளை எடுக்கின்றார் என மனுதாரர் தெரிவித்துள்ளார்.

(ஐ)

# ஆசிரியர் தொழிற்சங்கங்கள்...

(10ஆம் பக்கத் தொடர்ச்சி)

எந்தவொரு செயற்பாடுகளிலும் ஈடுபடாதிருப்பது மட்டுமன்றி புதிய உறுப்பினர்களைச் சேர்ப்பதற்கான உருப்படியான முயற்சிகளோ அன்றி ஜன நாயக வழியிலான நிர்வாக உறுப்பினர் தெரிவுகளோ இடம்பெறாத ஆனால் சட்ட ஓட்டைகளைப் பயன்படுத்தி பெயரளவில் இயங்கும் ஒரு தொழிற்சங்கமா கவே உள்ளது. அதன் மூலம் கிடைக்கும் சலுகைகளை மட் டும் அனுபவித்துக் கொள்கின்ற னர். இந்த வெற்றிடத்தைத் தனக் குச் சாதகமாகப் பயன்படுத்த இலங்கை ஆசிரியர் சங்கம் முயன்று வருகிறது. தேசிய அடிப் படையிலான எந்தவொரு தொழிற்சங்கமும் பெரும்பான் மையான சிங்கள மக்களின் நலனை முன்னிறுத்தியே செயற் படும். சிங்கள, தமிழ் அரச ஊழி யர்களைப் பொறுத்து பொது வான பிரச்சி னைகள் இருப்பது போலவே முரண்பாடுகளும் காணப்படு கின்றன. குறிப்பாகச் சம்பளம் போன்ற விடயங்கள் பொது வாக இருப்பினும் ஆசிரி யர், அதிபர், கல்வி நிர்வாகிக ளின் உள்வாங்கல்,பதவி உயர்வு, நியமனங்கள் போன்றவற்றில் முரண்பாடுகள் உள்ளன. முரண் படும் விடயங்களில் அவை சிங் கள ஊழியர் சார்புநிலை எடுக் கும் அல்லது மௌனமாக இருக் கும். இதனால் மொழிவழித் தொழிற் சங்கங்கள் தமிழர்க்கு அவசிய மானவை. ஒத்த பிரச் சினை களில் இணைந்தும் ஒதுக் கப் படும்போது தனித்துவமாக வும் செயற்படுவதற்கான வாய்ப்பை அது தமிழ் ஊழி யர்க்கு வழங் கும். அத்துடன் தமிழ் அரச ஊழியர்கள் பேரின வாதச் சிந்தனையுடைய கட்சிக ளின் தொழிற்சங்கங்களில் இணை வது தொடர்பாக எச்சரிக்கையு டன் நடந்து கொள்வது அவசி யமாகும்.

எனவே ஆசிரியர் தொழிற் சங்கங்கள் தொழிற்சங்கம் என்ற வகையில் அதன் உறுப்பினர்க ளின் நியாயமான கோரிக்கை களை வென்றெடுப்பதற்கு முன் னுரிமை அளிக்கும் அதேவேளை அதற்கான போராட்டங்களின் போது மாணவர்களின் கல்வி நடவடிக்கைகளில் இயன்றவரை பாதிப்பு ஏற்படுத்தாத உபாயங் களை கையாள்வதே பொருத்த மாக அமையும். அதைவிடுத்து கட்சிசார்ந்த அரசியல் நிகழ்ச்சி நிரலின் கீழ் தொழிற்சங்க நடவ டிக்கைகளில் ஈடுபடுமானால் அது மாணவர் கல்விக்குச் சாப மாகவே அமையும்.

# கெப் ரக வாகனம் கவிழ்ந்ததில் 2 மாணவர்கள் பலி; 7 பேர் காயம்!

## பாடசாலை கிரிக்கெட் போட்டியில் துயரம்

கொழும்பு, ஏப். 02

ஊவா மகா வித்தியாலயத்துக்கும் பதுளை தர்மதுதா வித்தியாலயத்துக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டியின் போது கெப் ரக வாகனம் கவிழ்ந்து விபத்துக்குள்ளான தில் இரண்டு மாணவர்கள் உயிரிழந்தனர். அத்துடன், ஏழு மாணவர்கள் படுகாயமடைந்தனர் என்று பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

காயமடைந்தவர்கள் பதுளை பொது மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

கிரிக்கெட் போட்டியின் போது வாகன அணிவகுப்பு மைதானத்தை சுற்றிச் சென்று கொண்டிருந்தபோதே இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. பதுளை பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

(ஐ)

# மகாவலி ஆற்றில் மூழ்கி 8 வயது சிறுவன் மாயம்!

கொழும்பு, ஏப். 02

ஹசலக்க, வெரகந்தோட்டையிலுள்ள மகாவலி ஆற்றில் மூழ்கி எட்டு வயது சிறுவன் காணாமல் போயுள்ளான் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவர் தனது மூத்த சகோதரருடன் ஆற்றில் குளிக்கச் சென்றபோதே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காணாமல்போன சிறுவர் வெரகந்தோட்டை பகுதியைச் சேர்ந்தவர் என தெரிவிக்கப்பட்டுள்ளது.

சிறுவனை தேடும் பணிகள் மேற்கொள்ளப்பட்டு வரும் நிலையில், சம்பவம் தொடர்பில் ஹசலக்க பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தமிழ்த் தேசிய தலைமைகள்...

(09ஆம் பக்கத் தொடர்ச்சி)

எவராவது ஏற்கத் தயாரில்லை என்றால் நீதிமன்றம் செல்லலாம் என்று சவால் விடுகிறார் நீதி அமைச்சர். அடுத்த 25 ஆண்டுகளுக்கு தங்கள் கட்சியின் நிர்வாகமே ஆட்சியில் என்பது போல அறிவிக் கிறார் ரணில் விக்கிரமசிங்க. தமக்கு எந்தப் பதவியும் வேண்டாம், தேவையானதை ரணில் தருவார் என்கிறார் மகிந்த ராஜபக்ச.

இதுதான் சிங்கள தேசத்தின் போக்கு என்றால், தமிழர் தேசம் நாசமாய்ப் போனாலும் தமிழர் தலைவர்களும் தமிழ்த் தேசிய கட்சிகளும் ஊடக அறிக்கை களை யும் ஒளிப்படக் காட்சி களையும் தவிர வேறெதுவும் செய்ய மாட்டார்கள். தமிழ் கட்சிகளின் பிரதிநிதிகள் பிச்சைக்காரர்க ளாக உள்ளனர் என்று யாழ்ப்பாண பல்கலைக் கழக துணைவேந்தர் சில நாட்க ளுக்கு முன்னர் கூறியது உண்மை யிலும் உண்மையாகிறது.

பொதுமக்கள் பொது இடங் களிலும் வீதிகளிலும் போராட் டம் நடத்துவதற் குப் பதிலாக தமிழ்த் தேசிய கட்சிகளின் பிர திநிதிகளும் பிரமுகர்களும் இருப் பிடங்களுக்கு முன்னால் ஒன்றுகூடி போராட்டம் நடத்த வேண்டியது அவசரமான அவ சியமாகவுள்ளது.

•

ஈழநாடு



## விக்கிரகங்கள்...

செல்வேன் என்றும் அப்போது, விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வேன் என்றும் கூறியிருந்தார்.

இதனிடையே, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உடைக்கப்பட்ட விக்கிரகங்களுக்கு பதிலாக புதிய விக்கிரகங்களை மீளப் பிரதிஷ்டை செய்வதற்கும் ஆலயத்தை அமைக்க உதவுவதாகவும் ஈழம் சிவசேனை அமைப்புக்கு வாக்குறுதி அளித்தார் என்று அந்த அமைப்பின் தலைவர் மறவன்புலவு க. சச்சிதானந்தன் தெரிவித்திருந்தார்.

இந்த நிலையில், அவசரஅவசரமாக இன்று அதிகாலை 1 முதல் 4 மணி வரையான நேரத்துக்குள் சிவலிங்கம் உள்ளிட்ட விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்ய ஆலய தரப்பு முயன்றது ஏன் என்ற கேள்வியை அப்பகுதியினர் எழுப்பியிருந்தனர். (ஐ)

## வட, கிழக்கு...

மண்டபத்தில் நேற்று மாலை நடந்த கலந்துரையாடலிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டது.

இந்தக் கூட்டத்தில் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்சிகளான “புளொட்“ தலைவர் த. சித்தார்த்தன், “ரெலோ“ தலைவர் செல்வம் அடைக்கலநாதன், “ஈ. பி. ஆர். எல். எவ்.” தலைவர் சுரேஷ் பிறேமசந்திரன் உள்ளிட்ட 7 தமிழ்த் தேசியக் கட்சிகளின் தலைவர்கள் - பிரதிநிதிகள் மற்றும் எம். ஏ. சுமந்திரன் எம். பி. ஆகியோரும் தென்னிந்திய திருச்சபையின் பேராயர், வேலன் சுவாமிகள் ஆகியோருடன் 22 பொது அமைப்புகளின் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர்.

இதன்போது, தமிழ் மக்களின் தொன்மையையும் தேசியத்தையும் சிதைக்கும் வகையில் கலாசார பண்பாட்டு மற்றும் சமூக விழுமியங்களை சிதைத்து நமது இருப்பை கேள்விக்கு உள்ளாக்கும் வகையில் சைவ ஆலயங்களை நிர்மூலமாக்கியும் அங்கு பௌத்த சின்னங்களை நிறுவியும் அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் திட்டமிட்ட கலாசார அடிப்படையிலான இனப்படுகொலையை எதிர்த்து பெரும் எதிர்ப்புப் போராட்டம் ஒன்றை வடக்கு - கிழக்கில் உள்ள எட்டு மாவட்டங்களிலும் ஒரே நாளில் முன்னெடுப்பதாக தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான ஒழுங்குகளை முன்னெடுக்க ஒரு குழுவும் அமைக்கப்பட்டது.

இதேபோன்று பயங்கரவாத எதிர்ப்பு சட்டமூலத்தை பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கவுள்ள இவ்வேளையில் அதனுடைய கடுமையான எதிர்விளைவுகளை கவனத்தில் கொண்டு அச்சட்டமூலத்தை எதிர்த்தும் அதை நிறைவேறாமல் தடுப்பதற்கும் ஏனைய தமிழ் பேசும் மக்களின் பிரதிநிதிகளோடு கலந்துரையாடல் நடத்தி ஒன்றிணைந்த எதிர்ப்பு போராட்டத்தை நடத்துவதாகவும் தீர்மானிக்கப்பட்டது.

இதற்கான திகதிகள் விவரங்கள் என்பன ஏற்பாட்டு குழுவினரால் பின்னர் அறிவிக்கப்படும் என்று இந்தக் கூட்டத்தின் ஒருங்கிணைப்பாளர் கு. சுரேந்திரன் விடுத்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, கிழக்கு மாகாணத்தில் போராட்டங்கள் நடத்துவது தொடர்பில் அங்குள்ள நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் கலந்துரையாடும் பொறுப்பு த. சித்தார்த்தன், செல்வம் அடைக்கலநாதனிடம் ஒப்படைக்கப்பட்டது.

போராட்டத்தை ஒருங்கிணைக்கும் குழுவில் கு.சுரேந்திரன், பா.கஜதீபன், விதுசன், க. சர்வேஸ்வரன், நிஷாந்தன், வேலன் சுவாமி, கலையமுதன் ஆகியோர் அங்கம் வகிக்கின்றனர். (ஐ)

## கறுப்புகொடி...

சுட்டிக்காட்டியுள்ளார்.

நோயாளர்களை காப்பாற்றுவதற்காக அர்ப்பணிப்புடன் செயற்படும் சுகாதார ஊழியர்களின் பணிக்கு இதனூடாக இடையூறு ஏற்படும் எனவும் சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதற்கமைய, சுகாதார அமைப்புகளின் வளாகத்தினுள் கறுப்புக் கொடி ஏற்றுவதையும் பதாதைகளை காட்சிப்படுத்துவதையும் தவிர்க்குமாறு குறிப்பிட்டு சுகாதார அமைச்சின் கீழ் உள்ள அனைத்து தலைவர்களுக்கும் சுற்றறிக்கை அனுப்பப்பட்டுள்ளது.

இதேவேளை, இந்த சுற்றறிக்கை ஊடாக தமது எதிர்ப்பு நடவடிக்கையை ஒடுக்குவதற்கு அரசாங்கம் முயற்சிப்பதாக சுகாதார தொழிற்சங்கக் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை நடைபெறவுள்ள நிறைவேற்று சபைக் கூட்டத்தில் இது தொடர்பில் கலந்துரையாடப்பட்டு அடுத்த கட்ட நடவடிக்கைகள் குறித்து தீர்மானிக்கப்படும் என அரச வைத்திய அதிகாரிகள் சங்கத்தின் ஊடகப் பேச்சாளர் டாக்டர் சமில் விஜேசிங்க தெரிவித்தார். (அ)

## சட்டம்...

அதேபோல் தான் ஒருபோதும் பிரச்சித்த மான தீர்மானங்களை மேற்கொள்ளப்போவ தில்லை எனவும், மாறாக சரியான தீர்மானங்க ளையே எடுப்பதாக வும் தெரிவித்த ஜனாதிபதி, பிரசித்தமான தீர்மானங்களினால் நாட்டுக்குச் சீரழிவு மட்டுமே ஏற்பட்டதாகவும் குறிப்பிட்டார்.

முப்படைகளினதும் தலைவரான ஜனாதிபதி, அநுராதபுரத்திலுள்ள விமானப்படை முகாமில் நேற்று சனிக்கிழமை முப்படையினருக்கான சிறப்புரை ஆற்றியபோதே மேற்கண்டவாறு கூறினார்.

கருத்துச் சுதந்திரத்திற்கமைய தன்னை விமர்சிக்க அனைவருக்கும் சுதந்திரம் உள்ளதெனச் சுட்டிக்காட்டிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, வீதிகளில் வன்முறைகளை மேற்கொள்ள எவருக்கும் உரிமை இல்லை எனவும் வலியுறுத்தினார்.

சரியானதை செய்ய அனைவரும் பழகிக்கொள்ள வேண்டும் என்றும், அதற்கான சக்தி பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு உள்ளதா என்பதை அறியவே, சர்வதேச நாணய நிதியத்தின் இணக்கப்பாடுகளை முதலில் பாராளுமன்றத்தில் சமர்ப்பித்ததாகவும் தெரிவித்தார்.

அதனை உதாரணமாக கொண்டு சர்வதேச நாணய நிதியத்தின் திட்டங்களை நடைமுறைப்படுத்த அனைவரும் ஒத்துழைக்கவேண்டும் என்றும் புதிய சிந்தனைகளுடன் புதிய பயணத்தை தொடர்ந்தால் 25 வருடங்களுக்குள் பெரும் அபிருத்தியை அடைய முடியும் என்றும் ஜனாதிபதி தெரிவித்தார்.

பயங்கரவாதத்தை வெற்றி கொண்டது போன்றே நாட்டின் பொருளாதார யுத்தத்தையும் வெற்றி கொண்டு பொருளாதார ஸ்திரத்தன்மையை உறுதிப்படுத்த துரித நடவடிக்கை எடுப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

அதற்காக முப்படைகளினதும் பொலிஸாரினதும் ஒத்துழைப்பு தொடர்ச்சியாக தேவையென வலியுறுத்திய ஜனாதிபதி, சட்டம் ஒழுங்கை பாதுகாக்கக் கடந்த காலங்களில் படையினர் வழங்கிய ஒத்துழைப்புக்களையும் பராட்டினார்.

முப்படையினர் இந்தப் பணியை செய்யத் தவறியிருந்தால் இன்று நாடு வன்முறை நிறைந்த பூமியமாக இருந்திருக்கும்என்றும்ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

அதேபோல் உலகின் பலம்வாய்ந்த நாடுகளுக்கிடையில் இடையிலான போட்டித் தன்மை, இந்து சமுத்திர வலயத்தை பெரிதும் பாதிக்கும் எனவும் இலங்கையின் ஜனாதிபதி என்ற வகையில் அந்த பாதிப்பிலிருந்து இலங்கையை மீட்க முயற்சிப்பதாகவும் அவர்

## வடக்கு - கிழக்கு ...

என்று அமைச்சர் காஞ்சன விஜயசேகர அண்மையில் தெரிவித்திருந்தார்.

இதற்காக இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துக்கு சொந்தமான 150 எரிபொருள் நிலையங்களை அந்த நாடுகளுக்கு வழங்கவும் நடவடிக்கை எடுக்கப்படுவதாக அவர் கூறியிருந்தார்.

இந்த நிலையிலேயே வடக்கு, கிழக்கு மாகா ணங்கள் முழுவதும் எரிபொருள் விநியோகம் மற்றும் விற்பனை உரிமையை இந்திய நிறுவனமான லங்கா ஐ. ஓ. சிக்கு வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளதாகக் கூறப்படுகின்றது.

லங்கா ஐ. ஓ. சி. நிறுவனம் இலங்கையில் 2003 ஆம் ஆண்டு தொடக்கம் எரிபொருள் விநியோ கம் மற்றும் விற்பனையில் ஈடுபட்டுள்ளது. இலங்கை முழுவதும் 211 எரிபொருள் நிலையங் களையும் கொண்டுள்ளது.

அண்மையில், இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனத்துடன் திருகோணமலை பெற்றோலியம் ரேர்மினல் என்ற பங்கு நிறுவனத்தை ஆரம்பித்தது. 50 கோடி டொலர் பெறுமதியில் திருகோணமலை எண்ணெய் குதங்களை புனரமைத்து எரிபொருள் சேமிப்பு - விநியோகம் - விற்பனையை செய்வதே இந்த ஒப்பந்தத்தின் நோக்கம் என்பதும் குறிப்பிடத்தக்கது. (ஐ)

## சிவலிங்கம்...

இதையடுத்து, விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வது தற்காலிகமாக நிறுத்திவைக்கப்பட்டுள்ளதாகவும் இன்றைய தினம் அங்கு வரவுள்ள அமைச்சர்கள் டக்ளஸ் தேவானந்தா, ஜீவன் தொண்டமான் ஆகியோருடன் பேசி முடிவு எடுத்த பின்னர் விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்வதற்கு நாள் அல்லது நேரம் குறிக்கப்படும் என்றும் ஆலய நிர்வாகத்தினர் ஈழநாடு நாளிதழுக்கு தெரிவித்தனர்.

இதேநேரம், விக்கிரகங்களை பிரதிஷ்டை செய்யும் நோக்கில் உடைத் தெறியப்பட்ட விக்கிரகங்கள் இருந்த இடத்தில் இருந்த சிதைவுகளை அகற்றிய கட்டுமான பணியாளர்கள் இருவரும் அந்தப் பகுதியில் துப்புரவு பணி செய்த ஒருவருமாக 3 பேரை பொலிஸார் கைது செய்து வாக்குமூலம் பெற்ற பின்னர் விடுவித்துள்ளனர்.

மாலை 5 மணியளவில் கைது செய்யப்பட்ட இவர்கள் நேற்றிரவு 10 மணியளவிலேயே விடுவிக்கப்பட்டனர். ஆனால், தேவைகளின் பொருட்டு ஆலயம் அமைந்துள்ள சுற்றுப்புறப் பகுதிக்கு ஆலய நிர்வாகத்தினரால் கொண்டு செல்லப்பட்ட டிராக்டரை பறிமுதல் செய்த பொலிஸார் அதனை விடுவிக்க மறுத்துவிட்டனர் என்றும் தெரிய வருகின்றது.

வெடுக்குநாறிமலை ஆதிசிவன் ஆலயம் இருந்த இடத்தில் பௌத்த தொல்லியல் இருப்பதாகக் கூறி தொல்பொருள் திணைக்களம் அப்பகுதியை தனது கட்டுப்பாட்டின் கீழ் கொண்டுவந்தது. இதைத் தொடர்ந்து ஆதி சிவன் ஆலயத்தில் பூசைகளுக்கும் தடை விதிக்கப்பட்டது. அத்துடன், தொல்பொருள் பகுதியை சேதமாக்கினர் என்ற குற்றச்சாட்டில் ஆலய நிர்வாகத்தினர் மீதும் வழக்கு தொடர்ந்தது. இதன்போது கைது செய்யப்பட்ட ஆலய நிர்வாகத்தினர் பிணையில் விடுவிக்கப்பட்ட நிலையில், அவர்கள் தொடர்ந்த வழக்கின் மூலம் பூசைகளை செய்வதற்கு அனுமதியளிக்கப்பட்டது.

இந்த நிலையில், கடந்த ஞாயிற்றுக்கிழமை ஆதிசிவன் ஆலயத்தின் விக்கிரகங்கள் இனந்தெரியாதோரால் பெயர்த்தும் உடைத்தும் எறியப்பட்டன. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து வவுனியாவில் நேற்றுமுன்தினம் போராட்டம் ஒன்று இடம்பெற்றது. இந்தவேளையில், ஆதிசிவன் ஆலயப் பகுதியில் விக்கிரகங்கள் மீளப் பிரதிஷ்டை செய்யப்படும் என்று அமைச்சர்களான டக்ளஸ்தேவானந்தா, ஜீவன் தொண்டமான் ஆகியோர் கூறியிருந்தனர் என்பதும் இங்கு நினைவில் கொள்ளத்தக்கது. (ஐ)

## புதிய...

நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே அவர் இவ்வாறு கூறினார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு:

1979 ஆம் ஆண்டு முதல் பயங்கரவாத தடைச்சட்டம் அமுலில் உள்ளது. புலிகளை ஒடுக்குவதே இதன் பிரதான நோக்கம். ஆனால் போர் முடிவடைந்த பின்னரும் அச்சட்டம் அமுலில் இருக்கின்றது. அது நீக்கப்படவேண்டும் என பலரும் வலியுறுத்தினர். (அ)

## ஏப். 10இற்கு ...

ஆம் திகதிக்குள் தபால் வாக்குச்சீட்டுகளை அரச அச்சகத்தில் பெற்றுக்கொள்ள வேண் டும் என்று தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலை வர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்துள்ளார்.

ஏப்ரல் 25 ஆம் திகதி தேர்தலை இரத்துச் செய்வது குறித்து எந்த முடிவும் எடுக்கப்படவில்லை என்றும் புஞ்சிஹேவா அறிவித்துள்ளார்.

ஏப்ரல் 10 ஆம் திகதிக்குப் பின்னர் நிலைமையைக் கருத்தில் கொண்டு முடிவு எடுக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார் (அ)

## ஐ.எம்.எவ் ...

ஜனாதிபதி பணிக்குழாமின் பிரதானி சாகல ரத்நாயக்க, நிதியமைச்சின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன மற்றும் மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க ஆகியோரின் தலைமையில் இந்த குழு நியமிக்கப்படவுள்ளதாக நிதியமைச்சின் சிரேஷ்ட அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

இந்த குழுவை அமைப்பதற்கு அமைச்சரவை அனுமதி வழங்கியுள்ளதாகவும் நிதியமைச்சு குறிப்பிட்டுள்ளது.

சர்வதேச நாணய நிதியத்துடன் ஏற்படுத்திக்கொள்ளப்பட்ட இணக்கப் பாட்டை செயற்படுத்துதல், அதன் முன்னேற்றம் தொடர்பில் மாதாந்த அறிக்கை தயாரித்து அமைச்சரவைக்கு வழங்குதல் ஆகியன இந்தக் குழுவின் பிரதான கடமைகள் என நிதியமைச்சு தெரிவித்துள்ளது. (அ)

## வைத்தியசாலை...

அவர் அங்கிருந்து வெளியேறும் போது ”இன்னும் உயிருடன் இருக்கிறேன்” என்று நகைச்சுவையாக கூறினார் என பி.பி.சி. தெரிவித்துள்ளது.

கடந்த புதன்கிழமை அவர் மருத்துவமனையில் அனுமதிக்கப்பட் டார்.

அவரது உடல்நிலை சற்று சீராக இருப்பதாகவும் சனிக்கிழமை அவர் மருத்துவமனையில் இருந்து வெளியேறுவார் எனவும் வத்திக்கான் செய்தி தொடர்பாளர் முன்னதாக அறிவித்திருந்தார்.

இந்நிலையில், அவர் மருத்துவமனையில் இருந்து நேற்று வெளியேறினார்.

பாப்பரசருக்கு நுண்ணுயிர் எதிர்ப்பிகள் நரம்பு வழியாக செலுத்தப்பட்டதாக வத்திக்கான் தெரிவித்துள்ளது. (அ)

## மகிந்தவின்...

சேர்ந்த 20பேர் அண்மையில் கட்டாய விடுமுறையில் அனுப்பப்பட்டனர். இவர்களில் 19 பேர் மகிந்த ராஜபக்ஷவை சந்தித்து பேசியிருந்தனர்.

இந்த நிலையில், அவர்களை மீண்டும் பணியில் இணைக்குமாறு பரிந்துரை செய்வதற்காக எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகரவை மகிந்த ராஜபக்ஷ தொழில்சங்கத்தினர் முன்னிலையிலேயே தொலைபேசியில் தொடர்பு கொண்டார். அவர் பல தடவைகள் அவருக்கு அழைப்பு எடுத்தபோதும் அமைச்சர் அதற்கு பதிலளிக்கவில்லை என்று கூறப்படுகின்றது. (ஐ)

ஈழநாடு
Eelanadu

# தமிழர்களின் இருப்பு அழிப்பு; சங்கானையில் போராட்டம்!




யாழ்ப்பாணம், ஏப். 02

வடக்கு - கிழக்கில் தமிழர்களின் இருப்பை அழிக்கும் திட்டமிட்ட செயல்பாடுகளைக் கண்டித்தும் அதைத் தடுத்து நிறுத்த வலியுறுத்தியும் கண்டனப் போராட்டம் நேற்று சனிக்கிழமை சங்கானையில் நடைபெற்றது.

இலங்கை தமிழரசு கட்சியின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் தலைமையில் சங்கானை சந்தியில் இந்தப் போராட்டம் நடைபெற்றது.

போராட்டத்தில் பங்கெடுத்தவர்கள், "வெடுக்குநாறி மலை எங்கள் சொத்து", "கன்னியா எங்கள் சொத்து", "நெடுந்தீவு எங்கள் சொத்து", "கச்சதீவு எங்கள் சொத்து", "அழிக்காதே அழிக்காதே தமிழினத்தை அழிக்காதே", "தொல்லியல் திணைக்களமே வெளியேறு", "வெளியேறு வெளியேறு படைகளே வெளியேறு", "எங்கே எங்கே உறவுகள் எங்கே", "தமிழர்களின் தீர்வு சுயாட்சியே", "எடுப்பது பிச்சை அறுப்பது எங்களின் கழுத்தையா" போன்ற வாசகங்கள் தாங்கிய பதாதைகளை போராட்டக்காரர்கள் ஏந்தியிருந்ததுடன், அது சார் கோஷங்களையும் எழுப்பினர்.

இந்தப் போராட்டத்தில் தமிழரசு கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, பாராளுமன்ற உறுப்பினர் எம். ஏ. சுமந்திரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஈ. சரவணபவன் உள்ளிட்ட அரசியல் பிரமுகர்கள், பொது மக்கள் எனப் பலரும் கலந்துகொண்டிருந்தனர். (ஐ)

## 16 கிலோ கஞ்சாவுடன் மன்னாரில் இருவர் கைது!

மன்னார், ஏப். 02

மன்னாரில் இரு வேறு சந்தர்ப்பங்களில் 16 கிலோ கேரள கஞ்சா பொதிகளுடன் இரு சந்தேக நபர்கள் நேற்று முன்தினம் மன்னார் மாவட்ட பொலிஸ் குற்றப்புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றப்புலனாய்வு பிரிவுக்கு கிடைத்த இரகசிய தகவலின் அடிப்படையில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

மன்னார், கொன்வன்ற் வீதியில் ஒருவரும், மன்னார் - தலைமன்னார் பிரதான வீதியில் உள்ள விசேட அதிரடிப்படை முகாம் அருகே மற்றையவரும் கைது செய்யப்பட்டனர்.

மன்னார் சின்னக் கடையை சேர்ந்த 37 வயது நபரிடமிருந்து 6 கிலோ 30 கிராம் கேரள கஞ்சாவும் கட்டுக்கரான் குடியிருப்பை சேர்ந்த 28 வயது நபரின் கெப் ரக வாகனத்திலிருந்து 10 கிலோ 60 கிராம் கேரள கஞ்சாவும் கைப்பற்றப்பட்டுள்ளன.

சந்தேக நபர்களை நீதிமன்றில் முற்படுத்த பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர். (ஐ)

## பல கோடி ரூபாய் மோசடி; 39 சீனப் பிரஜைகள் கைது!

கொழும்பு, ஏப். 02

பல்வேறு நாடுகளில் வசிக்கும் மக்களின் கணக்குகளில் இருந்து பல கோடி ரூபாய் பெறுமதியான பணத்தை இணையத்தளம் மூலம் மோசடி செய்த சீனப் பிரஜைகள் 39 பேரை சந்தேகத்தின் பேரில் கைது செய்துள்ளனர் என்று களுத்துறை - அளுத்கம பொலிஸார் தெரிவித்தனர்

தூதரகங்கள் ஊடாக பெறப்பட்ட முறைப்பாடுகள் மூலம் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் குறித்த குழுவினர் நேற்று சனிக்கிழமை கைது செய்யப்பட்டனர்.

அளுத்கம - களுவாமோதரை பிரதேசத்தில் உள்ள சுற்றுலா விடுதி ஒன்றில் வாடகை அடிப்படையில் பல மாதங்களாகத் தங்கியிருந்த இவர்கள் கைது செய்யப்பட்டு அளுத்கம பொலிஸ் நிலையத்துக்கு அழைத்துச் செய்யப்பட்டுள்ளனர்.

அவர்களிடமிருந்து, கணினிகள், மதிப்பு மிக்க திறன்பேசிகள் மற்றும் பெருந்தொகை பணத்தை பொலிஸார் கைப்பற்றியுள்ள நிலையில், சம்பவம் தொடர்பில் அளுத்கம பொலிஸார் மற்றும் புலனாய்வு அதிகாரிகள் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ஐ)

# செயற்திறன்மிக்க மறுசீரமைப்பு செயன்முறைக்குள் அரசாங்கம்!

## மத்திய வங்கி ஆளுநர் கூறுகிறார்

கொழும்பு, ஏப். 02

இலங்கை அரசாங்கம் செயற்திறன்மிக்க மறுசீரமைப்புச் செயன்முறையில் கால்பதித்திருப்பதுடன் சர்வதேச நாணய நிதியத்தின் நிதியளிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான முன்கூட்டிய நடவடிக்கைகள் அனைத்தையும் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

அதன்படி நாட்டின் பொருளாதாரம் வலுவடைவதைக் காண்பிக்கின்ற நேர்மறையான சமிக்ஞைகள் ஏற்கனவே தென்பட ஆரம்பித்திருக்கின்றன என்று இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் மற்றும் திறைசேரியின் செயலாளர் என்போர் கூட்டாகத் தெரிவித்துள்ளனர்.

அதுமாத்திரமன்றி நாட்டின் பொருளாதாரத்தை மீட்டெடுக்கும் அதேவேளை, சர்வதேச நாணய நிதியச் செயற்திட்டத்தை வெற்றிகரமாக நிறைவு செய்யும் நோக்கில் தற்போதைய மறுசீரமைப்பு நடவடிக்கைகளைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும் அவர்கள் அறிவித்துள்ளனர்.

நீடிக்கப்பட்ட நிதியுதவிச் செயற்திட்டத்தின்கீழ் எதிர்வரும் 48 மாத காலத்தில் இலங்கைக்கு சுமார் 3 பில்லியன் டொலர் நிதியை வழங்குவதற்கு சர்வதேச நாணய நிதியத்தின் பணிப்பாளர் சபை கடந்த 20 ஆம் திகதி அனுமதியளித்துள்ளது. அதனையடுத்து வியாழக்கிழமை இலங்கை நேரப்படி மாலை 6 மணிக்கு மெய்நிகர் முறைமையின் ஊடாக கடன்வழங்குனர்கள் மற்றும் முதலீட்டாளர்களுக்கு அடுத்தகட்ட நடவடிக்கைகள் குறித்து இலங்கை விளக்கமளித்தது.

அதனைத் தொடர்ந்து மேற்படி செயற்திட்ட விளக்கமளிப்பு சந்திப்புக்குத் தலைமை தாங்கிய இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர் கலாநிதி நந்தலால் வீரசிங்க மற்றும் திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்தன ஆகியோர் இணைந்து வெளியிட்டுள்ள கூட்டறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளனர். அந்த அறிக்கையில் அவர்கள் மேலும் கூறியிருப்பதாவது:

சர்வதேச நாணய நிதியத்தின் உதவிச்செயற்திட்டமானது கொள்கை அமுலாக்கம் தொடர்பில் தெளிவான வழிகாட்டலை வழங்குவதுடன் இலங்கையின் பொருளாதாரத்தை வலுப்படுத்தி, வளர்ச்சியை மீளூறுதிப்படுத்துவதற்கு அவசியமான உந்துதலையும் அளிக்கின்றது.

அதன்படி இலங்கையின் பேரண்டப்பொருளாதார நிலைவரம் குறித்து விளக்கமளிப்பதுடன் சர்வதேச நாணய நிதிய உதவிச்செயற்திட்டத்தின் முக்கிய கூறுகள் மற்றும் குறிக்கோள்கள் பற்றியும், கடன்கொடுநர்கள் விவகாரத்தில் முன்னெக்கப்படவேண்டிய அடுத்தகட்ட நடவடிக்கைகள் தொடர்பிலும் நாம் மெய்நிகர் முறைமையின் ஊடாக முதலீட்டாளர்களுக்குத் தெளிவுபடுத்தினோம்.

இலங்கை அரசாங்கம் செயற்திறன்மிக்க மறுசீரமைப்புச்செயன்முறையில் கால்பதித்திருப்பதுடன் சர்வதேச நாணய நிதியத்தின் நிதியளிப்பினைப் பெற்றுக்கொள்வதற்கு அவசியமான முன்கூட்டிய நடவடிக்கைகள் அனைத்தையும் வெற்றிகரமாக நிறைவு செய்துள்ளது.

சர்வதேச நாணய நிதிய உதவிச்செயற்திட்டத்தின் பிரகாரம் வரிசார் மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல், பொதுப்படுகடன்களின் நிலையான தன்மையை உறுதி செய்தல், விலையுறுதிப்பாட்டை மீள நிலைநாட்டல், வெளிநாட்டுக்கையிருப்பை மீளக்கட்டியெழுப்பல், ஊழல்மோசடிகளின் விளைவாக ஏற்படும் பாதிப்புக்களைக் குறைத்தல், நிதியியல் முறைமை உறுதிப்பாட்டைப் பாதுகாத்தல், பொருளாதார வளர்ச்சியை ஊக்குவிப்பதற்கு அவசியமான மறுசீரமைப்புக்களை மேற்கொள்ளல் போன்றவற்றை முழுமையாக அடைந்துகொள்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

நாட்டு மக்களே அரசாங்கத்தின் முன்னுரிமைக்குரிய தரப்பினர் என்பதுடன் சர்வதேச நாணய நிதிய உதவிச்செயற்திட்டத்தின் விளைவாகப் பாதிக்கப்படக்கூடிய சமூகப் பிரிவினரைப் பாதுகாப்பதற்குரிய நடவடிக்கைகளை முன்னெடுப்பதிலும் விசேட அவதானம் செலுத்தியுள்ளோம்-என்று குறிப்பிடப்பட்டுள்ளது. (அ)

## சங்கிலியன் பூங்காவில் ஞாயிறு வாராந்த சந்தை

யாழ்ப்பாணம், ஏப். 02

யாழ். மாவட்ட உற்பத்திப் பொருட்களுக்கான வாராந்த சந்தை மாவட்ட செயலகத்தின் ஏற்பாட்டில் இன்று ஞாயிற்றுக்கிழமை நடைபெறவுள்ளது.

முயற்சியாளர்களின் உற்பத்தி பொருட்களுக்கான சந்தை வாய்ப்பளிக்கும்முகமாக சங்கிலியன் பூங்கா வளாகத்தில் நடைபெறும் இந்த வாராந்த சந்தை பிரதி ஞாயிற்றுக்கிழமை தோறும் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்த வாராந்த சந்தையில், யாழ் மாவட்ட விவசாயத் துறை, கைத்தொழில்துறை சார் உற்பத்திப் பொருட்களை விற்பனை செய்யமுடியும். இதனூடாக உற்பத்தியாளர்களின் இடைத்தரகர்களுக்கான செலவினம் குறைக்கப்படுவதுடன் எதிர்காலத்தில் நுகர்வோர்களின் தேவைக்கேற்றவாறு உற்பத்தி நடவடிக்கைகளிலும் ஈடுபட முடியும். இதன் மூலம் விவசாயிகள் பொருளாதாரத்தில் முன்னேற்றமடைவதுடன் ஏனையவர்களுக்கும் வேலை வாய்ப்பை வழங்க முடியும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த சந்தர்ப்பத்தை பின்பற்றி பயன்பெற விரும்பும் முயற்சியாளர்கள் தமது பிரதேச செயலகத்துடன் தொடர்பு கொள்ள முடியும். அத்துடன் அலுவலக நேரத்தில் 021 221 3861, 077 884 2577 என்ற தொலைபேசி இலக்கங்களுடன் தொடர்பு கொண்டு மேலதிக விபரங்களைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. (ஐ)

## கேணல் உட்பட நான்கு பேர் அதிரடிப்படையினரால் கைது

மட்டக்களப்பு, ஏப். 02

மட்டக்களப்பு - கரடியனாறு, மாவடியோடை பகுதியில் நவீன கருவிகளை பயன்படுத்தி புதையல் தோண்ட முயற்சித்த இராணுவ லெப்ரினன்ட் கேணல் உட்பட நான்கு பேர் விசேட அதிரடிப்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மாவடியோடைப் பகுதியில் உள்ள தொல்பொருள் திணைக் களத்தினால் அடையாளப்படுத்தப்பட்டுள்ள பகுதியிலேயே இவர்கள் புதையல் தோண்ட முயற்சித்த நிலையில் விசேட அதிரடிப்படையினரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

வெலிகந்தையில் உள்ள இராணுவ முகாம் ஒன்றின் பொறுப்பதிகாரி, அவரின் கீழ் கடமையாற்றும் இரண்டு இராணுவ உத்தியோகத்தர்கள் மற்றும் தேரர் ஒருவர் உட்பட நான்குபேர் இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளனர்.

தாண்டியடி விசேட அதிரடிப் படையினருக்கு கிடைக்கப்பெற்ற தகவலின் அடிப்படையில் குறித்த குழுவினர் மடக்கிப்பிடிக்கப் பட்டுள்ளதுடன் அவர்கள் பயன்படுத்திய இராணுவத்துக்குரிய வாகனமும் கைப்பற்றப்பட்டுள் ளதுடன், அவர்கள் புதையல் கண்டறிவதற்காக பயன்படுத்து வதற்கு கொண்டுவந்த நவீன கருவிகளும் மீட்கப்பட்டுள்ளதாக விசேட அதிரடிப்படையினர் தெரிவித்தனர். கைது செய்யப்பட்டவர்களும் கைப்பற்றப்பட்ட பொருட்களும் கரடினாறு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டன. (அ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 02.04.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.